# இந்து ஒளி

# HINDU OLI





தீபம் - 10

சுடர் - 04

## பத்தாண்டு நிறைவு சிறப்பிதழ்

அகில இலங்கை இந்து மாமன்றம்

காலாண்டிதழ்

Quarterly of
All Ceylon Hindu Congress

# அமரர் வே. பாலசுப்பிரமணியம் நினைவுப் பேருரை நிகழ்வு (16.07.2006)



மாமன்றத்தில் பூசை வழிபாடு நடைபெறுகிறது.



வைபவத்தின் ஆரம்பமாக இறைவணக்கம். (இடமிருந்து வலமாக)
மாமன்றப் பொதுச் செயலாளர் திரு. கந்தையா நீலகண்டன்,
நிகழ்வுக்கு தலைமை வகித்த பிரதித் தலைவர்
திரு.மா.தவயோகராஜா,நினைவுப் பேருரையாற்றிய பேராசிரியர்
அ.சண்முகதாஸ்,திருமதி.சாந்தி பாலசுப்பிரமணியம்.




பேராசிரியர் அ.சண்முகதாஸ்
நினைவுப் பேருரையாற்றுகிறார்.



அமரர் வே. பாலசுப்பிரமணியம் அவர்களது
உருவப் படத்திற்கு பிரதித் தலைவர்
திரு. மா. தவயோகராஜா
மலர்மாலை அணிவிக்கிறார்.



இந்து ஒளி அமரர் வே. பாலசுப்பிரமணியம்
நினைவுச் சிறப்பிதழ் பிரதியை பேராசிரியர்
அ. சண்முகதாஸ், திருமதி சாந்தி
பாலசுப்பிரமணியம் அவர்களுக்கு வழங்குகிறார்.



நிகழ்வுக்கு வருகை தந்தவர்களுள் ஒரு பகுதியினர்.

உ
சிவமயம்

# பஞ்சபுராணங்கள்

– திருச்சிற்றம்பலம் –

## தேவாரம்

எடுத்தவன் தருக்கை யிழித்தவர் விரலா
லேத்திட வாத்தமாம் பேறு
தொடுத்தவர் செல்வந் தோன்றிய பிறப்பு
மிறப்பறி யாதவர் வேள்வி
தடுத்தவர் வனப்பால் வைத்ததோர் கருணை
தன்னருட் பெருமையும் வாழ்வும்
கொடுத்தவர் விரும்பும் பெரும்புக ழாளர்
கோணமா மலையமர்ந் தாரே.

## திருவாசகம்

எங்கள் நாயகனே என்னுயிர்த் தலைவா
ஏலவார் குழலிமா ரிருவர்
தங்கள் நாயகனே தக்கநற் காமன்
தனதுடல் தழலெழ விழித்த
செங்கண் நாயகனே திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அங்கணா வடியே னாதரித் தழைத்தால்
அதெந்துவே யென்றரு ளாயே!

## திருவிசைப்பா

கருவளர் மேகத் தகடுநோய் மகுடக்
கனகமா ளிகைகலந் தெங்கும்
பெருவளர் முத்தீ நான்மறைத் தொழில்சா
லெழில்மிகு பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் தெய்வப் பதிவதி நிதியம்
திரண்டசிற் றம்பலக் கூத்தா
உருவள ரின்பச் சிலம்பொலி யலம்பு
முன்னடிக் கீழதென் னுயிரே.

## திருப்பல்லாண்டு

புரந்தரன் மாலயன் பூசலிட் டோலமிட்
டின்னும் புகலரிதாய்
இரந்திரந் தழைப்பவென் னுயிராண்ட கோவினுக்
கென்செய வல்லமென்றுங்
கரந்துங் கரவாத கற்பக னாகிக்
கரையில் கருணைக்கடல்
பரந்தும் நிரந்தும் வரம்பிலாப் பாங்கற்கே
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

மதிவளர் சடைமுடி மன்று ளாரைமுன்
துதிசெயும் நாயன்மார் தூய சொன்மலர்ப்
பொதிநலன் நுகர்தரு புனிதர் பேரவை
விதிமுறை யுலகினில் விளங்கி வெல்கவே
– திருச்சிற்றம்பலம் –

உ
சிவமயம்

# இந்து ஒளி

தீபம் – 10 சுடர் – 04
விய வருடம் புரட்டாதித் திங்கள் 30ம் நாள்
16. 10. 2006

## இந்து ஒளி ஏற்றிய நாற்பது தீபச் சுடர்கள்

இந்நாட்டு இந்து மன்றங்களினதும் இந்து அறக் கட்டளைகளினதும் ஒன்றியமாக - இந்த நாட்டு இந்து மக்களின் உச்ச நிறுவனமாக ஐம்பது ஆண்டுகளுக்கு முன் நிறுவப்பட்டது எமது மாமன்றம். பல நூற்றாண்டுகள் வரலாற்றுடன் இந்த நாட்டில் இந்து மக்கள் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். எனினும் இந்து மக்களின் குரலாக - அவர்களையெல்லாம் அரவணைத்து வழிகாட்டி நிற்கும் மையமாக ஓர் அமைப்பு இல்லையே என்ற குறையை நிவர்த்தி செய்ய ஆரம்பிக்கப்பட்டது எமது நிறுவனம். ஆனால் மாமன்றத்தின் ஐந்து தசாப்தங்கள் நிறைந்த காலகட்டத்தில் மாமன்றம் சாதித்தவை போதாது; ஆற்றிய பணிகள் காணாது. இதை நாம் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

எமக்கு நீண்ட காலக் குத்தகை அடிப்படையில் அரசு தந்த காணியில் கொழும்பில் தலைமையகம் அமைக்கவே நீண்ட தாமதம். எனினும் மாமன்ற வரலாற்றில் 1990ம் ஆண்டு ஒரு திருப்பம். துணிவுடன் அன்றைய தலைவர் திரு. வே. பாலசுப்பிரமணியம் தலைமையில் தலைமையக கட்டிட வேலைகள் ஆரம்பமாகி - அவர் இடையில் மறைந்து விட்டாலும் வேலைகளைத் தொடர்ந்து 1996 இல் தலைமையகப் பூர்த்தி கண்டோம்; வரலாறு படைத்தோம்!

தலைமையகப் பூர்த்தியுடன் மாமன்றம் இரண்டு முக்கிய முடிவுகளை எடுத்திருந்தது. ஒன்று, மாமன்றக் காலாண்டிதழ் ஒன்று வெளியிட வேண்டும். இரண்டாவது, மாமன்றம் மக்கள் பணியில் ஈடுபட வேண்டும். இரண்டு முடிவுகளையும் எம்மாலான மட்டும் நிறைவேற்றி வந்திருக்கிறோம். கடந்த இரு தசாப்தங்களில் இந்த நாட்டில் எமது மக்கள் அனுபவித்து வரும் இன்னல்கள் சொல்லொண்ணாதவை. சொந்த நாட்டில் அகதிகளாக வாழும் அவல நிலை; உற்றாரையும் உறவினரையும் இழந்து தவிக்கும் பரிதாப நிலை; நாளை விடிய நித்திரையிலிருந்து எழும்பும்போது என்ன அனர்த்தம் நடக்குமோ என்ற ஏக்கத்துடன் நிம்மதியற்ற வாழ்வு; சொந்த இல்லங்களை விட்டு முகாம்களில் பரிதவிக்கும் நிலை; எமது இளம் சிறார்களின் கல்வி சீர்குலைந்திருக்கும் துர்ப்பாக்கிய நிலை... இப்படி பல பல தொல்லைகள். இந்த நிலையில் எமது மக்களின் கண்ணீரை ஓரளவுக்காவது துடைக்க முயற்சித்திருக்கிறோம். எமது மாமன்றத் தலைவர் திரு. வி. கயிலாசபிள்ளை மனிதநேய நிதியம் அமைத்து மக்கள் பணிக்கு புத்துயிர் கொடுத்து வருகிறார்.

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

# இந்தச் சுடரில் .........


1. பஞ்சபுராணங்கள்.

4. ஆசிச் செய்திகள்.

6. வாழ்த்துச் செய்திகள்.

9. இந்து சமயப் பண்பாட்டில் தமிழ்ப் புராணம் பற்றிய அறிமுகம்.

15. தாய்மையைப் போற்றும் நவராத்திரி.

17. பவளவிழா காணும் இராமகிருஷ்ண மிஷன்.

18. நானிலம் எங்கும் நந்திக்கொடி.

20. மதுரைக்கு அரசி அன்னை மீனாட்சி அம்பாள்.

22. நற்சிந்தனைகள் வாழ்வை வளப்படுத்தும்.

23. இன்றைய மனிதர்களிடையே அருகிவரும் மனித விழுமியப் பண்புகள்.

25. அறிவில்லாத அன்பு.

26. திருநாளைப்போவார் நாயனார்.

28. சுப கருமங்களை இறை வழிபாட்டுடன் தொடங்க வேண்டும்.

29. உலையிலே ஊதி உலகக் கனல் வளர்ப்பாள்.

32. தாய்த் தெய்வ வழிபாடு.

34. நால்வர் காட்டிய அன்புநெறி.

36. கந்தவேளின் கருணையும் கந்தசஷ்டி விரதமும்.

38. வாழ்த்துச் செய்திகள்.

45. பத்தாண்டு வளர்ச்சியில் இந்து ஒளி.

46. வாழ்த்துச் செய்திகள்.


**அடுத்த சுடர்**

விய வருடம்
ஐப்பசி – மார்கழி

## வாழ்த்து

கரிமுகன் கழல்கள் வாழ்க கந்தவேள் கருணை வாழ்க
அரியயன் காணொனாத அரனடி நீடு வாழ்க
விரிசடைப் பெருமானார் தம் அடியவர் எல்லாம் வாழ்க
பரிதிசூழ் பாடும் விண்ணும் பொலிவுடன் நீடுவாழ்க !


# இந்து ஒளி

அகில இலங்கை இந்து மாமன்றத்தின்
விய வருடம் ஆடி – புரட்டாதி இதழ்
புரட்டாதித் திங்கள் 30ம் நாள்
16.10.2006



ஆசிரியர் குழு :
பேராசிரியர் அ. சண்முகதாஸ்
திரு. கந்தையா நீலகண்டன்
திரு. க. இராஜபுவனீஸ்வரன்
திரு. த. மனோகரன்
திரு. கு. பார்த்தீபன்



| | | |
|---|---|---|
| ஒரு பிரதியின் விலை | ரூபா | 20.00 |
| வருடாந்தச் சந்தா [உள்நாடு] | ரூபா | 80.00 |
| வருடாந்தச் சந்தா [வெளிநாடு] | US டொலர் | 10.00 |



அகில இலங்கை இந்து மாமன்றம்
A.C.H.C. கட்டிடம்
91/5, சேர் சிற்றம்பலம் ஏ. காடினர் மாவத்தை, கொழும்பு – 2, இலங்கை.
இணையத்தளம் : http:/www.hinducongress.org
மின்னஞ்சல் : admin@hinducongress.org
தொலைபேசி எண் : 2434990, தொலைநகல் : 2344720



இந்து ஒளியில் வெளியிடப்பட்டுள்ள கட்டுரைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் ஆக்கியோன்களுடையதே.



# HINDU OLI

Aadi - Puraddathy
**ALL CEYLON HINDU CONGRESS**
16th October 2006



**Editorial Board :**
Prof. A. Shanmugadas
Mr. Kandiah Neelakandan
Mr. K. Rajapuvaneeswaran
Mr. D. Manoharan
Mr. G. Partheepan



| | | | |
|---|---|---|---|
| Price : | Rs. | 20.00 | per copy |
| Annual Subscription (Inland) | Rs. | 80.00 | |
| Annual Subscription (Foregin) | U. S. $ | 10.00 | |
| (Including Postage) | | | |



**ALL CEYLON HINDU CONGRESS**
**A.C.H.C. Bldg.**
91/5, Sir Chittampalam A. Gardiner Mawatha
Colombo - 2, Sri Lanka.
Website : http://www.hinducongress,org
E-Mail : admin@hinducongress.org
Telephone No.: 2434990, Fax No.: 2344720


Next Issue :
**Aipasi - Markazhi**


**Views expressed in the articles in Hindu Oli are those of the contributors.**

## இந்து ஒளி ஏற்றிய நாற்பது தீபச் சுடர்கள் (1ம் பக்கத் தொடர்ச்சி)

பொன்விழாக் காணும் தருணத்தில் நாடளாவிய ரீதியில் மாநாடுகள் நடத்தி பல பணிகள் செய்யத் திட்டமிட்டோம். நாட்டு நிலைமை குறுக்கே நின்று குழப்பி வைத்திருக்கிறது. எமது பொன்விழா மலர் வெளியீடு கூட அதன் காரணமாகத் தாமதித்து விட்டது.

இக்காலப்பரப்பில் கடந்த ஒரு தசாப்தத்தில் ஒழுங்காக, ஒவ்வொரு காலாண்டும் "இந்து ஒளி"யை வெளியிட்டு வைத்திருக்கிறோம். நினைத்துப் பார்க்க நிம்மதி. காலாண்டிதழ் வெளியிடத் தீர்மானித்தோம்; இதழுக்கு என்ன பெயர்? - குழு அமைத்து ஆலோசித்தோம்; பல கருத்துக்கள் - எமது பிரதித் தலைவர் திரு. மா. தவயோகராஜா "இந்து ஒளி" எனும் பெயரைச் சூட்ட வேண்டும் என வலியுறுத்தினார். அவரின் கருத்தே இறுதியாக ஒலித்தது. அதுவே முகாமைப் பேரவையின் முடிவாகியது.

பத்தாண்டுகளில் நாற்பது தீபச் சுடர்களை ஏற்றிய "இந்து ஒளி", அந்த பத்தாண்டு காலத்திலும் ஒழுங்காக ஆத்மீக ஒளி பரப்பி வந்திருக்கிறது. மாமன்றத்தின் பணிகளை எடுத்தியம்புவதுடன், இந்து மக்களுக்கு - குறிப்பாக இந்து நாகரிகம் படிக்கும் க.பொ.த உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு உதவும் பல அரிய கட்டுரைகளையும் தாங்கி வெளிவந்து கொண்டிருக்கிறது. சோதனைகளும் வேதனைகளும் மிக்க ஒரு காலகட்டமாக இந்த பத்து ஆண்டுகள் - நாற்பது காலாண்டுகளும் இருந்து விட்டாலும் "இந்து ஒளி" சஞ்சிகை தடங்கலின்றி வெளிவருவதற்கு காரணமாக இருந்தவர்கள் பலர். அவர்கள் செய்த தியாகங்கள் ஏராளமானவை.

இந்த நாட்டு இந்து மக்களுக்கு எத்தனையோ பணிகளை - சேவைகளைச் செய்ய வேண்டியிருக்கிறது. அதனை ஆற்றுவதற்கு போதுமானவர்கள் இல்லை. ஒரு சிலர் செய்கின்ற தியாக உணர்வுமிக்க சேவையால்தான் இன்றும் எமது மதம் தலைநிமிர்ந்து நிற்கிறது. அந்த அணியில் "இந்து ஒளி"யின் நாற்பது இதழ்களை படைத்துத்தந்த சகலரையும் நாங்கள் போற்றுகிறோம்; ஆண்டவன் அருள் அவர்களுக்கு தொடர்ந்தும் கிட்டப் பிரார்த்திக்கிறோம்.

"இந்து ஒளி" வெளியீட்டில் கடந்த பத்து ஆண்டுகளும் ஈடுபாடு கொண்டிருந்தவன் என்ற உரிமையில் மூவரை நான் தனியே இனம்கண்டு மனதாரப் பாராட்டுகிறேன்.

முதலாவதாக எமது மாமன்ற தகவல் அலுவலர் திரு. அ. கனகசூரியர். ஊரெழு கனகசூரியர் என்று மாணவப் பருவத்திலிருந்தே எழுத்தார்வம் மிக்க இளைஞராக வளர்ந்து வந்த திரு. கனகசூரியரை மாமன்றப் பணிக்கு நேர்முகம் கண்ட போது முதல் முறையாக சந்தித்தேன். அதற்கு முன் அவரின் பெயரை பத்திரிகைகள், வானொலி நிகழ்ச்சிகளில் கேட்டு இருக்கிறேன். அவரை மாமன்ற சேவையில் இணைக்கத் தீர்மானித்ததற்கே முக்கிய காரணம் "இந்து ஒளி" வெளியீட்டில் அவரது சேவையை பயன்படுத்தவே. எதிர்பார்த்ததற்கும் மேலாக அவர் எங்களுக்கு திருப்தி தந்து பணியாற்றி வந்திருக்கிறார்.

"இந்து ஒளி" காலாண்டிதழை தனது சொந்தப் பிள்ளையாகக் கருதி அக்கறையுடன் வளர்த்து வந்த பெருமை அவருக்கே உண்டு. திரு. கனகசூரியர் இல்லாது "இந்து ஒளி" ஒழுங்காக வந்திருக்குமா? - துணிந்து 'ஆம்' எனப் பதில் தரும் தெம்பு இல்லை. அவர் கண்பார்வை பாதிக்கப்பட்டிருந்த போதிலும் "இந்து ஒளி"யின் பார்வையை மங்காது போற்றிக் காத்த பெருமைக்குரியவர். அவர், பின்னணியில் இருந்து அமைதியாக செய்த சேவை மகத்தானது. "இந்து ஒளி" பத்தாண்டு நிறைவு காண்கிறது என்றால் அது திரு. கனகசூரியரின் சேவைக்கு மகுடம். அவர் தொடர்ந்தும் மாமன்றத்திற்கும் "இந்து ஒளி"க்கும் தனது சேவையை ஆற்ற ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமான் அருள்வாராக.

அடுத்த இருவர் - நான் மனம் திறந்து பாராட்ட வேண்டியவர்கள். மாமன்ற கல்விக் குழுச் செயலாளரும், மாமன்ற உபதலைவருமான திரு. த. மனோகரன் "இந்து ஒளி"யில் வெளியிட பல ஆக்கபூர்வமான கட்டுரைகளை சேகரித்துத் தருவதில் பெரும் பணியாற்றியவர். யுனி ஆர்ட்ஸ் நிறுவன அதிபர் திரு. பொன். விமலேந்திரனும், அவரது நிறுவனத்தினரும் "இந்து ஒளி"யின் அமைப்பில் அக்கறை காட்டியதுடன் மட்டுமல்லாமல், பல நெருக்கடியான காலகட்டங்களிலும் "இந்து ஒளி"யை பிரகாசிக்க வைத்த பெருமைக்குரியவர்கள்.

"இந்து ஒளி"க்கு ஆசி கூறி ஊக்குவித்து வரும் பெரியார்களுக்கும், இதற்கான ஆக்கங்களை தந்துதவி வரும் பெருமக்களுக்கும், இந்து ஒளியின் வெளியீட்டில் பல உதவிகள் செய்திருக்கும் சகலருக்கும் - பத்தாண்டு வளர்ச்சி பற்றி திரு. கனகசூரியர் தரும் நினைவலைகளையும் மீட்டிப் பார்த்து - மாமன்றத்தின் சார்பில் நன்றி கூறி ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானின் அருளை வேண்டி நிற்கிறேன்.

**மாமன்றப் பணியில்,**
**கந்தையா நீலகண்டன்,**
பொதுச் செயலாளரும், வெளியீடுகள் குழுச் செயலாளரும்



'இந்து ஒளி'யின் வெளியீட்டுப் பணியில் பின்னணியில் நின்று உழைத்துவரும் அன்பர் திரு. அ. கனகசூரியர்



## நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்
## முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களது
## ஆசிச் செய்தி

அகில இலங்கை இந்து மாமன்றம் வெளியிடும் "இந்து ஒளி" சஞ்சிகைக்கு அகவை பத்து பூர்த்தியாவதை அறிந்து மிகுந்த ஆனந்தமடைகிறோம். எம் மண்ணில் இந்து மதத்தை பாதுகாக்கும் மாபெரும் நிறுவனமாக விளங்கும் இந்து மாமன்றத்தின் குரலாக வெளிவரும் "இந்து ஒளி" சமய வளர்ச்சிக்கு மகத்தான பங்களிப்பை வழங்கியுள்ளது. காலத்துக்குக் காலம் இந்து மதம் சார்ந்த விழாக்களின் கருத்துக்களை வெளிப்படுத்துகின்ற கட்டுரைகளையும், ஆத்ம ஞானத்தை உணர்த்துகின்ற ஆன்மீகக் கட்டுரைகளையும் தவறாது வெளிப்படுத்திய இச் சஞ்சிகை பத்தாவது ஆண்டு நிறைவில் தன் பணியில் மேலும் பிரகாசிக்க இறைவனை வேண்டுகிறோம்.

"இந்து ஒளி" இருட்டிலிருந்து வெளியே நம்மைக் கொண்டு வருவதற்கு ஆன்ம தத்துவ உணர்வுகளை ஊட்டி வருவது பாராட்டுக்குரியது. பல சமய சஞ்சிகைகள் காலத்துக்குக் காலம் தோற்றம் பெற்று பின்னர் மறைந்து போய்விட்டன. ஆனால், "இந்து ஒளி" என்றும் அணையாமல் பிரகாசிக்க வேண்டும் என்பது எங்கள் பேரவா. இந்து மாமன்றத்தின் சிறந்த நிர்வாகக் கட்டமைப்பினால் மன்றப் பணிகளும் "இந்து ஒளி" சஞ்சிகையும் பெரும் முன்னேற்றம் கண்டுள்ளது.

"இந்து ஒளி" சஞ்சிகையை சீராக வெளியிடுவதற்கு அதன் ஆசிரியர் குழாம் அரிய பணியாற்றி வருவது கண்கூடு. எந்த விதமான தேவையற்ற விடயங்களையும் இச் சஞ்சிகை பிரசுரிக்காமல், மிகவும் பக்குவமாக கடந்த பத்து ஆண்டுகள் வெளிவருவதற்கு உழைத்த வெளியீட்டுக் குழுவினரை மனதார வாழ்த்துகிறோம். எல்லாம் வல்ல எம்பெருமான் பேரருளால் இந்து மாமன்றப் பணிகள் மென்மேலும் ஓங்கி வளர ஆசி கூறி அமைகிறோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு



## கொழும்பு இராமகிருஷ்ண மிஷன்
## சுவாமி ஆத்மகனானந்தா மகராஜ் அவர்களது
## ஆசிச் செய்தி

அகில இலங்கை இந்து மாமன்றம் வெளியிட்டுவரும் 'இந்து ஒளி' காலாண்டு சஞ்சிகையின் நாற்பதாவது வெளியீடு, இச் சஞ்சிகையின் பத்தாண்டு நிறைவு சிறப்பு மலராக அமைய உள்ளதை அறிந்து, இச் சஞ்சிகையின் ஆசிரியர் குழுவினர்க்கு எங்கள் பாராட்டுக்களையும், நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

தினந்தோறும் வேதம் அல்லது ஏதேனும் சமய நூலை ஓதுதல் என்பது ஒரு இந்துவின் முக்கிய தினசரிக் கடமையாக வகுக்கப்பட்டுள்ளது. 'ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்' என்னும் ஔவையின் முதுமொழியும், 'ஸ்வாத்யாயாத் மா ப்ரமத;' என்னும் வேதமொழியும், மேற்கூறிய கடமையை நினைவுபடுத்துகின்றன. ஆனால் இன்றைய வாழ்க்கைமுறையில் இதற்கு இடமில்லாமல் போய்விட்டிருப்பது மிகவும் வருந்தத்தக்க விடயமே. இந்தக் குறையை ஓரளவேனும் நிறைவு செய்வதே சமய சஞ்சிகைகளின் பணியாகும். சமய அறிவை வளர்த்தெடுக்கவும், உயர்ந்த சிந்தனைகளை வழங்கி அதன் வாயிலாக மனதிற்கு வலுவூட்டவும் சமய சஞ்சிகைகள் உதவுகின்றன. மனதை பலவீனப்படுத்தும் சூழலை உருவாக்குவதற்கான காரணிகள் மலிந்துவிட்டிருக்கக்கூடிய இன்றைய சமுதாயத்தில், 'இந்து ஒளி' போன்ற சமய சஞ்சிகைகள், மக்களின் மனதைக் காக்கும் அரணாக விளங்கும் எனலாம். இச் சஞ்சிகைகளை ஆதரித்தல் அவர்களுக்கு மிகவும் நன்மை பயக்கும் செயலாகும்.

'இந்து ஒளி' ஒவ்வொரு இல்லத்திலும் ஞான ஒளியேற்ற இறையருள் துணை நிற்கப் பிரார்த்திக்கிறோம்.



## கொழும்பு, கப்பித்தாவத்தை ஸ்ரீ பால செல்வ விநாயக மூர்த்தி கோவில்
## பிரதம குரு சிவாகம திலகம் பிரம்மஸ்ரீ பா. சண்முகரத்தின சர்மா அவர்களது
## ஆசிச் செய்தி

அகில இலங்கை இந்து மாமன்றம் வெளியிடும் "இந்து ஒளி"யின் பத்தாண்டு நிறைவினையிட்டு எனது மனப்பூர்வமான ஆசியும் வாழ்த்துக்களும் உரித்தாகுக. எம்நாட்டு மக்களுக்கும், எமது சமூகத்துக்கும் மட்டுமல்ல உலகத்தின் பல பாகங்களிலும் வாழ்ந்து வரும் இந்துக்களும் கூட நல்ல பயனைப் பெறும் வகையில் "இந்து ஒளி" வெளிவருவது பெருமைக்குரியது. இன்னும் பல நல்ல விடயங்களை தன்னகத்தே கொண்டு சகல இந்து மக்களும் பயனடையும் வகையில் "இந்து ஒளி" தொடர்ந்து வரும் ஆண்டுகளிலும் மலர்ந்து, மென்மேலும் சிறப்பாக வளர வேண்டும் என எல்லாம்வல்ல சிவகாமி அம்பாள் சமேத சிதம்பரேஸ்வரர் பாதகமலங்களை வணங்கி என் ஆசியையும் வழங்குகின்றேன்.



## கொழும்பு ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தானம்
## பிரதம குரு சிவஸ்ரீ வை. பாலசுந்தரக்குருக்கள் அவர்களது
## ஆசிச் செய்தி

அகில இலங்கை இந்து மாமன்றம் ஆற்றுகின்ற அரும் பணிகள் பலவாகும். இலங்கையில் இந்து சமய வளர்ச்சிப் பாதையில் பல மைற்கற்களாக மாமன்றத்தின் நற்பணிகள் மிளிர்கின்றமை போற்றுவதற்குரியதாகும். சமூக நல சேவை களிலும் மாமன்றத்தினர் கொண்டுள்ள ஆர்வமும் ஈடுபாடும் எல்லை கடந்த பாராட்டுக்குரியவை.

மாமன்றத்தின் மற்றுமொரு பணியாக மலர்ந்து பத்தாண்டுகள் நிறைவெய்தும் "இந்து ஒளி" சஞ்சிகை சமயத்துறையில் ஒளி விளக்காகும். பலரும் பயன்படத்தக்க பல்வேறு ஆக்கங்களைத் தந்து இந்துக்களின் உள்ளங்களில் நின்று நிலைக்கின்றது. எதிர்காலத்திலும் 'இந்து ஒளி' மேலும் பல காத்திரமான விடயங்களுடன் சிறுவர் முதல் பெரியோர் வரையிலான இந்து மக்கள் அனைவருக்கும் அறிவூட்டி, ஒளிபெருக்கி, நல்வாழ்வுக்கு வழிகாட்டி துணை நிற்கவேண்டும்.

மாமன்றத்தினருக்கும், அவர்களின் சிறப்பாக்கமான "இந்து ஒளி"க்கும் மென்மேலும் தெய்வ ஆசி கிடைக்க வேண்டும் என எல்லாம் வல்ல சிவகாம சௌந்தரி அம்பாள் சமேத ஸ்ரீ சுவர்ண சபேஸ்வரப் பெருமான் அருள்வேண்டி பிரார்த்திக்கின்றோம்.

## சிலாபம் ஸ்ரீ முன்னேஸ்வரம் தேவஸ்தானம்
## பிரதம குருவும் தர்மகத்தாவுமான சிவஸ்ரீ சா. இரத்தினகைலாசநாதக் குருக்கள் அவர்களது
## ஆசிச் செய்தி

சிவபூமி எனச் சிறப்பிக்கப்படும் இலங்கைத் திருநாட்டின் தலைநகரமான கொழும்பு மாநகரில் இந்து சமயம் தழைத்தோங்க வேண்டும் எனும் நோக்கோடு ஆரம்பிக்கப்பட்ட அகில இலங்கை இந்து மாமன்றம் இந்து சமயம் எதிர்நோக்குகின்ற சவால்களுக்கு முகங்கொடுத்து சளைக்காது பணியாற்றிவரும் பெருமை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும். சமயப் பணியுடன் நின்றுவிடாது மக்கள் சேவையே மகேசன் சேவையாக சமூகப் பணிகளையும் நாடளாவியரீதியில் ஆற்றிவரும் மாமன்றத்தின் சேவைகளை ஆவணமாக, காலாண்டிதழாக மலரும் 'இந்து ஒளி' அனைவருக்கும் பறைசாற்றுகின்றது. இதன் பத்தாண்டு நிறைவு மகிழ்ச்சிக்குரியது.

தொடர்ச்சியான சேவையின் சிகரமாக பொன்விழாக் காணும் இந்து மாமன்றத்தினர் பொன்விழா மலர் ஒன்றினை வெளியிடுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைவதோடு; நற்சிந்தனைகளை ஆவணமாக - தொடர்ந்து வரும் இளம் சமூகத்திற்கு அளிக்கும் கைமாறுதலாகவும், இந்து சமயம் பற்றிய பரந்து விரிந்து கிடக்கும் அரிய பல விடயங்களை தெளிவுபடுத்தும் தன்மையிலும் இம்மலர் அமைவது குறிப்பிடத்தக்கது.

காலத்திற்கு காலம் - காலத்தின் தேவை கருதி அகில இலங்கை இந்து மாமன்றம் ஆற்றிவரும் சேவைகள் நிலைபெறவும், மென்மேலும் வளர்ச்சி பெறவும் ஸ்ரீ வடிவாம்பிகை சமேத ஸ்ரீ முன்னநாதப் பெருமானை வணங்கி ஆசீர்வதிக்கின்றோம்.



## தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
## தெய்வத்திருமகள் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களது
## வாழ்த்துச் செய்தி

கொழும்பு மாநகரில் அரும்பணி ஆற்றிவரும் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பெருமையை எமது நாடு நன்கு அறியும். பொன்விழாக் கண்ட பெருமை அகில இலங்கை இந்து மாமன்றத்துக்கு குறிப்பிடத்தக்க சிறப்பாகும். தமிழ்ப் பண்பாட்டையும் சைவத்தின் மேன்மையையும் சமூக மேம்பாடுகளையும் வளர்த்து வரும் சிறப்பு இம்மன்றத்துக்கு உண்டு. ஆதரவற்ற சிறார்களுக்கு கல்வியூட்டி ஆளாக்கும் பெரும் பணியை இம்மன்றம் கொழும்பு மாநகரில் ஆற்றி வருவதை அனைவரும் அறிவர். எங்கும் எதிலும் சேவை மனப்பான்மையே மன்றத்தின் குறிக்கோளாகும். இம்மன்றத்தின் அரிய பணிகளில் ஒன்றாகக் குறிப்பிடத்தக்கது "இந்து ஒளி" என்ற காலாண்டு சஞ்சிகையின் வெளியீடாகும்.

திருமுறைகளையும் திருத்தொண்டர்களையும் நன்கு விளக்கிக் காட்டுவது இந்து ஒளியாகும். இம் மண்ணில் எமது சமய வாழ்வுக்கு நன்னெறி காட்டிச் சென்ற சான்றோர்களையும் இந்து ஒளியின் மூலம் நாம் அறிய முடிகிறது. மேலும் விரதங்களின் மகிமையும் எம்மால் அறியமுடிகிறது. சித்திரை தொடக்கம் பங்குனி ஈறாக அமைந்த பன்னிரண்டு மாதங்களிலும் சைவமக்கள் குறிப்பிட்டு மேற்கொள்ள வேண்டிய விரத அனுட்டானங்களும் அவற்றை அனுட்டிக்கும் ஒழுங்கு முறைகளும் சிறப்பாக அறிந்திருக்க வேண்டியவையாகும். இவற்றையெல்லாம் உள்ளடக்கி பயனுள்ள சமயப் பாதையில் நாம் அனைவரும் வாழுவதற்கு வழிகாட்டும் இந்து ஒளியின் பத்தாவது ஆண்டின் நிறைவை நாம் வரவேற்போம்.




## அகில இலங்கை இந்து மாமன்றம் தலைவர் திரு. வி. கயிலாசபிள்ளை அவர்களது வாழ்த்துச் செய்தி

இலங்கை இந்து மன்ற அமைப்புகளினதும், ஆலய நம்பிக்கை பொறுப்புகளினதும் கூட்டமைப்பாக இயங்குவதுடன், சமயப்பணி மட்டுமல்ல, சமூக நலன் மற்றும் கல்விப் பணிகளையும் நாடளாவிய ரீதியில் விஸ்தரித்து செயற்பட்டுவரும் அகில இலங்கை இந்து மாமன்றம் பொன்விழா கண்டுள்ள இவ்வேளையில், மாமன்றத்தின் காலாண்டிதழான "இந்து ஒளி" ஒரு தசாப்த காலத்தை நிறைவு செய்துகொள்ளுவது பெருமைக்கும் பெருமகிழ்ச்சிக்கும் உரியது.

மாமன்றப் பணிகள் சிறப்பாக வளர்ந்துவரும் இவ்வேளையில், மாமன்ற வெளியீடான "இந்து ஒளி" சஞ்சிகைக்கு இந்து மக்கள் மத்தியிலிருந்து கிடைத்த பேரபிமானமும் பேராதரவும் கடந்த பத்து வருட காலத்தில், அதன் சிறப்பான வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் துணையாக இருந்திருப்பதை நன்றியுடன் சொல்ல வேண்டும்.

பத்து வருட காலம் என்பது ஒரு நீண்ட பாதை. இந்தப் பாதையில், காலந்தவறாது – கிரமமாக வெளிவந்து சிறுவர்கள், மாணவர்கள், வளர்ந்தோர் உட்பட இந்துப் பெருமக்கள் அனைவருக்கும் வழிகாட்டும் ஒளிவிளக்காக "இந்து ஒளி" திகழ்ந்து வந்துள்ளது என்பது பலராலும் போற்றப்படும் மறுக்க முடியாத உண்மையாகும்.

கடந்த காலங்களைப் போலவே, எதிர்காலத்திலும் "இந்து ஒளி"யின் வளர்ச்சிக்கு இந்துப் பெருமக்கள் அனைவரினதும் ஆதரவு தொடர்ந்தும் கிடைக்க வேண்டும் என்பதுடன், சஞ்சிகையின் சிறப்புக்கும் வெற்றிக்கும் இறைவனைப் பிரார்த்திப்போமாக.



## ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் திரு. க. வி. விக்னேஸ்வரன் அவர்களது வாழ்த்துச் செய்தி

1996ம் ஆண்டு நவெம்பர் மாதம் 24ந் திகதி பிறந்த 'இந்து ஒளி' இவ்வருடம் பத்தாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறது. கார்த்திகைக் குமரனின் திருவவதார தினமே 'இந்து ஒளி'யின் அவதார தினமாகும். அதனால்தானோ என்னவோ செந்தமிழ்க் குமரன் என்றும் இளமையுடன் பிரகாசிப்பதுபோல் இந்து சமய அறிவை சதா இளமைப்பூரிப்புடன் சுடர் விட்டுப் பரப்பிக் கொண்டிருக்கிறது "இந்து ஒளி". சமயப் பெரியார்கள், பேரறிஞர்கள், ஆன்மசீலர்கள், மாணவ மணிகள் எனப் பலரின் கட்டுரைகள் 'இந்து ஒளி'யை அலங்கரித்து வந்துள்ளன. இனியும் அலங்கரிப்பன.

இத்தருணத்தில் எமக்கு ஆக்க பூர்வமான கட்டுரைகளைத் தந்துதவிச் சென்ற காலஞ்சென்ற அமரர் திரு. ஆ. குணநாயகம் போன்றவர்களை நாம் நன்றி அறிதல்களுடன் நினைவு கூருவது சாலப் பொருந்தும். தொட்டிலில் போட்டு 'இந்து ஒளி'யைத் தாலாட்டியவர்கள் அவர்கள்.

இன்று எழுந்து நடமாடும் சின்னஞ்சிறு இளஞ்சிட்டாக வடிவமைந்துள்ள "இந்து ஒளி" காலக்கிரமத்தில் இளமை ததும்பும் பூரிப்புடைய கட்டிளங் காளையாகப் பரிணமிக்கப்போகின்றது என்பதில் எந்தவிதச் சந்தேகமும் இல்லை.

இன்று 'இந்து ஒளி'யைப் பராமரித்து வரும் அனைவரும் நீண்டகாலம் வாழ்ந்து தமது பராமரிப்புப் பணிகளைத் தொடர வாழ்த்துகின்றேன்.

அழகுடன், மெருகுடன் ஆன்ம ஒளி பரப்பி வரும் இன்றைய பத்தாவது தீபம் மேலும் மேலும் சுடர் விட்டு ஒளிர்வதாக! பல தீபங்கள் ஏற்றி மிளிர்வதாக!

– *நீதியரசர் க. வி. விக்னேஸ்வரன்*



## பல்லாண்டுகள் சேவை தொடரட்டும்

இந்து சமயத்தின் உள்ளொளியைப் பத்து ஆண்டுகளாகப் பரப்பி வரும் "இந்து ஒளி" அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பல நல்ல செயற்பாடுகளுள் ஒன்றாகும். இந்த இதழ் இந்து சமயம் தொடர்பான பல நல்ல கட்டுரைகளைத் தாங்கி வருகின்றது. இந்து சமயம் தொடர்பான பல பயனுள்ள செய்திகளைத் தந்துகொண்டிருக்கிறது. மாமன்றத்தின் பணிகளை உலகுக்கு எடுத்துக் கூறும் ஏடாகவும் இது விளங்குகின்றது.

"இந்து ஒளி" நவீன அச்சு வசதிகளைப் பயன்படுத்தி கவர்ச்சி நயப்புடையதாக அமைந்து வருகின்றது. வண்ணக்கலவை கண்ணைக் கவர்வதாக அமைகின்றது. தேவாரங்களிலும் திவ்வியப் பிரபந்தங்களிலும் எங்கள் கடவுளர்களின் திருக்கோலவழகு மிகச் சிறப்பான முறையிலே புனைந்துரைக்கப்பட்டுள்ளது. இக்கோலவழகினை "இந்து ஒளி"யின் படங்கள் நன்கு புலப்படுத்துகின்றன.

எங்கள் சமய, சமூக, பண்பாட்டு இதழாக விளங்கும் 'இந்து ஒளி' இன்னும் பல ஆண்டுகள் தன் சேவையினை ஆற்றவேண்டுமென சிவகாமி உடனுறை ஆடவல்லானை வேண்டுகிறேன்.

வாழ்க இந்து ஒளி! வளர்க அகில இலங்கை இந்து மாமன்றம்!

- பேராசிரியர் அ. சண்முகதாஸ்



## இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்
## பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் அவர்களது
## வாழ்த்துச் செய்தி

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் காலாண்டு வெளியீடான "இந்து ஒளி" சஞ்சிகையின் பத்தாண்டு நிறைவை முன்னிட்டு எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.


"இந்து ஒளி"யின் பல இதழ்களை வாசிக்க கிடைத்துள்ளது. இவை மிகவும் பயன்மிக்க கட்டுரைகளைக்கொண்டு வெளிவந்துள்ளன. குறிப்பாக இந்து நாகரீகம், இந்துசமயம் என்பவற்றைப் பாடமாகப் பயிலும் மாணவர்களுக்கு உதவத்தக்க, பாடத்திட்டத்துடன் தொடர்புடைய பல கட்டுரைகள் தொடர்ச்சியாக வெளியிடப்பட்டுள்ளன. இவ்விதழ் மூலம் மாணவர்கள் மிகவும் பயன்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். மேலும், சமய ஆர்வலர்களுக்கும், வாசகர்களுக்கும் பொதுவான பல தகவல்களையும் இவ்விதழ் உள்ளடக்கி வெளிவந்துள்ளது.

இலங்கையைப் பொறுத்தவரை கலை, கலாசார ரீதியான இதழ்களை தொடர்ச்சியாக வெளியிடுவது மிகவும் பிரயத்தனமான காரியம். அதுவும், ஆன்மீக இதழொன்றை கடந்த பத்து வருடங்களாக வெளியிட்டு வருவது போற்றற்குரிய பணி. அவ்வகையில் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் 'இந்து ஒளி' வெளியிடுவதை தொடர்ந்து மேற்கொள்வதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

'இந்து ஒளி' அவ்வப்போது சிறப்பிதழ்களையும் வெளியிட்டுள்ளது. குறிப்பாக இந்து விவகார அமைச்சு, இரண்டாவது உலக இந்து மாநாட்டை நடத்தியபோது மாநாட்டுச் சிறப்பிதழ் ஒன்றை வெளியிட்டு பெருமை சேர்த்தது.

இவ்விதழைத் தொடர்ந்து வெளியிட்டு வருகின்ற இந்து மாமன்றத்தினரைப் பாராட்டுகின்றேன். குறிப்பாக அதன் பொதுச் செயலாளர் திரு. க. நீலகண்டன், "இந்து ஒளி" ஆசிரியர் குழுவினர், மற்றும் சஞ்சிகை வெளியீட்டுடன் தொடர்புடைய அனைவருக்கும் எமது பாராட்டுக்களும் வாழ்த்துக்களும் உரியன.

"இந்து ஒளி" இன்னும் காத்திரமான கட்டுரைகளோடு தொடர்ந்தும் பல்லாண்டு வெளிவர எனது நல்லாசிகள்.



## திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபை
## தலைவர் - சித்தாந்த வித்தகர், சிவநெறிச் செல்வர் இ. நமசிவாயம் அவர்களது
## வாழ்த்துச் செய்தி

காலத்தால் அழியாத பெரும் சேவைகளை ஆற்றும் பெருமன்றமாக - வேதசிவாகம நெறிகளை உயிரினும் மேலாகக் கண்போலக் காத்துவரும் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் அளப்பரிய சேவைகளை நாடும் நாமும் நன்கறிவோம்.

ஈழம் வாழ் சைவப் பெருமக்களுக்கு அவசியமாக எது தேவையோ, அதனை அறிந்து நிறைவு செய்யும் செயற்திறனுடைய அறிஞர் குழாத்தையும், நெறியாளர்களையும் தன்னகத்தே கொண்டியங்கும் மாமன்றத்தின் செயற்பாடுகள் சொல்லிலடங்காதவை. இந்த வகையில் ஒன்றாக, காலாண்டிதழாக வெளிவரும் "இந்து ஒளி" பத்தாண்டுகளை நிறைவு செய்து கொள்ளுவது பெருமகிழ்ச்சிக்குரியது. மாமன்றத்தின் பல்துறைச் சேவைகளும், "இந்து ஒளி" சஞ்சிகையின் காத்திரமான பணியும் மேலும் சிறப்புடன் தொடர கௌரி உடனுறை திருக்கேதீச்சரநாதர் இணையடிகளை வழுத்தி வாழ்த்துவதுடன் அமைகின்றேன்.

## இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்
## உதவிப் பணிப்பாளர் அருட்கலையரசு எம். எஸ். ஸ்ரீதயாளன் அவர்களது
## வாழ்த்துச் செய்தி

வேத, ஆகமங்களாகிய வித்துக்களில் எடுத்தோதப்பெறும் பரப்பிரம்மமும் கடவுளும் ஒன்றே என்று பேசும் தெய்வீக ஞானத்தை அடி நாதமாகக் கொண்டு, சிவனாரின் சிரசிலொளிரும் இந்துவின் பிரகாசத்தை, ஞானக்கீற்றை எமக்கு தந்துகொண்டிருக்கும் ஒரு சமய சஞ்சிகைக்கு - அகில இலங்கை இந்து மாமன்றத்தின் "இந்து ஒளி"க்கு - பத்தாண்டுகள் நிறைவு பெறுவது மகிழ்ச்சிக்குரியது. காலாண்டு சஞ்சிகையாக 1996 ஆண்டிலிருந்து இன்று வரை தன் ஒளி குன்றாது விளங்கும் 'இந்து ஒளி'யின் முதற் பிரசவம் ஒரு திருக்கார்த்திகை விளக்கீட்டுத் திருநாளிலேயே நிகழ்ந்ததை அறிவேன்.

தெய்வீகமான எமது வழிபாட்டு மரபுகள், கொள்கைகள், சான்றோர் தந்த முதுசொம்கள், சமய நீதியுரைக்கும் புராண இதிகாச விழுமியங்கள் காக்கப்படவேண்டிய தேவைகள். இவற்றை உய்த்தறிந்து 'இந்து ஒளி' அன்று ஆரம்பித்த பணி பத்து ஆண்டுகள் தொடர்ந்து வளர்கிறது. சஞ்சிகைதானே என்று விடாமல் அதன் உள்ளடக்கம் கொண்டிருக்கும் நல்ல தேவையுணர்ந்த தகவல்கள், விபரங்கள், படிப்பினைகள், சமயசாரம் கூறும் விடயதானங்களை மீட்டுப் பார்ப்போம். "இந்து ஒளி"யையும், அதன் பிரகாசத்துக்கான அகில இலங்கை இந்து மாமன்றத்தின் அற்புதப் பணியையும் பாராட்டி வாழ்த்துவோம்.

## உள்ளத்தைச் செம்மைப்படுத்தும் இந்து ஒளி

அகில இலங்கை இந்து மாமன்றம் வெளியிடும் "இந்து ஒளி" என்னும் காலாண்டிதழ் பத்து ஆண்டுப் பணியினை நிறைவு செய்துள்ளது. இது வாழ்த்தப் படவேண்டியது. மனித வாழ்வியலின் தேவைகளில் இன்றியமையாதது ஆன்மீக பலமாகும். அதனைப் பெறுவதற்கு வழிகாட்டியாய் வெளிவரும் "இந்து ஒளி" உள்ளத்தைச் செம்மைப்படுத்தும் பணியினைக் கடந்த பத்து ஆண்டுகளாகச் செய்துவந்துள்ளது. அகில இலங்கை இந்து மாமன்றத்திற்கும் இந்து மக்களுக்கு மிடையே ஒரு ஊடகப் பாலமாக விளங்கிவருகின்றது. மன்றத்தின் செயற்பாடுகளையும் தொடர்பாடல்களையும் மக்கள் அறிவதற்கு வழிகாட்டியாய் நிற்கிறது. ஆன்மீக பலத்தை அனைவரும் பெற்று வாழ்க்கையை மகிழ்வாகக் கழிக்க வேண்டும் என்பதே "இந்து ஒளி"யின் இலக்கு. அந்த இலக்கை நாம் அனைவரும் அடைய இறைவழிபாடே உறுதுணையாகும். இந்த இனிய ஆற்றுப்படுத்தல் பணியை மேலும் சிறப்பாக மேற்கொள்ள இறையருள் என்றும் உடன்நின்றுறையும் என்பதில் ஐயமில்லை. "இந்து ஒளி"யின் பணியில் எல்லோரும் இணைவோம்.

-கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

## மாதாந்தம் மலரட்டும்!

இந்து மத நிறுவனங்களில் தலைமை நிறுவனமாக எல்லோராலும் மதிக்கப்படுவது அகில இலங்கை இந்து மாமன்றமாகும். இம்மன்றத்தின் ஒவ்வொரு செயற்பாடுகளும் மிகவும் அர்த்தமுள்ளவையாக விளங்குவது பாராட்டுக்குரியது.

பொன்விழா கண்டு மிகுந்த பொலிவுபெற்று விளங்கும் இந்து மாமன்றத்தின் இனிய சாதனையாக விளங்குவது 'இந்து ஒளி' வெளியீடாகும். எவ்விதமான இலாப நோக்கும் இல்லாமல், காலந் தவறாது இம்மலரை வெளியிட்டு மாமன்றம் தனது மகத்தான பணியை தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இந்து மத வரலாற்றில் இச்சஞ்சிகை உன்னதமான பங்கினை வகித்துள்ளது. ஈழத்து திருத்தலங்களின் வரலாறுகள், இந்து மத தத்துவக் கோட்பாடுகள், இந்து மதப் பெரியார்களின் வாழ்க்கை வரலாறுகள் என பல்வேறு கனதியான விடயங்களை தாங்கி வரும் இச்சஞ்சிகை கடந்த பத்து ஆண்டுகளாக இந்து மக்களுக்கு பெரும் துணைசெய்துள்ளது.

"இந்து ஒளி" எதிர்காலத்தில் மாதாந்த சஞ்சிகையாக மலரவேண்டும் என்பது என்போன்றவர்களின் பேரவா ஆகும்.

கடந்த பத்து ஆண்டுகளாக "இந்து ஒளி"யின் வரவுக்காக அர்ப்பணிப்போடு சேவையாற்றிய மாமன்ற நிர்வாக சபையினரையும், சஞ்சிகை வெளியீட்டுக் குழுவினரையும், இந்து மாமன்றப் பணியாளர்களையும் மனதார வாழ்த்தி, சூரிய சந்திரன் இவ்வுலகில் உள்ளவரை என்றென்றும் நிரந்தரமாக வெளிவர வேண்டும் எனப் பிரார்த்தித்து வாழ்த்தி அமைகிறேன்.

-செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன்

கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற்கற்கைகள் நிறுவகத்தின் வடமொழித்துறை விரிவுரையாளரும், நடன நாடக அரங்கியற்துறை இணைப்பாளருமான திரு. ம. பாலகைலாசநாதசர்மா அவர்களது

## வாழ்த்துச் செய்தி

அகில இலங்கை இந்து மாமன்ற காலாண்டு இதழான "இந்து ஒளி" பத்தாவது ஆண்டு நிறைவு பெறுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன்.

இலங்கை திருநாட்டின் இந்துக்களின் ஒரு குரலாக விளங்கும் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பல அரிய செயற்பாடுகளின் ஒரு வெளிப்பாடாக இந்து ஒளி எனும் மலர், கர்லாண்டு தீபச்சுடராக பிரகாசித்துக் கொண்டு, சமய சமூகநல கல்விப் பணிகளை மென்மேலும் முன்னெடுத்துச் செல்வதை அறிந்து வாழ்த்துவதில் பெருமையடைகின்றேன். இச்செயற் பாட்டிற்குரிய அனைவருக்கும் இறைவனின் அருளும் குருவின் ஆசியும் பெரியோர்களின் பாராட்டுக்களும் கிடைக்க வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

பத்து ஆண்டுகளை இவ்வேளையில் பூர்த்தி செய்யும் 'இந்து ஒளி' மென்மேலும் தனது வளர்ச்சிப் பாதையை நன்கு அகட்டி, நீண்டதூரப்பார்வையுடன் காலத்தின் தேவைகளுக்கேற்ப பணிகளை நன்கு செய்ய வேண்டுமென இறைவனை வேண்டுவதோடு மனம்நிறைந்த வாழ்த்துக்களையும் வழங்குகின்றேன்.


## குன்றிலிட்ட தீபமாகத் திகழட்டும்!

நமது முன்னோர் வாழ்ந்து சிறந்த நாடு இது. அவர்கள் விட்டுச் சென்ற அற உணர்வும், ஆன்மிக எண்ணங்களுமே நமது வைப்புச் சொத்துக்கள். நமது சமயத்தை அந்நிய மதங்களும், ஆணவ அரசுகளும் சுழன்றடிக்கும் சூறாவளியாகி அழிக்க முற்பட்ட பொழுதெல்லாம் சமய குரவர்களும், சன்மார்க்க ஞானிகளும் கற்சிறைகளாக நின்று காத்தார்கள்.

தனிமனிதர்கள் ஆற்றிய அந்தப் பணிகள் இப்பொழுது ஸ்தாபனங்கள் மேற்கொண்டு செயல்படுத்துகின்றன. சிறப்பாகக் கூறினால் அகில இலங்கை இந்து மாமன்றம் செய்து வரும் பணிகளுள் தலையாயது 'இந்து ஒளி' என்றும் காலாண்டிதழ் வெளியீடு இருண்டுபோன இதயங்களில் ஒளியேற்றுகின்றது. நவராத்திரி சிவராத்திரி போன்ற சிறப்பு மலர் வெளியீடுகளும் சிறந்த பல சமயக் கருத்துக்களை விதைக்கும் விளை நிலங்களாக உள்ளன. மக்கள் அனைவரையும் விழிக்கச் செய்யும் இவ் விடிவெள்ளிக்குப் பத்தாண்டுகள் நிறைவுறுகின்றது என்பது மகிழ்ச்சியான செய்தி.

இனிவரும் ஆண்டுகளிலும் சிறந்த பணிகளை ஆற்றி, குன்றிலிட்ட தீபமாக 'இந்து ஒளி' சிறந்து ஒளிர அம்பிகையை இறைஞ்சுகின்றேன்.

-வித்துவான் திருமதி: வசந்தா வைத்தியநாதன்



# இந்துசமயப் பண்பாட்டில் தமிழ்ப் புராணம் பற்றிய அறிமுகம்



திரு. எஸ். துஷ்யந் B.A (Hons) Dip. in. Edu.
(மட் / பெரிய கல்லாறு மத்திய கல்லூரி)

புராணம் என்ற சொல்லானது புராதினம், பழமை, பழைய கதை, பழைய வரலாறு எனப் பலவாறு பொருண் உண்மை கொள்ளலாம். சமஸ்கிருத மொழி, தமிழ் மொழி என்ற இரு மொழிகளின் தழுவல்களில் வடமொழிப் புராணங்கள், தமிழ் மொழிப் புராணங்கள் தோற்றம் பெற்றன. இதில் சமஸ்கிருத மொழியில் உள்ள புராணங்களே மிகப் பழமை வாய்ந்தது. தமிழ்ப் புராணங்கள் பெரும்பாலும் கி. பி 11ம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டவையாக உள்ளது.

வடமொழிப் புராணங்களின் பொருள் மரபுகளை பின்பற்றிய தாக தமிழ் மொழிப் புராணங்கள் அமையவில்லை. இருப்பினும் சில தமிழ்ப் புராணங்கள் வட மொழிப் புராணங்களை தழுவியே எழுந்தது. தமிழ் மொழிக்குச் சிறப்பாகவுள்ள புராணங்கள் பெயரளவில் மட்டுமே புராணங்களாக இருக்கின்றது. அவை அறம், பொருள், இன்பம் என்பவற்றை விளக்கும் காவியங்களுக்குரிய அம்சங்களை பெரிதும் கொண்டுள்ளன. எனவே தமிழகத்து சைவசமய பண்பாட்டம்சங்களை நன்கறிந்து கொள்வதற்குத் தமிழ்ப் புராணங்களைப் பற்றிய அறிவு அவசியமாகும்.

## தமிழ்மொழியில் எழுந்த புராண வகைகள்

தமிழ் மொழியில் இப்பொழுது கிடைக்கின்ற புராணங்கள் கி. பி. 11ம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டவை. அவற்றை பின்வரும் பிரிவுக்குள்ளான முறையில் வகைப்படுத்தலாம்.

அ. மகாபுராணங்களின் மொழிபெயர்ப்பு நூல்கள்
1. கூர்ம புராணம்
2. இலிங்க புராணம்
3. மச்ச புராணம்

ஆ. காவிய முறையில் அமைந்த புராணங்கள்
1. பெரிய புராணம்
2. கந்த புராணம்

இ. மெய்யடியார்கள் வாழ்க்கை பற்றிய புராணங்கள்
1. திருத்தொண்டர் புராணம்
2. திருவாதவூரடிகள் புராணம்
3. சேக்கிழார் புராணம்

ஈ. விரதமகிமை பற்றிக் கூறும் புராணங்கள்
1. ஏகாதசி புராணம்
2. சிவராத்திரி புராணம்
3. பிரதோஷ புராணம்

உ. சாதி பற்றிக் கூறும் புராணங்கள்
1. வன்னியர் புராணம்
2. சாதி நிர்ணய புராணம்
3. அங்கத புராணம்

ஊ. தலங்கள் மீது எழுந்த புராணங்கள்
1. தணிகைப் புராணம்
2. திருவிளையாடற் புராணம்
3. கோயிற் புராணம்
4. பழனித்தல புராணம்
5. திருவாரூர் புராணம்
6. திருவையாற்றுப் புராணம்
7. திருச்செந்தூர் புராணம்
8. காஞ்சிப் புராணம்
9. திருவானைக்கா புராணம்
10. சீகாளத்தி புராணம்

## காவிய முறையமைந்த புராணங்கள்

01. பெரிய புராணம்

### அ. பெரிய புராணம் எழுந்த காலம் சூழ்நிலை பற்றிய விளக்கம் :

தமிழக சோழராட்சிக் காலத்திலே பெரியபுராணம் எழுதப் பட்டது. கி. பி. 9 தொடக்கம் 13ம் நூற்றாண்டு வரையிலான காலம் சோழ அரசர்களின் வசமாக இருந்தது. கி. பி. 12ம் நூற்றாண்டிலே சோழப் பேரரசை ஆண்ட அநபாயன் என அழைக்கப்படும் இரண்டாம் குலோத்துங்க சோழன் வேண்டிக் கொண்டவாறு அம்மன்னனுக்கு முதல் அமைச்சராக இருந்த சேக்கிழார் தமது புலமையைப் பயன்படுத்தி சமய இலக்கியமான இந்நூலை இயற்றினார். சோழர்காலம் சமயம், அரசியல், பொருளாதாரம், கலை, இலக்கிய வரலாற்றிலே ஒரு பொற்காலமாக விளங்கியது. சேக்கிழார் காலத்தில் சமயப் பொதுமை நிலவியதென வரலாறு கூறும். சோழ அரசு சைவ, வைணவ சமயங்களைப் போற்றியது. பௌத்த சமயத்திற்கும் ஆதரவு அளித்தது. மன்னர்களும், மக்களும் சைவத்தைப் போற்றினர். அதன் வளர்ச்சிக்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்டன. விஜயபாலன், பராந்தகன், இராஜராஜன், இராஜேந்திரன், முதலாம் குலோத்துங்கன் போன்ற அரசர்கள் ஒழுங்குபடுத்தப்பட்ட அரசியல் நிர்வாகத்தினை மேற்கொண்டனர். உள்நாட்டு, வெளிநாட்டு வாணிபத்தின் மூலம் பொருளாதாரமும் செழிப்புற்றிருந்த இச்சூழ்நிலையிலேயே பெரிய புராணம் இலக்கிய காப்பிய வடிவம் பெற்றது.

### ஆ. சேக்கிழார் வாழ்வும், பணியும் :

சோழநாட்டில் குன்றத்தூரிலே பிறந்தவர். இளமைநாமம் அருண்மொழித்தேவர். இளமை முதல் சிவபக்தியிலும், சிவனடியார் பக்தியிலும் சிறந்து விளங்கினார். இவரின் கல்விச் சிறப்பால் அநபாய சோழனின் அரசவையில் முதல் மந்திரியாக நியமித்து "உத்தம சோழப்பல்லவர்" என்ற சிறப்புப் பெயரையும் கொடுத் தான்.

பணிகள் :- திருநாகேச்சுரம் கோயிலை அமைத்து பூசை நடாத்தி வந்தார். சோழ அரசனை சைவ சமயத்தில் ஈடுபடச் செய்வதற்கு சுந்தரரின் திருத்தொண்டர் தொகையைப்படித்து பொருள் விளக்கி மன்னனின் வேண்டுகோளின்படியும் சிவனின் அருளாலும் பெரியபுராணம் என்னும் சைவகாப்பியத்தை நூலாக்கினார். அதனூடாக தமிழ்நாட்டு சிவ அடியார்களின் வழிபாட்டை சைவசமயத்திலே சிறப்புப் பெறச் செய்தார். இதனால் தொண்டர் சீர் பரவுவார் என்னும் சிறப்புப் பெயரையும் பெற்றார். பெரியபுராணம் என்னும் காவியத்தை சுந்தரமூர்த்தி நாயனார் பாடியருளிய திருத்தொண்டர் தொகையினையும், நம்பியாண்டர் நம்பி பாடியருளிய திருத்தொண்டர் திருவந்தாதியினையும் அடிப்படையாகக் கொண்டு உருவாக்கினார். தென்னாட்டிலே சைவநெறி தழைக்க வந்த நாயன்மார் அறுபத்து மூவரின் வாழ்க்கையினை ஆராய்ந்து கூறும் திவ்விய நூலாகும்.

### இ. பெரியபுராண நூல் அமைப்பும் பொருண் மரவும் :

திருமலைச்சருக்கம் முதலாக வெள்ளானைச் சருக்கம் வரை 13 சருக்கங்களையும், 2 காண்டங்களையும் அடக்கியுள்ளது. முதல் காண்டத்தினுள் 5 சருக்கங்களும், இரண்டாம் காண்டத்தினுள் 5 சருக்கங்களும் அடக்கப்பட்டுள்ளது. 4286 பாடல்களையும் கொண்டுள்ளது.

பொருண் மரபு :- 63 தனியடியார்களினதும், 9 தொகையடியார் களினதும், வாழ்க்கை சரிதங்களுடன் அற்புதங்கள், வழிபாட்டுத்தலங்கள், சைவசித்தாந்த விளக்கம், நாயன்மார் வழிபாடு, சைவ மரபுகள் போன்றவற்றை பெரியபுராணம் விளக்கிக் கூறுகின்றது. இந்நூலின் பெருங்காப்பிய நாயகனாக சுந்தரமூர்த்தி நாயனாரைப் பாட்டுடைத் தலைவனாக் கொண்டு முதல், இடை, கடைப்பகுதிகளில் பொதித்து ஏனைய சிவ அடியவர்களின் வரலாற்றினை எடுத்துக்கூறுவதோடு காரைக் கால் அம்மையார், நாயன்மார் வரிசைக்குள்ளும், இசை ஞானியாரும், மங்கையர்க் கரசியாரும் தொகையடியார்களாகவும் சேர்க்கப்பட்டுள்ளது. இறைவனே

*"உலகெலா முணர்ந் தோதற்கரியவன்*
*நிலவுலாவிய நீர் மலி வேணியன்*
*அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்..."*

என அடி எடுத்துக்கொடுத்த பாடலில் சைவசித்தாந்தம் கூறும் உலகம், இறைவன், ஆன்மா, மலங்கள், திருவருள் ஆகிய தத்துவ சிந்தனைகள் உள்ளடக்கப்பட்டுள்ளது. இறைவனின் சொரூப, தடத்த இலட்சண இயல்புகளும் பாடலில் முதல், இரண்டாம் அடிகளில் விளக்கப்பட்டுள்ளது. சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நாற்பாதங்கள் விளக்கமும், குருலிங்க சங்கம வழிபாட்டின் விளக்கமும் முத்திக்கான சாதன விளக்கமாக அமைந்துள்ளது. இந்நூலை நிறைவு செய்யும்போது "அடியாரவர் வான் புகழ் நின்றதெங்கும் நிலவி உலகெல்லாம்" என்றே நிறைவு செய்வதும் சித்தாந்த விளக்கமாகும்.

### ஈ. பெரியபுராணத்தில் பொதிந்துள்ள சைவசித்தாந்தக் கருத்துக்கள் :

சைவ சித்தாந்தம் விளக்கும் உலகு, உயிர்கள், இறைவன், மலங்கள், முத்தி, முத்தியின் சாதனங்கள், திருவருள் போன்றவை பெரியபுராணத்தில் சேக்கிழாரின் பாடல்களினால் கையாளப் பட்டுள்ளன.

*"உலகெலா முணர்ந் தோதற் கரியவன்*
*நிலவுலாவிய நீர்மலி வேணியன்*
*அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்*
*மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவான்"*

உலகு என்பது உயிர்களைக் குறித்து நிற்கின்றது. பசு ஞானத்திற்கும், பாச ஞானங்களிற்கும் அப்பாற்பட்டவனாகிய இறைவனது சொரூபநிலை முதல் பாடல் அடியிலும், உணர்வதற்கு அரியவனாயினும் எளியவனாக உருவம் தாங்கி நிற்பதால் இரண்டாம் பாடலடியில் தடத்த நிலையும் கூறப்படுகின்றது. மூன்றாம் பாடலடியில் உயிர்களை ஐந்தொழில் செய்து உய்விப்பதை விளக்கி இறுதியில் முக்கரண வழிபாட்டினூடாக அவனடி சேரும் முக்தி நிலையும் கூறப்படுகின்றது.

*"இரு வினைப் பாசமும் மலக்கல் ஆர்த்தலின்*
*வருபவக் கடலில் வீழ் மாக்கள் ஏறிட*
*அருளும் மெய்யஞ் செழுத்து"*

ஆணவம், கன்மம், மாயை என்னும் மலங்களால் கட்டப்பட்ட உயிர்களை பிறவியென்னும் கடலில் இருந்து மீள திருவைந் தெழுத்து அவசியம் என்பது அப்பாடலில் உணர்த்தப்பட்டுள்ளது. முக்திக்கு சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நாற்பாதங் களும், குருலிங்க சங்கம வழிபாடுகளும், தசகாரியங்களும் மார்க்கங்களாக அமையும் என்பதும் கூறப்பட்டுள்ளது.

திருமுறைகள், சித்தாந்த சாஸ்திரங்கள் கூறும் சித்தாந்த நெறியுடன் பெரியபுராணமும் ஒத்துப் போகின்றது எனலாம்.

### உ. தமிழகத்து சைவசமய சிந்தனைகளில் பெரிய புராணம் பெறும் முக்கியத்துவம் :

சைவ இலக்கியங்களிலே இறைவன்மேல் அன்பு பூண்டு வாழ்ந்த அடியார்களின் வரலாற்றினைக்கூறும் இலக்கியம் சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணம் ஆகும். இந்நூல் தமிழ் நாட்டில் பக்தி வளர்த்த நாயன்மார்களது வாழ்க்கை வரலாறு களையும், வழிபாட்டுத்தலங்கள், அங்கு நடந்த அற்புதங்கள் பற்றிய விளக்கத்தையும் தருவதனாலும் பெரியபுராணம் மாக்கதை என்ற பெயராலும் அழைக்கப்படுகின்றது. இந்நூல் தமிழகத்து சைவ சமயம், தமிழ் இலக்கியம், சமூக வாழ்வியல், கலை தத்துவம் போன்றவற்றில் ஒரு வரலாற்றுப் பதிவாக இன்று விளங்குகின்றது.

தமிழ் நாட்டுச் சைவ நாயன்மார்களைப் பற்றிய தமிழில் எழுந்த முதன்மை இலக்கியம் பெரியபுராணம். மெய்யடியார் வழிபாடு, மகேஸ்வரபூசை, மெய்யடியார்களின் விக்கிரக வழிபாடு, குருபூசை, ஆலயங்களிலே புராணபாராயணம் செய்வதற்கும், சமய கதா பிரசங்கங்கள் புரிவதற்கும், ஆலய கிரியை வழிபாடுகளில் பஞ்ச புராணம் ஓதுகின்ற மரபில் இறுதியாக பெரியபுராணம் ஓதுவதற்கும் இந்நூல் அடிப்படையாக விளங்குவதால் சைவசமய வளர்ச்சியில் முக்கியத்துவம் பெறுகின்றது.

தமிழ் இலக்கிய வளர்ச்சியில் காப்பிய நூலாக திகழ்கின்றது. திருமுறைத் தொகுப்பில் 12ம் திருமுறையாக வைப்புச் செய்யப் பட்டுள்ளது. வில்லிசை, தலபுராணங்கள், நாடக நாட்டியத் துறை வளர்ச்சிக்கும் பொருளாக விளங்குகின்றது. பெரிய புராணக் கதைகள் தமிழ் மொழி தவிர பிற மொழிகளிலும் பரவியுள்ளன. தாராசுரம், திருப்பனந்தாள் போன்ற கோவில்களில் பெரிய புராண மரபுகள் சிற்பங்களாகவும், ஓவியங்களாகவும் செல்வாக்குப் பெற்றுள்ளன. நாட்டியம், பண்ணிசை, சினிமா முதலிய கலை

வளர்ச்சிக்கும் பொருளாக அமைகின்றது. சைவசித்தாந்தம் கூறும் கருத்துக்களை தெளிய வைக்கும் நூலாக உள்ளது. இறைவனை உயிர்கள் அடையும் வழிகளாக நாற்பாதங்கள் அமையும் என்பதையும், அதனூடாக முக்திக்கு பொருளாக அமையும் இறைவனின் அற்புதச் செயல்களையும் வெளிப்படுத்தும் நூலாகும்.

பெரிய புராணம் தமிழிலக்கிய மரபிலும், தமிழ்ச் சைவர்களின் சமய வாழ்க்கையிலும் பெரும் செல்வாக்கினை ஏற்படுத்தியுள்ளன. ஈழத்திலும் பல நூற்றாண்டுகளாக அவை மிகுந்த ஆராமையுடன் போற்றிப் படிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

02. கந்தபுராணம் :-

அ. கந்தபுராணம் எழுந்த காலம் சூழ்நிலை :

சோழர் காலம் கி.பி 9ம் நூற்றாண்டு முதல் 14ம் நூற்றாண்டு வரை ஆட்சி நிர்வாகம் நடைபெற்றது. கச்சியப்ப சிவாச்சாரியாரின் காலம் கி.பி. 14ம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என அறிய முடிகின்றது. அவரால் இயற்றப்பட்ட கந்தபுராணமும் அக்காலத்துக் குரியதாக கருத இடமுண்டு. சோழரின் அரசியல், பொருளாதாரம், சைவ சமயத்தின் வளர்ச்சிகள் கந்தபுராணம் தோன்றக் காரண மாக இருந்தாலும், முருக வழிபாடு மறுமலர்ச்சி பெற்ற காலமான விஜய நகர நாயக்கர் காலத்திலே இவ் முருக காவிய நூல் தோற்றம் பெற்றிருக்க வேண்டும் என ஒரு சாரார் கருதுவும் இடமுண்டு. விஜய நகர நாயக்கர் காலம் கி.பி. 14 ஆம் நூற்றாண்டு முதல் 18 ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலம். இக்காலத்தில் அருணகிரிநாதர், குமரகுருபரர் போன்ற முருக பக்தர்கள் தோன்றி முருகன் மீது பக்திப் பாடல்கள் பாடிய காலம் எனக் கூறப்படுகின்றது.

ஆ. கச்சியப்ப சிவச்சாரியார் வாழ்வும் பணியும் :

கி.பி. 14ம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என அறிய முடிகின்றது. இவர் காஞ்சிபுரத்திலுள்ள குமரக் கோட்டத்தில் அர்ச்சகராக இருந்த காளத்தியப்ப சிவாச்சாரியாருக்கு மகனாகப் பிறந்தார். சமஸ்கிருதம், தமிழ் ஆகிய மொழிகளையும் இளமையிலே கற்று ஆச்சாரிய அபிஷேகம் பெற்று குமரக் கோட்டத்திலுள்ள முருகனுக்கு வழிபாடு செய்து வந்தார்.

முருகக் கடவுள் மீது கொண்ட பக்தியால் ஒரு நாள் முருகன் கச்சியப்பரின் சொப்பனத்திலே தோன்றி "வடமொழி ஸ்காந்த புராணத்தின் ஆறு சங்கிதைகளிற் சங்கரசங்கிதையின் முதற் காண்டமான சிவ ரகசியத்தினுள்ளே நமது சரிதை கூறப் பட்டுள்ளது. அச் சரிதத்தைக் கந்தபுராணம் என்னும் பெயரில் தென் தமிழ் நூலாகச் செய்" எனக் கட்டளையிட்டுத் "திகடசக்கரம்" என்ற அடியையும் எடுத்துக் கொடுத்து மறைந்தார். பின்பு கந்தபுராண அரங்கேற்றத்தின்போது முருகனே புலவராக வந்து வீரசோழியம் எனும் இலக்கண நூலை ஆதாரம் காட்டி திருத்தம் செய்து மறைந்தார். இவ்வாறு கந்தபுராணம் என்ற தெய்வீக நூலைத் தெய்வ அநுக்கிரகத்தாலே திருவருட்சக்தி வாய்க்கப் பெற்ற கச்சியப்பர் பாடியருளினார். இதனால் கந்தபுராணம் ஒரு தெய்வீக நூலாகவும், கச்சியப்பர் தெய்வ அருட்கடாட்சம் பெற்ற பக்தராகவும் போற்றப்படுகின்றார்.

இ. கந்தபுராண அமைப்பும் பொருண்மரபும் :

அமைப்பு :- ஆறு காண்டங்களால் அமையப் பெற்றுள்ளது. அவை முறையே உற்பத்தி காண்டம், அசுர காண்டம், மகேந்திர காண்டம், யுத்த காண்டம், தேவகாண்டம், தட்சண காண்டம் என்பனவாகும். 132 படலங்களையும் கொண்டுள்ளது. 10346 பாடல்களையும், கிட்டத்தட்ட 11000 விருத்தப் பாடல்களையும் கொண்டுள்ளது.

பொருண்மரபு :-

1. உற்பத்தி காண்டம்:- அசுரர்களால் அல்லலுற்ற தேவர்கள் கயிலையில் முறையிட்டமை, முருகனின் அவதாரம், தேவர் சிறை மீட்கப் படையுடன் முருகனை அனுப்புதல், தார கனையும், கிரவுஞ்சத்தையும் வேலால் அழித்து திருச் செந்தூரில் தங்கியமையும் கூறப்படுகின்றது.

2. அசுர காண்டம் :- மூன்று அசுரர்களின் வரலாறும் அவர்கள் சிவனிடம் பெற்ற வரங்களும், மகேந்திரபுரத்தில் புரிந்த அநீதியான ஆட்சியும் கூறப்படுகின்றது.

3. மகேந்திர காண்டம் :- முருகன் வீரவாகு தேவரை சூரனிடம் தூதனுப்புதல், தேவர்களை விடுவித்து அறநெறியில் ஆட்சி புரியுமாறு சூரனை வேண்டுதல்.

4. யுத்த காண்டம்:- மகேந்திரபுரியில் முருகன் பத்து நாட்கள் போர் புரிந்து அசுரர்களை அழித்தமை, சூரனை இரு கூறாக்கியமை கூறப்படுகின்றது.

5. தேவ காண்டம் :- தேவர்களை சிறை மீட்டதும் முருகன் கைலைக்கு மீண்டதும், தேவயானையை திருமணம் புரிந்தமையும் கூறப்படுகின்றது.

6. தட்ச காண்டம் :- கந்த விரதங்களும், வள்ளியம்மை திருமணமும் கூறப்படுகின்றது.

கந்தபுராணம் உணர்த்தும் சைவசித்தாந்தக் கருத்துக்கள் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருளும் அதன் இயல்பும் கந்த புராணத்தில் உணர்த்தப்படுகின்றது. பதி – முருகன், பசு – தேவர்கள், மும்மலங்கள் – மூன்று அசுரர்கள், தேவர்களை அசுரர்கள் துன்பப்படுத்துதல் – ஆன்மாக்களை மலங்கள் பீடித்திருத்தல், தேவர்கள் சிறை மீளல் – பதமுத்தி வாழ்வு பெறும் உருவக முறைகள் சித்தாந்த விளக்கமாகவே உள்ளது.

பாசத்தால் பீடிக்கப்பட்ட ஆன்மாக்கள் இருவினையொப்பு, மலபரிபாகம் நிலையை அடைந்து சந்நிதிபாத நிலையினூடாக முக்தி இன்பம் பெற வழிகாட்டுபவையாக கந்தபுராண பொருண் மரபு அமைந்துள்ளது.

அறத்தின் வழுவியவரும் சிவநிந்தை முதலிய பாவங்கள் புரிவோரும் அதற்கேற்ற தண்டனையை இம்மை, மறுமைகளிலே பெற்றுத் துன்புறுவர் போன்ற தர்ம சாஸ்திர அறக்கருத்துக் களையும் வலியுறுத்தி நிற்கின்றன.

ஈ. தமிழகத்து சைவசமய சிந்தனைகளில் கந்த புராணம் பெறும் முக்கியத்துவம் :

தமிழகத்து சைவப்பண்பாட்டு களஞ்சியமாக விளங்குவது கந்தபுராணம் எனக் கூறலாம். இந்நூல் சைவ சமயக் கருத்துக் களை விளக்குவதோடு சைவ க்லாச்சாரத்திற்கும் வித்திட்ட அதி மதுரச் சுத்த சைவச் செந்நூல் எனவும் போற்றப்படுகின்றது.

புராணங்களைப் படித்து பயன்கூறுகின்ற புராண படல மரபுக்கும் பொருளாகின்ற நூல் கந்தபுராணமாகும். ஆலயம், திருமடம், நதிக்கரை முதலிய இடங்களில் படித்து உரை சொல்லும் மரபு சைவ நெறியில் உண்டு. இப்புராணம் படிப்பதற்குப் புராண

படலவிதியுமுண்டு. கந்தபுராண படல மரபு இலங்கையில் யாழ்ப்பாணப் பகுதியில் சிறப்பாகப் போற்றப்பட்டு வருகின்றது. நல்லூர் ஆறுமுகநாவலர் வாழ்ந்த காலத்தில் இது சிறப்பாகக் கடைப்பிடிக்கப்பட்டது. கந்தசஷ்டி விரதத்தின்போது முருக ஆலயங்களில் பாராயணம் செய்கின்ற மரபு தற்போதும் நிகழ்ந்து வருகின்றது.

கந்தபுராணக் கதைக்கருக்கள் ஆலயங்களிலே சிற்பம், ஓவியம் போன்ற நுண்கலைகளுக்கு பொருள் மரபாக அமைந்தது. ஆலயங்களில் சூரன்போர் நாடகத் தன்மையுடன் நடைபெற்று வருவதையும் காணலாம். இதனால் நாட்டிய நாடகங்கள், கூத்துக்கள், காவடி, சினிமா போன்ற துறைகள் வளர்ச்சி பெறுவதற்கும் பொருளாக அமைந்தது.

கந்தபுராணம் ஓர் இலக்கண பிரயோக நூலாகும். சிறந்த அணியலங்காரங்களும் பாத்திர இயல்புகளும் அதில் இருப்பதால் பிற்காலத்தில் சிற்றிலக்கியங்கள், பிரபந்தங்கள், தலபுராணங்கள் வளர்ச்சி பெறுவதற்கும் பொருளாக அமைந்தது.

கந்தனின் தெய்வீக நூலாக இருந்தாலும் சித்தாந்தம் கூறும் பதி, பசு, பாசம், முக்தி, பக்தி, ஞானம் முதலிய விளக்கங்களும் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளதால் இந் நூலுக்கு உபதேச இரத்தினாகரம் எனும் பெயரும் உண்டு.

இவற்றையெல்லாம் கந்தபுராணம் உள்ளடக்கி இருப்பதால் கந்தபுராண கலாச்சாரமே சைவமக்கள் கலாச்சாரம் எனவும், சமய கலைக்களஞ்சியம் எனவும் கூறப்படுகின்றது.

### 03. தலபுராணங்கள் :-

தமிழ்மொழி புராணவகை மரபில் சிறப்புப் பெறுவது தல புராணங்கள் ஆகும். தலபுராணங்கள் தோன்றுவதற்குத் தேவார திருமுறைகளும் மூலகாரணமாக விளங்கின. அத்தோடு மகா புராணங்களிலுள்ள புராணக்கதைகளின் தழுவல்களாகவும், தமிழகத்துத் தலங்களுக்குரியனவாகத் தலபுராணங்கள் மாற்றமடைந்து எழுந்தன. இவை பதிக மரபினை தழுவி இஸ்லாமியர் ஆட்சிக்காலத்தில் சைவத்திருக்கோயில்களின் பெருமையைக் கூட்ட பாடப்பட்டது எனலாம்.

### பிரதான தலபுராணங்கள் :

சிதம்பரத்தின் மீது எழுந்த கோயிற்புராணம், மதுரை மீது எழுந்த திருவிளையாடல் புராணம், திருக்கோணேஸ்வரம் மீது எழுந்த ஸ்ரீ தட்சிணகைலாச புராணம், திருக்கோசல புராணம், திருவஞ்சை புராணம், அருணாசலபுராணம், திருவொற்றியூர் புராணம், சேதுபுராணம், திருவாரூர்ப் புராணம், திருவையாற்றுப் புராணம், பழனித்தல புராணம், திருக்கழுக்குன்ற புராணம், வேதாரணிய புராணம், திருச்செங்காட்டுக்குடிப் புராணம், காஞ்சிப் புராணம், தணிகைப் புராணம், திருவானைக்காப் புராணம், திருபாதிப்புலியூர்ப் புராணம், சீகாளத்தி புராணம் என்பன சில புராணங்களாகும்.

### தலபுராண பொருண்மரபுகள் :

திருக்கோயில் அமைப்பு, மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் முப்பொருளையும் விரிவாக வர்ணிக்கின்றன. நாட்டுச் சிறப்பு, நகரச்சிறப்பு ஆகிய காவிய நலப்பண்புகள் அவற்றிடையே காணப்படும். கோயிலிற் சாந்நித்தியம் பெற்றுள்ள மூர்த்தியின் திருவிளையாடல்களுக்கெல்லாம் தலமே களமாகக் கொள்ளப்பட்டு இலக்கிய நயத்துடன் சமய இலக்கியத்துறையில் புதியதொரு வடிவமாக விளங்குவது தலபுராணமாகும்.

தலபுராணங்கள் எல்லாம் சைவ சமய சம்பந்தமானவை. தலங்களிலே தேவர், நாகர், முனிவர் ஆகியோர் தவமிருந்து பூசை புரிந்து இறையருளினால் முக்திப் பேற்றினை அடைந்தமை யினையும், நாயன்மார் முதலிய அடியார்களின் தொடர்புகள் வழிபாடு, விரதம், அருள், கலை முதலிய சமய தத்துவக் கருத்துக் களும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

பௌராணிக சிந்தனைகளும், சைவசித்தாந்த கோட்பாடு களும், தலபுராணங்களிலே மிகுந்து காணப்படுகின்றது. பூலோகமே சிவலோகம் என்பதும், திருத்தலமே பூலோகமாகிய சிவலோகத்தின் நடுநாடி என்பதும் தலபுராணங்களின் அடிப்படைத் தத்துவமாகும். இந்த வகையில் சைவ சமய வளர்ச்சியிலே ஒரு புதிய சிந்தனை மரபினைத் தல புராணங்கள் பிரதிபலிக்கின்றன.

### ஸ்ரீ தஷிணகைலாச புராணம் :

இந்நூல் எழுந்த காலம் ஆரியச்சக்கரவர்த்திகள் காலம் எனக் கூறப்படுகின்றது. இராசகுருவாக விளங்கியவரான சைவராச பண்டிதரின் வேண்டுகோளினால் சிங்கைச் செகராசசேகரன் என்பவரால் பாடப்பட்டதே கைலாச புராணமாகும். இந்நூல் எழுவதற்கு தென்கயிலாய மான்மியமான மச்சகேச்சுர புராணம் என்னும் சமஸ்கிருத நூல் மூலமாக அமைந்தது.

இதில் உள்ள பொருண்மரபுகள் திருக்கோணேஸ்வர வரலாறுகள் பற்றியதாகும். கைலாசபுராணம் பாயிரம், ஏழு சருக்கங்களும் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. இலங்கை மண்டலச் சருக்கம், திருமலைச் சருக்கம், புவனோற்பத்திச் சருக்கம், அர்ச்சனாவிதிச் சருக்கம், மச்சாவதாரச் சருக்கம், தெரிசனா மூர்த்திச் சருக்கம், திருநகரச்சருக்கம் போன்றவை அச்சருக்கங்களாகும். இவற்றிலே திருமலையின் தோற்றம், மச்சவதாரம் பற்றிய கதைகள், இராவணனும் தென்கயிலாச தரிசனவரலாறுகளும் பாயிரச்செய்யுள்களும் திருநகரச்சருக்கத் திலும் கஜபாகு, குளக்கோட்டன் போன்றோர் திருக்கோணேஸ் வரத்திற்கு செய்த பணிகள், குளக்கோட்டனின் தந்தையாகிய வராமதேவன் இப்புராணத்தில் உள்ள ஈடுபாடும் கூறப்பட்டுள்ளது.

தென்கயிலாயத்தின் தலபுராணம் என்ற வகையிலும், ஈழநாட்டுச் சைவர்களின் பாரம் பரியத்திலே தனிச்சிறப்பானதோர் இடத்தைப் பெறுகின்றது. இலங்கையில் எழுந்த சைவநூல்களிலே இதுவே பழமையானது, முதன்மையானது. திருக்கோணேஸ்வரம் பற்றிய தனியானதோர் இலக்கிய மரபு உருவாகி மலர்வதற்கும் இதுவே ஆதாரம்.

### திருவாதவூரடிகள் புராணம் :

கடவுள் மாமுனிவர் என்பவரால் இப்புராணநூல் பாடப்பட்டது. இதுவும் மெய்யடியார்களைப் பற்றிக் கூறும் புராண வகையினுள் ஒன்று எனக் கூறலாம். இப்புராணம், பொருள் அமைப்பிலும் ஏனைய புராண மரபிலும் இருந்து வேறுபடுகின்றன. சைவசமய வளர்ச்சியில் ஒரு பிரதானமான கால கட்டத்தினை நாயன்மார் வழிபாடு சிறப்புற்று இருந்த நிலையினைப் பிரதி பலிக்கும் பேரிலக்கியமாக இந்நூல் அமைந்துள்ளது. இந்நூல் ஏழு சருக்கங்களைக் கொண்டுள்ளது. அவை முறையே மந்திரச் சருக்கம், திருப்பெருந்துறைச் சருக்கம், குதிரையிட்ட சருக்கம், மண் சுமந்த சருக்கம், திருவம்பலச் சருக்கம், புத்தரை வாதில் வென்ற சருக்கம், திருவடி பெற்ற சருக்கம் என்பனவாகும்.

இதன் பொருண்மரபுகளை நோக்கும்போது மாணிக்க வாசகரின் வாழ்க்கை வரலாறுகளை விபரிக்கும் நூலாக உள்ளது. மாணிக்கவாசகரின் குரு வாழ்க்கைத் தொடர்புகள், குருவழிபாட்டு முறைகள், பக்திசுவைகள், அற்புதங்கள், அவர் இயற்றிய நூல்கள் என்பவற்றை சமயசிந்தனையாகவும், இலக்கிய நயமாகவும் கூறுகின்ற புராணமாகும்.

இவ்வாறான நூல் புராண படல மரபுக்கு ஆதாரமாக விளங்குகின்றது. சைவர்களின் சமயவாழ்க்கையிலும் தமிழ் இலக்கிய மரபிலும் பெரும் செல்வாக்கினையும் பெறுகின்றது. இலங்கையிலே இந்நூல் மிகுந்த ஆராமையுடன் போற்றிப் படிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**திருவிளையாடற் புராணம் :**

18ம் நூற்றாண்டிலேயே இந்நூல் தோற்றம் பெற்றது எனக் கருதலாம். பரஞ்சோதி முனிவரால் இப்புராண நூல் பாடப்பட்டது. மதுரை எனும் தலத்தின் மீது எழுந்த தல புராண வகையில் இப் புராணமும் ஒன்றாகும். புராண மரபின்படி சிவன் மதுரையில் அறுபத்து நான்கு திருவிளையாடல்கள் புரிந்ததாக கூறப் படுகின்றது. இத்திருவிளையாடல் வரலாறுகளையே இப்புராண நூல் கூறுகின்றது.

சிவனின் வீர தீரச் செயல்கள், அற்புதம், பக்தி, அடியார் பெருமை, திருக்கோயில் வழிபாடு என்பவற்றை இப்புராணத்தில் காணலாம். சிவபெருமான் அடியார்களுக்கு அருள் பாலிக்க மேற்கொண்ட செயல்கள், அவனுடைய திருவிளையாடல்களாகக் கருதப்படுகின்றன. இவை பெரும்பாலும் பல்லவர் காலத்தில் வாழ்ந்த நாயன்மார்களின் திருப்பாடல்களிலே எடுத்துரைக்கப் பட்டுள்ளன.

# மாமன்றச் செய்திகள்

## வசதி குறைந்த பிள்ளைகளைப் பராமரிக்கும் திட்டம்

கடந்த 2004ம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் ஏற்பட்ட கடல்கோள் அனர்த்தம், மற்றும் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் ஏற்பட்ட போர் அனர்த்தம் என்பவைகளினால் பாதிக்கப்பட்ட வசதி குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளைப் பராமரிக்கும் மாமன்றத்தின் திட்டத்திற்கு முதற் கட்டமாக தெரிவு செய்யப்பட்ட யாழ்ப்பாண மாவட்டத்தையும் கிழக்கு மாகாணத்தையும் சேர்ந்த பிள்ளைகளுக்கு கடந்த ஏப்ரல் மாதத்திலிருந்தும், முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட பிள்ளைகளுக்கு கடந்த ஜூன் மாதத்திலிருந்தும் மாமன்றம் நிதியுதவி வழங்கி வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் மொத்தமாக 41 பிள்ளைகள் உதவி பெறுகிறார்கள்.

யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட பிள்ளைகளுக்கான மாமன்றத்தின் முதலாவது கொடுப்பனவுக்குரிய காசோலைகள் கடந்த ஏப்ரல் மாதம் 23ம் திகதியன்று யாழ். நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடைபெற்ற திருநாவுக்கரசு நாயனார் குருபூசை நிகழ்வின்போது நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களால், சம்பந்தப்பட்ட பிள்ளைகளின் பெற்றோர்களிடம் வழங்கப்பட்டன.

கிழக்கு மாகாணத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட பிள்ளைகளுக்கான மாமன்றத்தின் முதலாவது கொடுப்பனவுக்குரிய காசோலைகள் கடந்த மே மாதம் 28ம் திகதியன்று மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் வைத்து இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமிஜி அஜராத்மானந்தா மகராஜ் அவர்களால் சம்பந்தப்பட்ட பிள்ளைகளின் பெற்றோர்களிடம் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வின்போது மாமன்றத்தின் துணைத் தலைவரும், மாமன்ற அங்கத்துவ சங்கமான மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றத்தின் தலைவருமான திரு. மு. பவளகாந்தன் அவர்களும் கலந்து கொண்டார்.

முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட பிள்ளைகளுக்கான மாமன்றத்தின் முதலாவது கொடுப்பனவுக்குரிய காசோலைகள் கடந்த ஜூலை மாதத்தில் முல்லைத்தீவு அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் அவர்கள் தலைமையில் அரச அதிபர் பணிமனையில் நடைபெற்ற நிகழ்வின்போது சம்பந்தப்பட்ட பிள்ளைகளின் பெற்றோர்களிடம் வழங்கப்பட்டன.

## வவுனியா ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய யாத்திரிகர் அன்னதான மடம் நிர்மாணப் பணி ஆரம்ப விழா (15.07.2006)

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் அங்கத்துவ சங்கமான வவுனியா, வெளிவட்ட வீதி ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய பரிபாலன சபையினால் ஆலயத்திற்கு அருகே புதிதாக யாத்திரிகர் அன்னதான மடம் ஒன்று அமைக்கப்படவிருக்கிறது. இந்தக் கட்டிடத்தின் ஒரு பகுதியை அமைப்பதற்கான நிதியுதவியை அகில இலங்கை இந்து மாமன்றம் வழங்குகிறது. இந்தக் கட்டிடத்திற்கான நிர்மாணப் பணி ஆரம்பவிழா, கடந்த ஜூலை 15ம் திகதியன்று நடைபெற்றது. ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலயத்தில் நடந்த விசேட பூசையைத் தொடர்ந்து இடம்பெற்ற இந்த வைபவத்தில் பிரதம விருந்தினராக மாமன்ற துணைத் தலைவரும், மாமன்ற சமூக நலன் குழுத் தலைவருமான திரு. சின்னத்துரை தனபாலா கலந்து கொண்டு சிறப்பித்தார். ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய பரிபாலன சபையின் தலைவர் திரு. வி. எஸ். தேவகுமாரன், செயலாளர் திரு. ஞா. கேதீஸ்வரன் மற்றும் பரிபாலன சபை உறுப்பினர்கள் உட்பட பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

ஆரம்பத்தில் கீழ் தளமும், முதலாவது மாடியையும் கொண்டதாக அமையவிருக்கும் மேற்படி கட்டிடத்தின் முதலாம் மாடியில் அன்னதான மடம் இருக்கும். இலங்கையின் தென்பகுதியிலிருந்து நீண்டதூர பயணமாக யாழ் குடாநாடு செல்லும் இந்து யாத்திரிகர்கள் தங்கிச் செல்வதற்கான வசதிகளையும் இந்த மண்டபம் கொண்டிருக்கும். தெய்வீக, பக்தி மயமான சூழலில் அமையவிருக்கும் இம்மடம் ஏ9 பாதையின் ஊடாக செல்லும் இந்து மக்களுக்கு பெரிதும் உதவவிருப்பதுடன், இந்துப்பெருமக்களை சர்வதேச மட்டத்தில் ஒன்றிணைக்கும் வகையிலும் இயங்கவிருக்கிறது. இந்த தகவல்களை ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய பரிபாலன சபையின் செயலாளர் திரு. ஞா. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

## வவுனியா ஸ்ரீசிந்தாமணி விநாயகர் ஆலய அன்னதான மடம் நிர்மாணப் பணி ஆரம்பவிழா (15.07.2006)










## சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை நிகழ்வு (02.08.2006)








**அகில இலங்கை இந்து மாமன்றமும், விவேகானந்த சபையும் இணைந்து நடத்திய சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை வைபவம் கடந்த ஆகஸ்ட் 2ம் திகதியன்று விவேகானந்த சபை மண்டபத்தில் தலைவர் திரு. ஏ. ஆர். சுரேந்திரன் தலைமையில் நடைபெற்றபோது திரு. வி. கணேசலிங்கம் திருமுறைப்பாடல் பாடுவதையும், அருகே விவேகானந்த சபை தலைவர் திரு. ஏ. ஆர். சுரேந்திரன், பொதுச் செயலாளர் திரு. க. இராஜபுவனீஸ்வரன் மற்றும் வைபவத்திற்கு வருகை தந்தவர்களுள் ஒருபகுதியினரையும் படங்களில் காணலாம்.**

நாம் வாழ்ந்துவரும் உலகத்தை அழிவிலிருந்து காப்பாற்ற நாம் அனைவரும் அமைதியைப் போற்றி அதைப் பாதுகாக்கும் எண்ணங்களை நினைத்து வரவேண்டும்.

(ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்)

# தாய்மையைப் போற்றும் நவராத்திரி

த. மனோகரன்

'அம்மா என்பது தமிழ் வார்த்தை, அது தான் குழந்தையின் முதல் வார்த்தை' என்பது ஒரு பாடல் வரி. குழந்தையின் முதல் வார்த்தையாக மட்டுமா அம்மா உள்ளது. குழந்தை உருவாகும் கருவறையைத் தாங்கி நிற்பவளும் அந்த அம்மா அல்லவா? அம்மா அதாவது உலக உயிரினங்களெல்லாம் உற்பத்தியாகும் திருவிடத்தைச் சுமந்து நிற்கும் தாயை நாம் இறையுருவிலே போற்றுகின்றோம். இது நமது சமயத்தின் தனிச்சிறப்பு.

இந்து சமயத்திலே தாய்மையைப் பெண்மையைப் போற்றும் பண்பு ஆதிமுதல் இருந்து வரும் மரபு. உலக இயக்கத்தின் சக்தியாக தாய்மையே திகழ்கின்றது என்பது நமது நம்பிக்கை. அதனால்தான் எல்லாச் சக்திகளுக்கும், இயக்கத்திற்கும் தாய்மை நிலை தந்து வழிபாடு செய்கின்றோம்; வேண்டுதல் செய்கின்றோம்.

ஆணுக்கும், பெண்ணுக்கும் சமத்துவம் வேண்டுமென்று பல்வேறு நிலைகளில் குரல் கொடுக்கப்பட்டு வரும் காலம் இக்காலம். ஆனால், ஆணுக்கும் பெண்ணுக்கும் என்றோ சமத்துவம் தந்து விட்டது இந்து சமயம். எங்கும் நிறைந்தவர், எல்லாம் அறிந்தவர், என்றும் நிலையான ஆதியும், அந்தமும் இல்லா அருட்பெருஞ்சோதியாகத் திகழ்பவர் எம் பெருமான் சிவன். உலக இயக்கமே சிவபிரானின் இயக்கமாகக் கொள்வது இந்து சமய தத்துவம். அந்தச் சிவனின் இயக்க சக்தியாக இயங்குவது பெண்மை அதாவது உமையம்மை.

அவனின்றி ஓரணுவும் அசையாது என்பர். அந்த அவனாகிய சிவனையே அசைத்து, இயக்கும் சக்தியாக உமையவள் இருக்கின்றாள் என்ற நமது நம்பிக்கையின் மூலம் பெண்மையின், தாய்மையின் பெருமையைத் தெளிவுறுத்துகின்றது நமது நெறி.

அர்த்த நாரீஸ்வரர் தத்துவத்தின் மூலம் ஆண்பாதி, பெண்பாதி அதாவது ஆணுக்கும், பெண்ணுக்கும் சமத்துவம் தந்து, இறையுருவிலே போற்றி வழிபடும் பண்பு இந்துக்களுக்கேயுரிய தனிச் சிறப்பு.

ஒவ்வொரு இயக்கத்திற்கும், செயற்பாட்டிற்கும் தாய்மையை முன்னிருத்தித் தொழுகின்றோம். அன்னையுருவிலே இறை சக்தியின் அருளை நாடி நிற்கின்றோம். சகல சக்திகளுக்கும் வித்தாக, மூலாதாரமாக இருப்பது தாய்மை என்ற நம்பிக்கையின் அடிப்படையிலே, சகல தெய்வத்திருவுருவங்களுடனும் இணைந்ததாக ஆணும், பெண்ணும் இருப்பதைக் காண முடிகின்றது.

இந்த வகையிலே நவராத்திரி விரதம் சிறப்பு பெறுகின்றது. தாய்மை வழிபாட்டிற்கு முக்கியத்துவம் தருகின்றது.

பகுத்தறிவு கொண்ட மனித குலம் பண்பட்ட, நிம்மதியான வாழ்வுவாழ மூன்று தேவைகளுள்ளன. அவை வீரம், செல்வம், கல்வி என்பவையாகும். இம் மூன்றும் இருந்துவிட்டால் வளமாக, நலமாக இவ்வுலகில் வாழவழியுண்டு. இம் மூன்று செல்வங்களை, நன்மைகளைப் பெறும் பொருட்டு இறைவழிபாடு செய்வதே நவராத்திரி விரதத்தின் நோக்கமாகும். ஒன்பது நாட்கள் நவராத்திரி விரதம் கைக்கொள்ளப்படுகின்றது. முதல் மூன்று நாட்களும் வீரத்தின் சக்தியாக விளங்கும் துர்க்கையம்மன் போற்றி வழிபாடுசெய்யப்படுகின்றாள். அடுத்து வரும் மூன்று நாட்களும் செல்வத்திற்கதிபதியான மகாலட்சுமி போற்றப்படுகின்றாள். இறுதி மூன்று தினங்களும் கல்விக்கதிபதியான சரஸ்வதிதேவி போற்றப்படுகின்றாள்.

துர்க்கா தேவியை சிவனின் சக்தியாகக் கொள்கின்றோம். சிவனுடன் இணைந்துள்ள அம்மையைப் பல்வேறு திருநாமங்களால் அழைக்கின்றோம். பார்வதி, பரமேஸ்வரி, அம்பிகை, காமாட்சி, மீனாட்சி, கௌரி, உமையவள் இவ்வாறு பலதிருநாமங்கள் சிவசக்தியாகிய அம்மைக்கு உள்ளது.

வீரம் என்றால் என்ன? உடல் வலிமை மட்டுமா வீரம்? இல்லை. மனவலிமையும் வீரமாகும். துர்க்கை அம்மனைத் துதித்து, வழிபட்டு நாம் கேட்கும் வரம் உடல் வலிமை மட்டுமல்ல உளவலிமையுமாகும். உடல் வலிமை இருந்து விட்டால் மட்டும் போதாது. உளவலிமையும் வேண்டும். எதையும் தாங்கும் சக்தி, உளவலிமையே வாழ்வின் நல்லியக்கத்திற்கும், நிம்மதிக்கும் வழிசெய்கின்றது.

துன்பங்கள், துயரங்கள் நமது உள்ளத்திலே குடிகொண்டு நமது நிம்மதியான வாழ்வைச் சிதைக்காதிருக்க மனவலிமை வேண்டும். அதைத் தருபவள் அன்னை துர்க்காதேவியே.

நாம் தினமும் பல்வேறுபட்ட துன்பங்களுக்கு முகம் கொடுக்கின்றோம். விரும்பத்தகாத, வேண்டப்படாத அவலங்கள் எம்மைச் சூழ்ந்து வாட்டுகின்றன. இவற்றை எதிர்கொண்டு முறியடித்து முன்னேற மனவலிமை வேண்டும். மனவலிமை அதாவது நம்பிக்கை இருந்தால் மட்டுமே உடல் வலிமையைக் காட்டலாம். மனவலிமை அற்று விட்டால் உடல் வலிமையால் பலனில்லை.

மனவலிமையை, எதையும் தாங்கும் சக்தியைப் பெற்று வாழ்வில் எதிர்நீச்சல் போட்டு முன்னேற துர்க்கை அம்மனின் அருள் வேண்டும். வீரத்தின் உறைவிடமாகப் போற்றப்படும் துர்க்கையின் திருவருளால் அச்சம், அவதி நீங்கி அமைதியாக வாழ மனவலிமையும் அத்தோடு உடல் வலிமையும் கிடைக்க வேண்டும் என்று நவராத்திரி தினங்களில் முதல் மூன்று தினங்களும் விரதமிருக்கின்றோம்.

நம்மை ஆட்டிப்படைக்கின்ற அரக்க நிலை அழிந்து நாட்டிலே நல்லாட்சி நிலவவும், சட்டவிதி முறைகள் சமத்துவத்தை நிறுவவும், முட்டவரும் கொடுவினைகள் எட்டியே விலகிவிடவும், போட்டி, பொறாமைகள் பூண்டோடு அழிந்து விடவும், எம் வாட்டம் நீங்கி வாழ்வில் மலர்ச்சியும் எழுச்சியும் நிலை பெற்றுவிடவும் கருணை கிட்ட வேண்டுதல் செய்வது விரத்தின், வெற்றியின் உறைவிடமான, திருவுருவான துர்க்கையம்மன் வழிபாடாக அமைகின்றது.

நவநாட்களில் அடுத்துவரும் மூன்று நாட்களும் காக்கும் கடவுளான திருமாலின் துணைவியாகப் போற்றப்படும் மகாலட்சுமிக்கானது. மகாலட்சுமியாகிய அன்னை ஒவ்வொரு இயக்கத்திற்கும் ஒவ்வொரு திருநாமம் கொள்கின்றாள்.

பூமியைத் தாங்கும்போது அன்னை பூமாதேவி என அழைக்கப்படுகின்றாள். புத்திரப் பேறு வழங்கும்போது சந்தான லட்சுமியாகவும், மனவுறுதிதரும் வேளை வீரலட்சுமியாகவும், வெற்றிதரும்போது விஜயலட்சுமியாகவும், தைரியம் தரும்போது தைரிய லட்சுமியாகவும், தனம் தரும் போது தனலட்சுமியாகவும், பயிர்களின் செழிப்பின்போது தானிய லட்சுமியாகவும், மற்றும் கஜலட்சுமி, ஆதிலட்சுமி, ஐஸ்வரலட்சுமி இவ்வாறு பல திருநாமங்களுடன் தேவியார் அழைக்கப்படுகின்றார்.

செல்வம் என்னும்போது பொருட் செல்வத்தை மட்டும் என்று பலர் நினைத்து விடுகின்றனர்.

*"அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்*
*பூரியார் கண்ணும் உள"*

என்பது வள்ளுவர் வாக்கு.

ஒருவர் தவறான வழியிலும் பொருளீட்டலாம். செல்வந்தராகக் காட்டிக் கொள்ளலாம். அந்தச் செல்வம் நிலையானது அல்லது பெருமை தருவது என்று கூறமுடியாது. மாபெரும் செல்வந்தர்களாக இருந்தாலும் நற்பண்பு, தேகசுகம், புத்திரப் பேறு, அயலவர் உறவு போன்ற பெறுமதிமிக்க செல்வங்களைக் கொண்டவர்களாகவும் திகழ வேண்டும்.

வாழ்க்கையை வழிநடத்த ஏற்ற தொழில், நல்ல குடும்ப உறவு, நிம்மதியானவாழ்வு, உற்றார், சுற்றத்தாரின் போற்றுதல் போன்றவையும் செல்வங்களே. நாட்டிலே நல்ல மழை பொழிய வேண்டும். விளைநிலம் செழிக்க வேண்டும். பஞ்சம், பசி, பட்டினி நீங்கவேண்டும்.

இவையும் செல்வத்தின் பாற்பட்டவையே. இவ்வாறான செல்வங்களை தந்தருள வேண்டி அன்னை மகாலட்சுமியைத் துதிக்கும் தினங்களாக மூன்று தினங்கள் அமைகின்றன.

பசித்தவன் பசிபோக்கும் பண்பு, மனிதகுல நாகரிகம், பட்டினி போட்டு மனிதரை வதைப்பது இழிசெயல். பசி பட்டினியால் பால்குடிமாறாத பாலகர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், வயோதிபர்கள், நோயாளர்களென்று பல்வேறு தரத்தோர் துடிதுடித்துக் கொண்டிருக்கும் நம்நாட்டில் காக்கும் கடவுளான திருமாலின் துணைவியாரே தீர்ப்புச் சொல்ல வேண்டும். பசித்திருப்போரின் துடிதுடிப்பு ஒரு பக்கம், பசிபோக்கும் உணவைத் தடுப்போர் மறுபக்கம். இயற்கை அன்னையாக வீற்றிருக்கும் மகாலட்சுமி அன்னையே பூமாதேவி தாயே உனது தீர்ப்பை நாடி நிற்கின்றோம் என்று இம்மூன்று தினங்களில் அன்னையிடம் வேண்டுதல் செய்வோம்.

அதர்மம் அழிய தர்ம நிலை தோன்ற மகாலட்சுமித் தாயாரின் அருள் வேண்டும். அன்னையின் துணைவரான திருமாலின் பார்வை படட்டும் என்று பிரார்த்திப்போம்.

பொறுமையின் சின்னமாகத் திகழும் பூமாதேவி அம்மையே இந்த பூமியிலே நடக்கும் அட்டூழியங்களை அடியோடு அகற்றிவிட சிலிர்த்தெழுவாய் என்று மனமுருகி உன்னை வழிபடுகின்றோம். பஞ்சபூதங்களைக் கிளர்ந்தெழச் செய்து ஆணவம், அகங்காரத்தைத் துடைத்தெறிய எழுந்தருள்வாய் என்று உன் திருவடியைத் தொழுது நிற்கின்றோம் என்பது எமது பிரார்த்தனையாக உள்ள கால கட்டம் இது. அன்னை தன் திறனால் நிம்மதி என்னும் செல்வத்தை உலகிற்கு வழங்குவாள் என்று நம்புவோம். சரணடைந்தவர்களைக் காப்பவள் அல்லவா அன்னை.

இறுதி மூன்று தினங்களும் படைக்கும் கடமை கொண்ட பிரமதேவனின் துணையான சரஸ்வதிதேவியாருக்குரியது. படைக்கப்பட்ட சகலதும் வாழ்வை நடத்த அறிவு தேவை. மனித குலமாகட்டும், ஏனைய உயிரினங்களாகட்டும் அவற்றின் தன்மைக்கேற்பவாழ அவ்வவற்றிற்கு உரிய புத்தியைத் தருபவள் சரஸ்வதிதேவியார்.

மிருகங்களுக்கும், பறவைகளுக்கும் ஏனைய உயிரினங்களுக்கும் இரைதேட, உறைவிடம் நாட புத்தி கொடுக்கும் அன்னை ஆறாவது அறிவாகிய பகுத்தறிவைக் கொண்ட மனிதகுலத்திற்கு அறிவைத் தருபவளாவாள்.

புத்தகக்கல்வி, செய்முறைக் கல்விமட்டும் கல்வியாகாது. வாழ்வை வளமுடனும், நலமுடனும் நடத்திச் செல்வதே அறிவின் அடிப்படை. தானும் வாழ்ந்து மற்றவர்களையும் வாழச் செய்யும் பண்பட்ட மனப்பாங்கே நல்லறிவின் பாங்கு.

அறிவு என்பது ஆக்கத்திற்குரியது. இன்று அறிவு வளர்ச்சியென்று கூறிக்கொண்டு அழிவுகள் செய்வதற்கான கருவிகள் செய்யப்படுகின்றன. அழிவுதரும் அணுக்குண்டுகளையும், ஆயுதங்களையும் செய்யும் அறிவா அறிவு? இல்லை. உலகின் நலனுக்காக மனிதகுல மேம்பாட்டுக்காக புத்தியைப் பயன்படுத்துவதே அறிவு. திசைமாறித் தடுமாறும் மனித குலத்தின் அறிவை சீர்செய்ய சரஸ்வதி தேவியைப் போற்றித் தொழுவோம்.

ஏனைய உயிரினங்களுக்கு இப்படித்தான் வாழவேண்டும் என்ற புத்தியைக் கொடுத்த அன்னை மனித குலத்தைத் தாமே சிந்தித்து வாழும் வழியைத் தீர்மானிக்கும் பகுத்தறிவைத் தந்துள்ளாள்.

நல்வழி சிந்தித்துச் செயற்பட அன்னை தந்த புத்தியை மனிதகுலம் தவறாகப் பயன்படுத்தத் தொடங்கிவிட்டது. அன்பு, பண்பு, பணிவு, ஒழுக்கம், பாசம், ஒற்றுமை, ஒத்துழைப்பு, கருணை முதலான நற்குணங்கள் மனித மனங்களிலிருந்து வெகுதூரம் சென்று விட்டன.

போட்டி, பொறாமை, பகை, வஞ்சம், ஆணவம், அகங்காரம் போன்ற தீய குணங்கள் மனித குலத்தில் தலை தூக்கிவிட்டன. இந்நிலை மாற வேண்டும். மாற்றப்படவேண்டும். இதற்கு அறிவின் தெய்வமான சரஸ்வதி தேவியின் அருள்கிட்டவேண்டும்.

மனித குலத்திடையே சிந்தனைச் தெளிவு, சீரிய பார்வை, பண்பட்ட நடத்தை போன்றவை மிளிர சரஸ்வதி தேவியைப் போற்றித் தொழுவோம். இதற்காக அன்னைக்கு ஒதுக்கப்பட்டுள்ள மூன்று தினங்களில் விரதமிருந்து தொழவேண்டும்.

மனிதகுலம் நல்வழியில், சிறப்பாக வாழ அறுபத்தி நான்கு கலைகளைத் தந்துள்ளார் அன்னை. அக்கலைகள் மேன்மையுற்றால் உலகில் தீமைகள் அகன்று நன்மைகள் மேலோங்கிவிடும்.

அடக்கி ஆள்பவர்களதும், ஒடுக்கி, அடக்கி அழிப்பவர்களதும் சிந்தனையில் மாற்றம் வரவேண்டும் என்று தேவியைத்தொழ உகந்த காலம் சரஸ்வதி பூசைக்காலம்.

வெறும் சம்பிரதாயச் சடங்குகளுடன் மட்டும் நின்று விடாது தத்துவங்களை உணர்ந்து இறைவழிபாடு செய்தல் வேண்டும். இந்து சமய விழாக்கள் தத்துவார்த்தமானவை. அதை மறந்து செய்யப்படும் விழாக்கள், வழிபாடுகளால் பயனில்லை.

புத்தகங்களை வாங்கி அடுக்கிவைத்து அழகு பார்ப்பதால் பயனில்லை. அதேபோன்று சமய நிகழ்வுகளை சம்பிரதாயமாகக் கொள்வதால் ஆவது ஒன்றுமில்லை. மனப்பூர்வமாக செய்யப்படும் இறைவழிபாடே மனநிறைவைத் தரும்.

எனவே, முப்பெருந்தேவிகளான அன்னையரின் அருள் நாடி பக்தி பூர்வமாக, மன ஒருமைப்பாட்டுடன் வழிபாடு செய்தால் பலன் நிச்சயம்கிட்டும்.

நாடிச் சென்று அன்னையின் திருவடியைப் பற்றிவிட்டால் எமக்குத் துன்பமில்லை, துயரமில்லை. இன்பம் நிறைவாழ்வு நிலைத்திடும். கொலைவெறியும் கொடுபகையும் அன்னையர் முன்னால் செயலிழந்து விடும். வெந்து துடித்து உழலும் எமது வாழ்வில் புதிய எழுச்சியேற்படும்.

கருணைமிக்க அன்னையரின் அருளால் நாடு நலம் பெற, நம்வாழ்வு வளம் பெற வேண்டுதல் செய்வோம். தாயாக இருந்து எம்மை அன்னையர் காப்பர், வாழ நல்ல வழிகாட்டி வழிநடத்துவர் என்று நம்பிக்கை கொள்வோம்.

அன்னையரின் அருள் நாடி நவராத்திரி நாட்களில் மட்டுமல்ல தினமும் வழிபாடு செய்தல் வேண்டும். எங்குமே, எதிலுமே தாய்மையைக் காணும் நாம் நம்மைத் தாங்கி நிற்கும் பூமியைத் தாயாகக் காண்பது போல மழைபொழிந்து நிலம் காக்கும் தாயாக மாரியம்மனைப் போற்றுவது போல இயற்கையையே தாயாகப் போற்றுகின்றோம்.

அது மட்டுமா? பெற்றதாய் தனது குழந்தைகளுக்குப் பாலூட்டுவது போன்று தனது கன்றுக்கு மட்டுமல்ல மனித குலத்திற்கு தன் பாலைத் தந்து பசியாற்றிப் போசிக்கும் பசுக்குலத்தையும் தாயாகப் போற்றுகின்றோம். வணங்கி வழிபாடு செய்கின்றோம். கோமாதா என்று அழைக்கின்றோம்.

உலக இயக்கத்திற்கு உந்துதல் தந்து செயற்படுத்துவது தாய்மை. இத்தாய்மையை நினைவு கூரும் நாட்களாக ஆண்டில் ஒருமுறை வருவது நவராத்திரி விரதம்.

நவராத்திரி நாட்களை அடுத்து வரும் நாள் விஜயதசமியாகும். அன்னையரின் அருளால் தொடங்கும் கருமங்கள், செய்யும் கருமங்கள்யாவும் சிறப்புடன் நிறைவேற வேண்டும் என்ற வேண்டுதலுடன் கூடியவழிபாடே விஜயதசமி தின வழிபாடு.

வித்தியாரம்பம், புதுப்பணி தொடங்கல் ஆகியவற்றுடன் செய்யும் தொழில் மேன்மையுற, கல்வியில் சிறப்புடைய, வாழ்வில் வளங்காண மேற்கொள்ளும் வழிபாடு விஜயதசமி வழிபாடாக அமைகின்றது.

தாயாக இருந்து தரணியைக் காக்கும் அன்னையரின் திருக் கருணையால் இனி எமக்குத் துன்பமில்லை, துயரமில்லை. இன்பம் நிறைந்த நிம்மதியான, வளமும், நலமும் பொருந்திய வாழ்வு நிலைபெற்றுவிடும் என்று நம்பிக்கையுடன் எதிர்காலத்தை எதிர்கொள்வோம்.

நம்பினோர் கெடுவதில்லை என்ற கூற்றுக்கமைய எமது நம்பிக்கை உறுதிபெறட்டும். உயர்வளித்து, மீட்சிபெற அம்மையரின் அருள் கிட்டும். சத்தியம் நிலைத்து நிற்க, சாதனைகள் மேலோங்கிவெல்ல, வெற்றிகள் வந்துசேர, வேதனை அகற்றி ஒட்ட ஆற்றலைத் தந்தெமக்கு ஆறுதல் தருவீர் அம்மா என்று பிரார்த்திப்போம்.

## பவளவிழா காணும் இராமகிருஷ்ண மிஷன்



இராமகிருஷ்ண மிஷன் இலங்கையில் தனது சேவைகளை ஆரம்பித்து பவளவிழா காணும் இவ்வேளையில், கடந்த எழுபத்தைந்து வருட காலத்தின் சிறப்பான பணியை அகில இலங்கை இந்து மாமன்றம் போற்றுகின்றது.

உலகியலில் சிக்கித் தவிக்கும் மனித மனங்களுக்கு நிழலையும், உலகளாவிய ரீதியில் ஆன்மீகப் பேரொளியையும் பரவச் செய்துகொண்டிருக்கின்ற பெரும் பணியில் இராமகிருஷ்ண மிஷன்கள் ஈடுபட்டுள்ளன. அந்த வகையிலே 1929ம் ஆண்டில் இலங்கையிலும் பணி ஆரம்பமானது. இராமகிருஷ்ண மிஷனின் இலங்கைக் கிளை கொழும்பு – வெள்ளவத்தையிலும், இதன் மற்றொரு பிரிவாக மட்டக்களப்பு, கல்லடி – உப்போடையிலும் இயங்கி வருகின்றன. மக்கள் சேவை ஊடாக ஆன்மீக மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதில் பெரிதும் செயலாற்றிவரும் இந்த நிறுவனம் கடந்த காலங்களில் இலங்கை வாழ் மக்களுக்கு ஆற்றியிருக்கும் பல்வேறுபட்ட சேவைகள் அனைத்தும் காத்திரமானவையாகும்.

அகில இலங்கை இந்து மாமன்றத்திற்கும் இராமகிருஷ்ண மிஷனுக்கும் இடையிலான நீண்டகால உறவும், தொடர்பும் நெருக்கமானவை. இராமகிருஷ்ண மிஷனின் இலங்கைக் கிளைத் தலைவராகப் பணியாற்றும் சுவாமிஜி ஆத்மகனானந்தா மகராஜ் அவர்களது தலைமையிலான சிறப்பான சேவைகளை மாமன்றம் பாராட்டிப் போற்றுகிறது. மாமன்றத்தின் சிறப்பு நிகழ்வுகளின்போது சுவாமிஜி அவர்களும் கலந்து கொண்டு ஆசியுரை வழங்கி சிறப்பித்து வருவது மாமன்றத்திற்கு பெருமையையும் பெருமகிழ்வையும் ஏற்படுத்துகிறது.

மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவராக நீண்ட காலமாகவிருந்து பெரும்பணியாற்றிய சுவாமிஜி ஜீவானானந்தா மகராஜ் அவர்கள் இறையடி சேர்ந்த பின்னர், இப்பொழுது சுவாமிஜி அஜராத்மானந்தா மகராஜ் அவர்கள் தலைவராகவிருந்து மக்கள் பணியை சிறப்பாக முன்னெடுத்துச் செல்கிறார்.

கொழும்பிலும், மட்டக்களப்பிலும் இயங்கும் இராமகிருஷ்ண மிஷன் ஊடாக மக்களுக்கான மருத்துவ உதவி, வறிய மாணவர்களுக்கான வருடாந்த புலமைப்பரிசில், வன்செயல் மற்றும் இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான வீடமைப்புத் திட்டங்கள், அறநெறிக் கல்வி போதனை போன்ற பல்வேறுபட்ட சமூக நலத் தி...ங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

இராமகிருஷ்ண மிஷனின் இத்தகைய ஆரோக்கியமான உயரிய பணிகள் மென்மேலும் தொடரவேண்டும் என அகில இலங்கை இந்து மாமன்றம் திருவருள் துணைகொண்டு போற்றி வாழ்த்துகிறது.

# நானிலம் எங்கும் நந்திக்கொடி ஏற்றுவோம்

செந்தமிழ் வாரிதி, பேராசிரியர்
டாக்டர் இரா. செல்வக்கணபதி எம்.ஏ, பி.எச்.டி
சென்னை

*ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை*
*இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை*
*நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்*
*புந்தியில் வைத்துஅடி போற்று கின்றேனே*

**நந்தியும் கொடியும் :**

சைவத்திருக்கோயில்களில் பத்துநாள் பெருந்திருவிழா நடைபெறும். அதன் முதல் நிகழ்ச்சி கொடியேற்றம். முதல் திருநாளில் சிவாலயங்களின் வாயிலில் கம்பீரமாக எழுந்து நிற்கும் கொடிமரங்களில் மந்திர உச்சாடனங்களுடன் கொடி ஏற்றப்படும். அந்தக்கொடியை உற்று நோக்கினால் அதில் நந்தியினுடைய திருவுருவம் பொறிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். சிவனுக்கு உரிய கொடி நந்திக்கொடி. நந்தி அதிகார நந்தி என்றும் குறிக்கப்படுவார். அவர் அதிகாரம் பெற்றே திருவிழாத் தொடங்கும். கொடி இறக்கத்துடன் திருவிழா நிறைவுக்கு வரும். சிவபெருமானுக்கு வாகனமும் நந்தியே. கொடிச் சின்னமும் நந்தியே. இதனைப் புறநானூற்றின் கடவுள் வாழ்த்தில் பாரதம் பாடிய பெருந்தேவனார் பதிவு செய்துள்ளார். "கண்ணி கார்நறும் கொன்றை" என்று தொடங்கும் அப்பாடலில்,

*"ஊர்தி வால்வெள் ஏறே சிறந்த*
*சீர்கெழு கொடியும் அவ்வேறு என்ப".*

என்ற வரிகள் இடம்பெற்றுள்ளன. ஏறு என்ற பழந்தமிழ்ச் சொல்லுக்குக் காளை என்பது பொருள். வள்ளுவரும் காளையை "ஏறுபோல்பீடு நடை" என்றும், "அரசருள்ஏறு" என்றும் குறித்துள்ளமை ஒப்பு நோக்கத்தக்கது.

**நந்தியம்பெருமான் :**

நந்தியை நந்தியம்பெருமான் என உயர்த்திக் கூறுவது சைவ மரபாகும். நந்தியம்பெருமான் அருள் வரலாறு குறித்தும் ஆற்றல் குறித்தும், அருட்கருணை குறித்தும் ஏராளமான செய்திகள் வடமொழி மற்றும் தமிழ் நூல்களில் காணப்படுகின்றன. நந்தியம்பெருமான் இடது கையில் சூலமும், வலது கையில் செபமாலையும் கொண்டவர். ஒரு குரங்கால் உன் நகர் அழியும் என்று இராவணனுக்குச் சாபமிட்டவர் நந்தி. உலகம் முழுவதும் அழிந்தொழிந்த காலத்தில் சிவபெருமானிடம் அடைக்கலம் புகுந்து அவர் வாகனமாக நின்று வாழ்வு பெற்றவர். நந்தியம்பெருமான் சிவனை நோக்கிக் கடுந்தவம் செய்து மலை வடிவம் பெற்று ஸ்ரீ பர்வதமாய் (இமயம்)ச் சிவனைத் தாங்கியவர். திருமாலுக்குச் சிவபெருமானின் பெருமைகளை எடுத்துரைத்தவர்.

**வரலாற்றில் நந்தி :**

நந்தி என்ற பெயர் இந்தியநாடு முழுவதும் நன்கு அறியப்பட்டது. வட இந்தியாவில் ஒரு அரச மரபை நந்தர்கள் எனக் குறிப்பர். நந்தி என்பது பெண்களுக்கும் பெயராகச் சூட்டப்பட்டது. புராணத்தில் அருஷன் என்பான மனைவிபெயர் நந்தி. பராசர முனிவரின் மகன் பெயர் நந்தி. தமிழ் நாட்டில் பல்லவ வேந்தர்கள் பலரது பெயர்களில் நந்தி என்ற பெயர் இடம்பெற்றுள்ளது.

*"பல்லவர் தோன்றல் பைந்தார் நந்தி"*
*"பல்லவர் கோன் நந்தி"*
*"அமரர் கோமான் அடுபோர் நந்தி"*

என்றெல்லாம் பல்லவர் குலத்தில் வந்த ஆறைப்பதிக் காவலன் ஒருவன் குறிக்கப்படுகிறான். பல்லவர் குலத்தில் எட்டாம் தலைமுறையுள் வந்த ஓர் அரசன் நந்தி போத்தரையன் எனக் குறிக்கப்படுகிறான்.

**நந்தித் தலங்கள் :**

நந்திகள் நால்வர் என்பது திருமந்திரத்தால் தெரிய வருகிறது. 1. சிவயோகமாமுனி 2. பதஞ்சலி, 3. வியாக்ரபாதமுனிவர். 4. திருமூலர் என்போர் அவர்கள். இராமன் பாதுகையை வைத்துப் பரதன் பூசித்த இடம் நந்தி கிராமம் என இராமாயணத்தில் குறிக்கப்படுகிறது. திருத்தணிமலை ஏறும்பாதையில் நந்திக்குகை என்ற ஒரு குகை இன்றும் உள்ளது. தென்னாட்டில் பாலாறும், வடபெண்ணை ஆறும் உற்பத்தியாகும் இடம் நந்தி வர்க்கம் எனப்படுகிறது. இது மைசூர் பகுதியில் அமைந்துள்ளது. நந்திதேவர் செந்நிறமுடையவர் முக்கண்கொண்டவர் சடைதரித்தவர் நான்கு கைகளை உடையவர். அவற்றுள் செபமாலை, சூலம், அபயம், வரதம் காணப்படும். நந்தி தேவர் செய்த நாத ஒலியால் உண்டானது நந்தி நாதோத்பவம் என்ற நதி. இது காசியில் உள்ளது. ஸ்ரீசைலத்தில் நந்திதேவர் தவம் செய்த இடம் நந்தி மண்டலம் என வழங்கப்படுகிறது.

**சைவம் தந்த கொடை :**

கொடியைச் சிறப்பித்தல் கடவுள் வாழ்த்தாகக் கருதப்பட்டது என்பதைத் தொல்காப்பியம் பதிவு செய்துள்ளது.

*"கொடிநிலை கந்தழி வள்ளி மூன்றும்*
*கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே".*

என்பது தொல்காப்பிய நூற்பா. மூவர் தேவர்கொடிகளோடு அரசன் கொடியை உவமித்துப்பாடும் ஒரு துறை "கொடிநிலை" எனப் புறப்பொருள் வெண்பாமாலையால் குறிக்கப்பட்டுள்ளது. சேர, சோழ, பாண்டியர்கள் முறையே தங்கள் கொடிகளில் வில், புலி, கயல் எழுதியிருந்தனர் என்ற பதிவும் தொல்காப்பியத்தில் உள்ளது. கொடி ஏற்றுதல், உலாவருதல், விழாக்காணல் என அரசர்களும், செல்வர்களும் பின்பற்றி வரும் மரபுகள் எல்லாம் சமய மரபுகளின் தாக்கங்களால் அமைந்தன என்றே தோன்றுகின்றன.

## ஏறாதகொடி ஏறியது :

சைவசித்தாந்தச் சாத்திர நூல்கள் பதினான்கு. இவற்றை மெய்கண்ட சாத்திரம் எனக் குறித்தல் மரபு. இவற்றுள் எட்டு நூல்களை இயற்றியவர் கொற்றவன்குடி உமாபதிசிவாசாரியார். இவர் தில்லைவாழ் அந்தணர் திருமரபில் வந்தவர். இவர் நூல்களுள் ஒன்று கொடிக்கவி என்பது. இந்நூல் தோற்றம் கொண்டமை பற்றி ஒரு வரலாறு கூறப்பட்டு வருகிறது. தில்லைச் சிற்றம்பலவனின் திருவாதிரைத் திருவிழாவின் தொடக்கமாகத் தீட்சிதர்கள் நந்திக்கொடி ஏற்ற முயன்றனர். யாது காரணத்தாலோ கொடி ஏறவில்லை. பலவாறு முயன்றும் முடியாது போகத் தீட்சிதர்கள் திகைத்து நின்றனர். தில்லை அம்பலவன் திருவருளால் அசரீரி ஒன்று எழுந்து யாவரும் கேட்க ஒலித்தது. "இங்கு உமாபதி வந்தால் கொடி ஏறும்" என்ற ஒலிகேட்டு, தீட்சிதர்கள் அவரைத் தருவித்தனர். தில்லைக்கூத்தன் திருவருள் நினைந்து உமாபதிசிவம் ஐந்து வெண்பாக்கள் பாடினார். கொடி ஏறிற்று. அந்த வெண்பாக்களின் தொகுதியே கொடிக்கவி என்பது. இதனைக் கொடிப்பாட்டு என்றும் குறிக்கின்றனர்.

## கொடிக்கவி :

சிவாலயங்களிலும் பொதுவிழாக்களிலும் நந்திக்கொடி ஏற்றும் போது கொடிக்கவி பாடுவது பழக்கத்தில் உள்ளது. அஞ்செழுத்து, எட்டெழுத்து, ஆறெழுத்து, நாலெழுத்து என்றெல்லாம் பலவாறு பேசப்படும் பல்வேறு இறையவர் திருநாமங்கள் எல்லாம் - இன்னது என்பதையும், அவற்றின் பொருள் இவை என்பதையும் வெளிப்பட எடுத்துரைப்பதே நந்திக்கொடி. இதனை.

*அஞ்செழுத்தும் எட்டெழுத்தும் ஆறெழுத்தும்*
*நாலெழுத்தும்*
*பிஞ்செழுத்தும் மேலைப் பெருவெழுத்தும் -*
*நெஞ்சமுழுத்திப்*
*பேசும் எழுத்துடனே பேசா எழுத்தினையும்*
*கூசாமல் காட்டக் கொடி*

என்ற கொடிக்கவிப் பாடல் எடுத்துரைக்கிறது.

## நந்தித் திருத்தலம் :

சோழவளநாட்டையே ஒரு சிவாலயமாக உருவகிக்கும் முறை ஒன்று உள்ளது. திருவிடைமருதூர் மகாலிங்கப் பெருமானை மூலவராகக் கொண்ட அந்த அமைப்பில் திருவாவடுதுறை நந்தியம் பெருமான் சூலமாகக் குறிக்கப் பட்டுள்ளது. அங்குள்ள சிவாலயநந்தி பேரழகுமிக்கது. தமிழகத்தில் மிகப்பெரிய நந்தி தஞ்சாவூரில் உள்ளது. நந்தியம்பெருமான் திருமணம் திருவையாற்றில் நடைபெறுகிறது. நந்தி விலகியதலம் திருப்புன்கூர் என்பது. நந்தி வரலாற்றோடு தொடர்புடைய தலங்கள் பல தமிழகத்தில் உள்ளன.

## நந்திக்கொடி கட்டுவோம் :

ஈழத்திலும், தமிழ் நாட்டிலும், சைவசமய விழாக்களில் நந்திக்கொடி ஏற்றும் மரபு நிலவிவருகிறது. ஒவ்வொரு சைவர்கள் வீட்டு வாசலிலும் நந்திக்கொடி பட்டொளி வீசிப் பறக்க வேண்டும். சைவர்கள் தங்கள் இல்லத்துத் திருமணங்களிலும், விழாக்களிலும் நந்திக்கொடி ஏற்றிப் பின் விழாத் தொடங்க வேண்டும். மாளிகைகளிலும், ஊர்திகளிலும் நந்திகொடி பறக்கவிடப்படவேண்டும். இது சிவநெறியினர் இல்லம், இது சைவர்கள் விழா, இவன் சைவன் என்பதை நந்திக் கொடி மூலம் உறுதிசெய்தல் வேண்டும்.

## அன்பர் தனபாலா :

ஈழத்திரு நாட்டிலிருந்து நந்திக்கொடியை உலகெங்கும் பரப்பும் பெருமுயற்சியைச் சைவத்திருவாளர் சின்னத்துரை தனபாலா மிகச் சிறப்பாகச் செய்து வருகிறார். கொழும்பில் நடைபெற்ற இரண்டாவது உலக இந்து மாநாட்டிலும், லண்டனில் நடைபெற்ற சைவமுன்னேற்றச் சங்கக் கிளையின் வெள்ளிவிழாவிலும் திரு. தனபாலாவின் தொண்டு பட்டொளிவீசியது. அவர் நன்முயற்சிகளுக்கு நாமும் துணை நிற்போம். மேன்மைகொள் சைவநீதி உலகெலாம் பரவுதற்கு நாளும் நந்திக்கொடி ஏற்றுவோம். நானிலம் எங்கும் சைவப் பயிர்வளர்ப்போம்.

*இந்தின் இளம்பிறையான் இன்னருள் பெறுவதற்கு*
*நந்திக் கொடி பிடிப்போம் நால்வர் வழி நிற்போம்!*

**மாமன்றச் செய்தி**

## அமரர் வே. பாலசுப்பிரமணியம் நினைவுப் பேருரை

மாமன்றத்தின் தலைமையகக் கட்டிடத்தை நிர்மாணிக்க அயராது உழைத்த பெருமகனும், மாமன்ற முன்னாள் தலைவருமான அமரர் வே. பாலசுப்பிரமணியம் அவர்களின் சேவையை நினைவு கூர்ந்து, மாமன்றம் வருடந்தோறும் நடத்திவரும் நினைவுப் பேருரைத் தொடரில், அன்னார் அமரத்துவமெய்திய பதினான்கு ஆண்டுகள் பூர்த்தியையொட்டிய நினைவுப் பேருரை நிகழ்வு கடந்த ஜூலை மாதம் 16ம் திகதியன்று மாமன்றத் தலைமையகப் பிரார்த்தனை மண்டபத்தில் இடம்பெற்றது.

மாமன்றத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கு நிகழ்த்தப்பட்ட விசேட பூசை வழிபாட்டைத் தொடர்ந்து மாமன்ற பிரதித் தலைவர் திரு. மா. தவயோகராஜா தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக இளைப்பாறிய தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள் "இந்துப் பண்பாட்டு கல்வி: நோக்கும் போக்கும்" எனும் பொருளில் பேருரையாற்றினார்.

மாமன்றத்தின் காலாண்டிதழான "இந்து ஒளி" யின் அமரர் வே. பாலசுப்பிரமணியம் நினைவுச் சிறப்பிதழும் அன்றைய தினம் வெளியிட்டு வைக்கப்பட்டது. நிகழ்வின் இறுதியில் திருமதி சாந்தி பாலசுப்பிரமணியம் அவர்களின் ஏற்பாட்டில், அனைவருக்கும் மதியபோசனம் வழங்கப்பட்டது.

# மதுரைக்கு அரசி அன்னை மீனாட்சி அம்பாள்

*தேவாரமாமணி, சிவகவிமணி*
*செல்வநாயகி முத்தையா*


மதுரை மீனாட்சி

தற்போது காணப்படும் மதுரை மீனாட்சியம்மன் கோயில், ஒரே மன்னரால் ஒரே காலத்தில் கட்டிமுடிக்கப்பட்டது அல்ல. எதிரிகளின் பல்வேறு படையெடுப்புகளைக் கடந்து, பல கால கட்டத்தில், பலராலும் சிறப்புறத் திட்டமிட்டு அமைக்கப்பட்டது என்பதுதான் வரலாறு.

## அடித்தள அமைப்பு

நாலாம் நூற்றாண்டில் மன்னர் குலசேகர பாண்டியனால் தொடங்கப்பட்டது என்றாலும் கி.பி. 1310 ல் நடந்த அந்நியப் படையெடுப்பால் கோயில் முழுவதுமாக சேதமுற்றது. எனவே, அதன் பிறகு கோயிலைப் புனர்நிர்மாணம் செய்வதற்கான பணிகள் துவங்கின. குலசேகர பாண்டியன் இந்தக் கோயிலை நிர்மாணிக்கும்போது, வீட்டுக்கு ஓர் ஆணும் ஒரு பெண்ணும் நாள் தவறாமல் கட்டுமான வேலைக்கு வரவேண்டும் என ஆணையிட்டார். அதற்குக் கட்டுப்பட்ட மக்கள் தினமும், வந்து கூலி ஏதும் வாங்காமல் வியர்வை சிந்தி உழைத்தனர்.

குழந்தை இல்லாதவர்களது சொத்துக்கள் அனைத்தும் கோயில் கட்டுவதற்கே என்று உத்தரவிட்டவர் கூன் பாண்டியன். மாறவர்மன், சுந்தர பாண்டியன் காலத்தில் மீனாட்சியம்மன் கோயில் கட்டுமானப் பணிக்காக ஊர் ஊராக உண்டியல் ஏந்திச் சென்று நிதி வசூலித்தார்கள்.

அதேபோல் கோயில் கட்டுமான காலத்தில் திருவிழாக்களை நிறுத்தி வைத்து, அந்தத் தொகை முழுவதையும் கட்டுமானப் பணிக்குப் பயன்படுத்தியவர் மன்னர் திருமலை நாயக்கர். இப்படி எண்ணற்ற மன்னர்களின் ஆட்சி காலத்தில் தொடர்ந்து தன்னை மெருகேற்றிக் கொண்ட மதுரை மீனாட்சியம்மன் கோயில் பணிகள், சுமார் நூற்றிருபது ஆண்டுகளில் முழுமை பெற்றது. கோபுரங்களில் பொம்மைகள் வடிவமைக்கப்பட்டன. பொம்மைகள் ஏறத்தாழ மூன்று கோடியே முப்பது லட்சம் வடிவமைக்கப்பட்டன. அன்றைய கணக்கின்படி ஏறக்குறைய கோயில் கட்டுமானச் செலவு சுமார் ஒரு கோடியே இருபது லட்சம் ரூபாய். (சுமார் அறுநூறு ஆண்டுகளுக்கு முந்தைய இந்தத் தொகைக்கு, இன்றைய தேதியில் மதிப்பைக் கணக்கிட்டுக் கொள்ளுங்கள்)

கோயில் கட்டுமானத்தின்போது இந்த நிதியைத் திரட்டுவதற்காக ஒவ்வொரு மன்னரும் கையாண்ட வழிமுறைகள் வித்தியாசமானவை. நாட்டு மக்கள் அவரவர் நிலத்தின் விளைச்சலில் குறிப்பிட்ட ஒரு பகுதியை கோயில் பணிக்கு அளிக்க வேண்டும் என ஆணை பிறப்பித்தார் குலசேகர பாண்டியன். அதற்காக நிலவரியில் இருந்து விவசாய நிலங்களுக்கு வரிவிலக்கும் அளிக்கப்பட்டது.

## ஊருக்கு முன் கோயில் உருவாகியது

வெற்றி பெற்ற போர்களின் மூலம் கிடைத்த எதிரிகளின் பொக்கிசத்தைக் கொண்டே கோயிலின் பொற்றாமரைக் குளம் கட்டப்பட்டது. பொதுவாக ஊர் உருவாகிய பின்புதான் அங்கு கோயில் உருவாகும். ஆனால் முதலில் கோயில் உருவான பின் அமைந்த நகரம்தான் மதுரையென்பது ஆச்சரியத்துக்குரிய தகவல். அறப்பணியில் தென்பாண்டி மக்களின் பங்களிப்பு பெருமளவில் இருக்க வேண்டும் என்பதற்காக மன்னர் திருமலை நாயக்கர் "பிடி அரிசித்திட்டம்" என்ற ஒன்றை உருவாக்கி அதன் மூலம் சேர்ந்த அரிசியை விற்று பணமாக்கி, அந்தத் தொகையைக் கொண்டு கட்டப்பட்ட மண்டபம்தான் பொற்றாமரைக் குளத்தின் அருகே, விபூதிப் பிள்ளையாரின் பின் புறத்தில் அமைந்துள்ள கிளிக்கூட்டு மண்டபம்.

## கேட்டாலே முக்தி

முக்தி தரும் தலங்கள் ஐந்துள் முதன்மையானது இது. சிதம்பரத்தில் தரிசித்தாலும், காளஹஸ்தியில் வழிபட்டாலும், காசியில் மரித்தாலும், திருவாரூரில் பிறந்தாலும் முக்தி என்பார்கள். ஆனால் "மதுரை" என்ற பெயரைக் கேட்டாலே முக்திதான் என்கிறது புராணங்கள். கடைச்சங்க புலவர்கள் வீற்றிருந்த தமிழ் ஆராய்ந்த இடம். மூர்த்தி நாயனார் விபூதி, ருத்திராட்சம், சடாமுடி என்ற மூன்றையும் துணையாகக் கொண்டு, மும்மையால் உலகாண்ட நகரம். இந்திரன், வருணன் ஆகியோர் வழிபட்டு பேறு பெற்ற தலம். அரிமர்த்தன பாண்டியனிடம் மாணிக்கவாசகர், தென்னவன் பிரமராயன் என்ற பெயரில் மந்திரியாக இருந்த நகரம்.

திருஞானசம்பந்தர் அனல்வாதம் புனல்வாதம் செய்து சைவத்தைப் பாண்டி நாட்டில் நிலை பெறச் செய்த பதி. மங்கையர்க்கரசியாரும், குலச்சிறையாரும் வாழ்ந்த திருப்பதியும் மதுரைதான். சிவபூஜையின் மகிமையை உலகறிந்து உய்யும் வண்ணம் சோமசுந்தரர் தம்மைத் தாமே ஆத்மார்த்த மூர்த்தியாக பிரதிஷ்டை செய்து பூஜித்த இம்மையிலும் நன்மை தருவார் தலம் எழுந்தருளியிருக்கும் இடம். பிட்டுண்டு மண் சுமந்து, பிரம்படிபட்ட பெருமான் வாழும் இடம். இறைவன் பாணபத்திரருக்கு பாசுரம் எழுதிக் கொடுத்து மன்னனிடம் நிதி பெற வைத்த தலம். சத்தி தரும் அறுபத்து நான்கு பீடங்களுள் முதல் பீடம். ஈசனே புலவராக வந்து தமிழை ஆராய்ந்த இடம். நெற்றிக் கண்ணைத் திறத்தாலும் குற்றம் குற்றமே என்று கடவுளிடமே வாதிட்ட நக்கீரர் வாழ்ந்த இடம். முருகன் திருவருளால் ஊமைத்தன்மை நீங்கிய குமரகுருபரர் "மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்" அரங்கேற்றிய ஆலயம் – எல்லாம் மதுரை தான் (இவை மட்டும் போதுமே, உலக அதிசயத்தில் மதுரை இடம்பெற).

## மதுவால் நஞ்சை நீக்கியது

சிவபெருமான், தன் தலையில் சூடியுள்ள பிறைச் சந்திரனிடம் உள்ள அமுதமாகிய மதுவைப் பொழிந்து, நாகம் உமிழ்ந்த நஞ்சின்

வெம்மையை நீக்கிப் புனிதப்படுத்திய இடமாதலால், மது – ரை என்ற பெயர் உண்டாயிற்று. ஆலவாய் என்ற பெயரும் இந்த ஊருக்கு உண்டு.

### கடம்பவனம்

பழங்காலத்தில் இந்த பகுதி கடம்பவனமாக இருந்ததால், "கடம்பவனம்" என்றும், வருணன் ஏவிய மேகங்களைத் தடுக்க, சிவபெருமான் விடுத்த நான்கு மேகங்களும், நான்கு மாடங்களாகக் கூடிநின்று காத்ததால் "நான் மாடக் கூடல்" என்றும் மதுரைக்குப் பெயர்கள் உண்டு.

### மதுரைக்கோயிலின் ஆரம்பம்

விருத்திராசூரன் என்பவனைக் கொன்றதால், இந்திரனுக்கு பிரம்மஹத்தி தோஷம் பிடித்துக் கொண்டது. அந்தப் பாவத்தைப் போக்க வழி சொல்லுமாறு, தன் குருவான வியாழ பகவானிடம் வேண்டினான். அவர் கூறிய உபதேசத்தின்படி ஒவ்வோர் ஆலயமாகச் சென்றான். இறுதியில், கடம்பவனம் (மதுரை) வந்தான். அங்கே கடம்ப மரத்தின் கீழ் பேரொளிப் பிழம்பாய் எழுந்தருளியிருந்த சிவலிங்கத்தை வணங்கினான். அந்த விநாடியே அவனைப் பிடித்திருந்த பிரம்மஹத்தி விலகிற்று. அதனால் அகமகிழ்ந்த இந்திரன் தேவதச்சனை அழைத்து ஒரு கோயில் கட்டச் சொன்னான். இதுதான் மதுரைக் கோயிலின் ஆரம்பம். இந்த வரலாற்றின் அடையாளமாக இன்றும் திருக்கோயிலின் வடக்குச் சுற்றில் கடம்ப மரம் ஒன்று காட்சி தருகிறது.

*"திருவாலவாயென்று கேட்டவரே*
*அறம் பெறுவர் செல்வம் ஓங்கும்*
*திருவாலவாயென்று நினைத்தவரே*
*பொருள் அடைவாதேவ தேவைத்*
*திருவாலவாயிடத்து வதிந்தவரே*
*வீட்டு நெறிசேர்வர் அன்றே"*

என்ற பரஞ்சோதி திருவிளையாடலைப் பாடியபடி மதுரைக் கோயிலுக்குள் நுழைவோம். பிரமாண்டமான மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயம், கிழக்கு – மேற்கில் 254 மீட்டரும் தெற்கு – வடக்கில் 238 மீட்டரும் சுற்றளவு கொண்டது. நான்கு திசைகளிலும், வானுயர்ந்த நான்கு கோபுரங்கள், கோயிலின் உள்ளே எட்டுக் கோபுரங்களும், இரண்டு விமானங்களும் அமைந்துள்ளன. சக்தியும் சிவமுமாகி என்ற தத்துவத்தை உணர்த்துவது போல, வலப்பக்கம் அம்மன் கோயிலும், இடப்பக்கம் ஈசன் கோயிலும் இணைந்து நின்று அருள் மழை பொழிகின்றன.

### பெண்ணரசி

மதுரையிலே அப்பனை விட அம்மைக்குத்தான் மதிப்பு அதிகம். பெண்ணரசி ஆண்ட பெரு நகரம் அல்லவா. அதனால் முதலில் மீனாட்சியம்மனை தரிசித்து விட்டுத்தான் சுந்தரேஸ்வரரை வணங்க வேண்டும். அம்மன் கோயிலுக்கு முன்னால் அஷ்டசக்தி மண்டபம் உள்ளது. இங்கே மீனாட்சியின் வரலாறு சித்திரமாகத் தீட்டப்பட்டுள்ளது. கர்ப்பக்கிரகத்தில் அன்னை மீனாட்சி, நின்ற திருக்கோலத்தில் காட்சியளிக்கிறாள். இரண்டு கரங்களோடும், அருள் பொழியும் கண்களோடும் தரிசனம் தருகிறாள். அவளைப் பார்த்தாலே நம் பாவங்கள் தொலைந்து விடும்.

கம்பத்தடி மண்டபத்தில் சுந்தரேஸ்வரர் கோயிலின் பிரதான வாயில் அமைந்துள்ளது. கருவறையில் சுயம்புலிங்கமாக அருள் பாலிக்கிறார் சுந்தரேஸ்வரர். மேலே இந்திரன் கட்டிய இந்திர விமானம் எட்டு யானைகளால் தாங்கப்பட்டு நின்று எழிலூட்டுகிறது. சித்தி விநாயகர், வல்லப விநாயகர், நிருத்த கணபதி, விநாயகர், முக்குறுணி விநாயகர் என்று ஏராளமான பிள்ளையார்கள் இங்கே உண்டு.

### தெய்வங்கள்

முருகன், சந்திரசேகரர், கால்மாறி ஆடிய நடராஜர், அதிகார நந்தி, வந்தியம்மை, சூரியன், நவக்கிரகம், கலைமகள், சோமஸ்கந்தர், பிட்சாடனர், எல்லாம் வல்ல சித்தர், துர்க்கை, அட்சரலிங்கம், மகாலெக்ஷ்மி, பழனியாண்டவர் என்று இந்த ஆலயத்தில் பார்க்கப் பார்க்க தெய்வங்கள்தான். பொற்றாமரைக் குளக்கரையில் நின்றபடி, அண்ணாந்து கோபுரங்களைப் பார்த்தால் ஒரு பரவசம் ஏற்படுகிறதே! அதை வார்த்தையால் வர்ணிக்க முடியுமா? சித்திரைத் திருவிழா, ஆவணி மூலப் பெருவிழா, தெப்பத் திருவிழா ஆகியவை மதுரை ஆலயத்தில் சிறப்பான திருநாட்கள்.

### சிற்பம்

எங்கு திரும்பினாலும் சிற்பங்கள், கல்வெட்டுகள், பாடல்கள் என்று பிரமிப்பூட்டுகிறது மதுரை மீனாட்சியம்மன் ஆலயம். இதோ மீனாட்சியின் கதை (தடாதகை). மதுரை மன்னன் மலையத்துவஜ பாண்டியனும், மகாராணி காஞ்சனமாலையும் சிறப்புற நாட்டை ஆண்டு வந்தார்கள். அவர்கள் சிறந்த சிவ பக்தர்கள். மக்கள் எல்லோரும் குறையில்லாமல் வாழ்ந்து வந்தார்கள். ஆனால் மன்னனுக்கும் ராணிக்கும் மட்டும் ஒரு குறை – வாரிசு இல்லாத குறை இருந்தது.

### புத்திரகாமேஷ்டியாகம்

தலைமை குருவிடமும். அந்தணர்களிடமும் ஆலோசனை கேட்டான் மன்னன். இறுதியில், புத்திரகாமேஷ்டியாகம் செய்வதென்று முடிவு செய்யப்பட்டது. அந்த யாகத்தைச் சிறப்புற செய்தால் புத்திரபாக்கியம் உண்டாகும் என்று சாஸ்த்திரங்கள் சொல்கின்றன. மலையத்துவஜன் மன்னனாயிற்றே. சிறப்புக்குக் கேட்கவேண்டுமா? வேத ஆகமப்படி உலகிலேயே யாரும் அதுவரை செய்திராத அளவில் புத்திரகாமேஷ்டியாகம் நடைபெற்றது. மந்திரங்களின் ஓசை விண்ணை முட்டிற்று.

### அற்புதம்

அப்போதுதான் அந்த அற்புதம் நடந்தது. யாக குண்டத்தில், திடீரென ஒரு பெண் குழந்தை தோன்றிற்று. மன்னனையும் அரசியையும் நோக்கி அது மெல்லத் தவழ்ந்து வந்தது. பரவசத்துடன் அவர்கள் குழந்தையை அரவணைத்துக் கொண்டாலும் ஓர் அதிர்ச்சி அவர்களைத் தாக்கிற்று. காரணம், அந்தப் பெண் குழந்தைக்கு மூன்று ஸ்தனங்கள் இருந்தன. மலையத்துவஜனும் காஞ்சனமாலையும் கலங்கி நின்றபோது ஓர் அசரீரி வானில் எழுந்தது. "கலங்காதீர்கள்! இந்தப் பெண் குழந்தை, தனக்கே கணவனைக் காணும்போது ஒரு ஸ்தனம் மறைந்துவிடும்" என்றது அசரீரி.

பாண்டியனும், மகராணியும் மனநிம்மதியுற்றனர். குழந்தைக்கு தடாதகை என்று பெயரிட்டு கண்ணும் கருத்துமாக வளர்த்து வந்தனர்.

### வெட்கம்

தடாதகை நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமாக வளர்ந்தாள்; மலர்ந்தாள். இளவரசியானாள். பின் பாண்டிய நாட்டின் அரசியாகவும் முடிசூட்டப்பட்டாள். செங்கோல் வழுவாமல் சிறந்த முறையில் அரசாட்சி செலுத்தினாள். பாண்டிய நாடு

பொன் நாடாக மிளிர்ந்தது. கன்னிப் பெண் ஆட்சி செய்ததால் "கன்னி நாடு" என்ற பெயரும் வழங்கலாயிற்று.

### போரில் வெற்றி

தடாதகை தன் நாட்டை விஸ்தரிக்க ஆசைப்பட்டாள். அண்டை நாடுகளின் மீது போரிட்டாள். அத்தனை பேரையும் வென்றாள். எல்லா நாடுகளையும் ஜெயித்து விட்டு, முரசு எழுப்பினாள். தடாதகையை எதிர்த்த பூதகணங்களும், நந்தியின்படைகளும் தோல்வியை கவ்வின. இதையறிந்த இறைவன், தானே போருக்குப் புறப்பட்டார். போர்க்களத்தில், ஈசனைக் கண்டதும், தடாதகை வெட்கித் தலை குனிந்தாள். அவளது மூன்றாவது ஸ்தனம் மறைந்துவிட்டது. சிவபெருமான் தன் மணவாளன் என்பதை தடாதகை உணர்ந்தாள். இறைவனும் இவள்தான் பார்வதி என்பதை அவளுக்கு உணர்த்திவிட்டு, "தடாதகையே! நீ, இப்போதே மதுரைக்குச் செல்வாயாக. இன்றைக்கு எட்டாம் நாள் அங்கு வந்து உன்னை மணம் புரிவேன்" என்று கூறினார். உடனே தடாதகை மதுரைக்குப் புறப்பட்டாள்.

### திருமணம்

மதுரை நகரமே விழாக்கோலம் பூண்டது. திருமண நாள் குறிக்கப்பட்டது. பல நாட்டு மன்னர்களுக்கும் திருமண ஓலை அனுப்பப்பட்டது. தங்கள் அரசியின் திருமண விழா என்பதால் மக்கள் எல்லோரும் மகிழ்ச்சிக் கோலத்தில் இருந்தார்கள். வீதிகளும், மாளிகைகளும் அலங்கரிக்கப்பட்டன.

மகா விஷ்ணு, பிரம்மா ஆகியோரும் தேவாதி தேவர்களும், பல நாட்டு மன்னர்களும் கல்யாணத்திற்கு வருகை புரிந்திருந்தார்கள். பங்குனி உத்திர சுபயோக சுபதினத்தில், பிரம்மா மந்திரங்கள் சொல்ல இறைவன், இறைவியை மணம் புரிந்தார். பூமழை பொழிந்தது.

### மீனாட்சியானது

புதுப் பெண்ணின் கண்களை உற்றுப் பார்த்தார் 'ஈசன்' "தடாதகையே உன் கண்கள் மீன்போல் வெகு அழகா இருக்கின்றன. உன்னை நான் மீனாட்சியென்றே அழைக்கப் போகிறேன்" என்றார் சிவபெருமான். தடாதகை மீண்டும் வெட்கப்பட்டாள். சிவபெருமான், சுந்தரபாண்டியன் என்ற பெயருடன் மதுரையை ஆண்டு வந்தார். முருகனின் அவதாரமாக உக்கிரகுமாரன் என்று அவர்களுக்கு ஒரு குழந்தை பிறந்தது.

உக்கிரகுமார பாண்டியன் வளர்ந்ததும் அவனுக்கு முடிசூட்டி விட்டு, ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரராக இறைவடிவம் ஆனார்கள். இன்றும் மதுரையை ஆண்டு கொண்டிருக்கிறார்கள்.

---

## நற்சிந்தனைகள் வாழ்வை வளப்படுத்தும்


செல்வி. ஜனனி ஜெமினி கணேசன்
தரம் 8 B
புனித அந்தோனியார் மகளிர் மகா வித்தியாலயம்,
கொழும்பு -03


நாம் சமூகத்தில் சேர்ந்து வாழும் பொழுது பல்வேறு பிரச்சனைகள் எழுகின்றன. இவற்றை எதிர்கொள்வதற்கு ஒவ்வொருவரும் நல்ல சிந்தனை உடையவராய் இருத்தல் வேண்டும். ஒருவருடைய நற்செயல்கள் பிறருக்கு நல்லனவாகவும், தீயசெயல்கள் பிறருக்குத் துன்பம் தருவனவாகவும் அமைகின்றன. எனவே, சமூகத்தில் நல்லவர்களாய் வாழ்வது எவ்வாறு என்பது பற்றியும், இதற்காகச் செய்ய வேண்டியவை யாவை என்பது பற்றியும் சிந்திப்பதே நற்சிந்தனையாகும்.

எங்கும் இருக்கின்ற, எல்லாம் அறிகின்ற, நம்மீது அன்புள்ள நம்மைக் காக்கின்ற கடவுளை நாம் மனதில் தியானிக்க வேண்டும். இது நம் கடமை. இத்தகைய தியானத்தால் மாசற்ற மனதைப் பெறமுடியும். மாசற்ற மனம் நல்ல சிந்தனை ஊற்றெடுப்பதற்கு ஏற்ற அடித்தளமாகும்.

நற்சிந்தனையை வளர்ப்பதில் சமூக சூழலின் பங்கு குறிப்பிடத்தக்கது. சமூகச் சூழல் நன்றாக அமையும்போது பிள்ளைகளிடம் நற்பண்புகள், நல்ல பழக்க வழக்கங்கள் உருவாகின்றன. இவற்றின் அடிப்படையில் பிள்ளையின் மனதில் நல்ல சிந்தனை எழுகின்றது. அறிவாற்றலிலும், நற்பண்புகளிலும் சிறந்தவர்களை முன்மாதிரியாகக் கொண்டு ஒழுகும் பொழுதும் நல்ல சிந்தனை ஏற்படுகின்றது. நமது வாழ்விற்கு வழிகாட்டியாக, உயர்ந்த நிலையை அடைவதற்கு உதவியாக இருந்த பெரியோர்களிடம் கீழ்ப்படிவு, அடக்கம், பயபக்தி, கட்டுப்பாடு உள்ளவர்களாக இருத்தல் வேண்டும். மேலும், அவர்களின் நற்போதனைகளைக் கடைப்பிடித்து ஒழுகுதலும் இன்றியமையாத தாகும்.

சான்றோர் என்போர் அறிவிலும் சால்பிலும் சிறந்தவர்கள். அவர்களுடன் சேர்ந்து பழகுதல் வேண்டும். அப்பொழுதுதான் நாம் அவர்களின் நற்பண்புகளைப் பின்பற்ற வாய்ப்பு ஏற்படும். சான்றோர்களைப் போன்றே, நல்லவர்களையும் நண்பர்களாக்கி கொள்ள வேண்டும்.

யோகர் சுவாமிகளின், 'நற்சிந்தனை' என்னும் நூலில் உள்ள சில பகுதிகளை இங்கு நோக்குவது பொருத்தமானது.

- நமக்கு உயிருக்கு உயிராய் இருப்பவர் கடவுள்.
- நாம் கடவுளை நம்ப வேண்டும்; அவர் நமக்கு உள்ளும் புறமும் இருக்கிறார். எனவே, நாம் எல்லா ஆன்மாக்களையும் இறைவனாக கருதுதல் வேண்டும். நம் செயல்கள் எல்லாமே இறைவனின் முன்னிலையில் நடைபெறுகின்றன. அவர் அறியாமல் நல்லதோ, கெட்டதோ எதனையும் நாம் செய்தல் இயலாது. எனவே, நாம் தரும நெறியிலிருந்து பிசகுதல் ஆகாது
- நம் ஆன்மா பரிசுத்தமானது.
- குரங்குபோல நம் மனம் கூத்தாடுகிறது. அதனை நிறுத்துவதற்கு நாம் தினந்தோறும் சிவத் தியானம் செய்தல் வேண்டும்.
- போதனையிலும் சாதனை சிறந்தது.
- ஒழுக்கம் உயிரினும் சிறந்தது.

மேற்கூறிய அறிவுரைகளை நாம் ஏற்று, வாழ்க்கையிற் கடைப்பிடித்து ஒழுகினால், நற்சிந்தனை செய்யும் மனப்பாங்கு தானாகவே கைகூடும்.

# இன்றைய மனிதர்களிடையே அருகிவரும் மனித விழுமியப் பண்புகள்

திருமதி கௌ. சிதம்பரேஸ்வரன்
கொ/விவேகானந்தா கல்லூரி, கொழும்பு – 13

இன்றைய உலகம் விஞ்ஞான தொழில்நுட்பம் சார்ந்தனவாக வளர்ந்து காணப்படுகின்றன. இனிவரும் காலம் தகவல் தொழில்நுட்பம் வளர்ந்ததாகவும் விஞ்ஞான வளர்சியில் பல தொழில் நுணுக்கங்களையும் மிஞ்சியதாகவும் வளர்ந்து முழு உலகையுமே ஓர் வீட்டிற்குள் காணக்கூடியதான வளர்ச்சியை எட்டியுள்ளது என்றால் அது மிகையாகாது. அது மகிழ்ச்சிக் குரியதே. ஆனால் மனிதன் விழுமியப்பண்புகளை மறந்து அந்த அறப்பண்புகளை இருப்பதாகவே எண்ணாது, தான்தோன்றித் தனமான வாழ்க்கை அமைத்துக் கொண்டு அல்லலட்டு வாழத் தெரியாது தத்தளித்துக் கொண்டிருக்கின்றான்.

ஒரு நாணயத்திற்கு இரண்டு பக்கங்கள் உண்டு. அது போல, மனிதவாழ்விற்கும் அறிவியல் அறிவு ஒரு பக்கம், மறுபக்கம் அறப்பண்புகளின் அடிப்படையில் எழுகின்ற மனிதவிழுமியப் பண்புகள் ஆகும். அறிவியல் அறிவு மட்டும் பெற்று வாழும் வாழ்வு முழுமைபெற்ற வாழ்வு ஆகிவிடமுடியாது. அவ்வாழ்வு பயனற்றதாகவும் போய்விடும்.

எனவே அன்பு, அஹிம்சை, உண்மை, சாந்தி, மானுடம், நல்லொழுக்கம், இன்சொல், தர்மம் – இன்னும் பல எமது விழுமியப் பண்புகளில் அடங்கும். இவற்றைக் கைக்கொண்டு வாழும்போது மனதில் அமைதி, சாந்தி நிறைவு ஏற்படுகின்றது. இவற்றை மறந்து வாழ்பவன் வாழ்வில் நிம்மதி என்பதற்கு இடமில்லை எனலாம். நாம் எத்தகைய விஞ்ஞான தொழில்நுட்ப மாற்றங்களுக்குட்பட்ட வாழ்க்கை நிலைக்கு வந்தாலும், மெய்யறிவு நிலையை மறத்தல் கூடாது. அத்தகைய மெய்யறிவினைப்பெற்று மனித விழுமியங்களைக் கடைப்பிடித்தால் என்றும் இன்பமேயன்றி துன்பமில்லை.

அறிவு ஆனது அறிவியலோடு விழுமியங்கள் சார்ந்ததாக அமைய வேண்டும். அப்பொழுதுதான் அறிவு அதன் உண்மையான கருத்தைப் பெற்று மனித குல வாழ்விற்கும் அரிய சஞ்சீவியாகிறது. தற்காலத்தில் ஏற்பட்டுள்ள பல்வேறு பிரச்சினைகளுக்கும், மனித சமுதாயத்தைப் பற்றியுள்ள சகல பீடைகளுக்கும், தொல்லைகளுக்கும் அடிப்படைக் காரணமாக அமைவது மக்கள் மனித விழுமியங்களையும், ஒழுக்கப் பண்புகளையும் வாழ்க்கையில் கடைப்பிடிக்கத் தவறியமையே காரணமாகும்.

இன்று உலகில் மக்கள் வசதிகள், நாகரிக ஆடம்பரங்கள், செல்வச் செழிப்புக்கள் – இவையே இன்பவாழ்வு என எண்ணுகின்றனர். அதுவே வாழ்வின் உயர்வு, அவர்களே உயர் அந்தஸ்து உடையவர் என்று ஓர் மாயை உலகம் காணப் படுகின்றது. இவ்வாறு உள்ளவர்களிடையே நிம்மதி உண்டா? சற்று நிதானமாக சிந்தித்துப் பாருங்கள். இல்லை என்றுதான் விடைவரும்.

வாழ்வில் அமைதி, திருப்தி சாந்தி, நிம்மதி, மகிழ்ச்சி பெறவேண்டுமாயின் மனித விழுமியங்கள் கூறும் பண்புகளை மக்களிடையே வளர்த்து எடுக்க வேண்டும். அவ்வாறு வளர்த்தெடுக்கப்படும்போது இவையாவும் வாழ்வில் ஏற்படும்.

ஸ்ரீ இராமபிரான், ஸ்ரீ கிருஷ்ணபிரான், பகவான் இராம கிருஷ்ண பரமஹம்சர், சுவாமி விவேகானந்தர், மகாத்மா காந்தியடிகள் ஆகியோர் மாந்தருள் மாணிக்கங்களாக, மகாத்மாக்களாகப் போற்றப்படுகின்றார்கள். அவர்கள் அவ்வாறு போற்றப்படுவதற்கு காரணங்களாக அமைந்தவை எவை? பணமா? பொருளா? பதவி அந்தஸ்தா? இவை யாதும் இல்லை. அவர்கள் தமக்கென வாழாது பிறருக்காக வாழ்ந்தார்கள். எல்லோரும் வாழ வேண்டும், எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும். நல்லோர்கள் ஆக வேண்டும் என்று நினைத்தார்கள்; வாழ்ந்தார்கள். இன்றும் உலகம் போற்ற வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள்.

உயர்வு என்ற சொல்லிற்கு உரிய பொருள் தந்தவர்கள் இவர்கள். இப்பெரியார்கள் மனித விழுமியங்களே. மனிதர்களை உயர்வுக்கு இட்டுச் செல்லும் என்பதை நிரூபித்துக் காட்டியுள்ளார்கள்.

மனித விழுமியங்கள் தரும் மனித உயர்வுதான், உண்மையான உயர்வு; நிரந்தரமான உயர்ச்சி. அத்தகைய உயர்வுதான் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்துகின்றது. ஏனையோரின் வாழ்கைத் தரத்தையும் உயர்த்த வழி வகுக்கின்றது.

சத்தியம் எல்லா விழுமியங்களுக்கும் அடிப்படையானது. ஆதாரமானது. சத்தியம் நித்தியமானது. மனித விழுமியங்களுள் மிக மிக உயர்வானதும் முதன்மையானதும் சத்தியம். எல்லா விழுமியங்களும் தோன்றுவதற்கு மூலாதாரமும் சத்தியமே.

"சத்தியம் வத" – எப்பொழுதும் உண்மையே பேசு
"சத்திய மேவ ஜயதே" – வாய்மையே வெற்றிபெறும்
"ந அன்றாதம்" – பொய்ம்மையால் ஒரு போதும் வெல்ல முடியாது.

மனித விழுமியங்களுக்கு முதற்காரணமான சத்தியம் கடைப்பிடிக்கப்பட்டால் ஏனைய விழுமியங்கள் தானாகவே கைவரப்பெறும்.

வேகமாக வளர்ந்து வரும் உலகில், போட்டி போடும் உலகில் மக்களுக்கு ஓய்வு என்பது குறைவாகவே காணப்படுகிறது. ஒரு குடும்பத்தில் தாய், தந்தை, பிள்ளைகளிடையே கூட ஓய்வாக, ஆறுதலாக ஆற அமர்ந்து பேசவே நேரம் அரிதாகவே உள்ளது. நல்ல விழுமியக் கருத்துக்களை இளம் சந்ததிக்கு கூறி புரிய வைக்கவே முடியாது உள்ளது. அன்பைப் பரிமாறுதல், இன்சொல்

பேசுதல் போன்றவற்றை இளைய தலைமுறைக்கு எடுத்துக் கூறி புரிய வைத்தல் அவசியம். கோபத்தை குறைத்தல் வேண்டும். அதனால் ஏற்படும் தீமைகள் என்பவற்றை புரிய வைத்தல் வேண்டும். பிறர் புண்படும்படி வார்த்தைப் பிரயோகம் செய்வது தீராத பகைமையையே வளர்த்துவிடும். இவற்றைக் கைக் கொள்ளாமையாலேயே வீட்டில் – நாட்டில் – சமூகத்தில் அமைதியின்மை ஏற்படுகின்றன.

சமய ஒழுக்கமே விழுமியப் பண்புகளை வளர்க்கக் கூடிய பிரணவ மந்திரமாகும். உலகில் பல்வேறு சமயங்கள் காணப்பட்டாலும் எல்லாச் சமயமும் எடுத்துக் கூறும் மார்க்கம் அன்பு மார்க்கமாகும். அன்பைக் கடைப்பிடித்தால் அஹிம்சை தானாகவே வளரும். எல்லாச் சமயமும் "பிறஉயிரையும், உன் உயிரோல் மதி" என்று கூறுகின்றது. அத்தகைய பண்புகள் வளர்த்து எடுக்கப்படும்போது அங்கு பிரிவுக்கும் பிரச்சனைக்கும் இடமேயில்லை.

"ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்பதை தாரகமந்திரமாகக் கொள்ளவேண்டும். இன்றைய கண்டுபிடிப்புக்களும், அறிவியல் முன்னேற்றங்களும் நன்மையளித்தபோதும் அழிவிற்கே கூடுதலாக பயன்படுகின்றன என்றால் அது தவறில்லை.

அறிவு பரந்து விரிந்துவிட்டது என்று எண்ணப்படுகின்ற தற்காலத்திலே 'உயர்வு' என்பதற்கு பொருளாதார உயர்வு, சமூக அந்தஸ்து உயர்வு, பதவி உயர்வு, புகழ் உயர்வு என்றெல்லாம் பொருள் கொள்ளப்படுகின்றது. ஆனால், அவையனைத்து உயர்வுகளும் இருந்தும் அவற்றை மனித உயர்வு என்று கூறிவிடமுடியாது. இங்கு குறிப்பிடப்பட்ட உயர்வுகள் நிரந்தரமானவையல்ல. இன்றைய பணக்காரன் நாளைய ஏழையாகவும் ஆகி விடலாம். பொருளாதார சமூக அடிப்படையில் உயர்வுகள் வரும், போகும். அவற்றை ஓர் பொருட்டாகக் கொள்வதோ அல்லது உயர்வாக மதிப்பிடுவதோ புல்லறிவாளர்களின் புல்லறிவாண்மையாகும். இது பெரியோர்களின் கூற்றாகும்.

*"யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரைதானே"*

என்றார் திருமூலர். எல்லோருக்கும் முடியுமான ஒன்று மற்றையவர்களுக்கு இன்னுரை கூறுதல். இவ் இன்னுரைகள் பிறரை வாழ்விக்கும் வல்லமை பெற்றவை.

திருவள்ளுவரும் பல இடங்களில் அறவுரைகள் பற்றி அதாவது அறப்பண்புகள், விழுமியப் பண்புகளைக் கூறும் போதெல்லாம் வலியுறுத்திக் கூறிக் கொண்டே சென்றுள்ளார்.

*"எழு பிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்*
*பண்புடை மக்கட் பெறின்"* என்றும்,

*"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா*
*செய்தொழில் வேற்றுமை யான்"* என்றும்

*"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்*
*கல்லார் அறிவிலா தார்"* என்றும் வள்ளுவர் கூறியுள்ளார்.

இவ்வாறு நற்பண்புகள் – நல்ல மனித விழுமியப் பண்புகள் சொல்லப்பட்டுள்ளன.

"உள்ளத்து நேர்மை, உலகத்து உடன்பாட்டிற்காகத் தியாகம் செய்யப்படலாகாது" என்கிறார் கிரேகத்துப் பேரறிஞர் பிளேற்றோ. மனித விழுமியப் பண்புகள் எமது வாழ்விற்கு உயர்வைத் தருகின்றன. அந்த உயர்வு உயிரை விடவும் மேலானது ஆகிறது. எனவே, விழுமியப் பண்புகள் உயிரையும் விடச் சிறந்ததாகப் போற்றப்பட வேண்டியவையாகும்.

மனித விழுமியங்கள் யாவும் ஆத்மிகம் சம்பந்தமானவை. அவை மனித வாழ்வை மேம்படுத்தும் பண்புகள் அனைத்தும் மனித விழுமியங்களேயாகும்.

மனித விழுமியங்களை மேம்படுத்தும் சில நீதி வாக்கியங்கள்.

"ஈதல் அறம்"
"ஐய மிட்டுண்"
"ஒப்புர வொழுகு"
"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்"
"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"

இத்தகைய நீதி வாக்கியங்கள் மனித விழுமியப் பண்புகளையே வலியுறுத்துகின்றன.

இன்றைய மனிதசமூகம் காலசக்கரத்துக்கு ஏற்ப ஓய்வின்றி சுழன்று சென்று கொண்டிருக்கின்றது. அதிலும் அமைதியின்றி அல்லல்பட்டுக் கொண்டு உழன்று திரிகின்றனர். இவற்றுக்கு மத்தியிலும் மனிதன் ஆனவன் நல்ல விழுமியப் பண்புகளையும் மதித்து அதனையும் வாழ்வில் கடைப்பிடித்து ஒழுகுவானாயின் மனித குலம் சாந்திபெறும் என்பதில் ஐயமில்லை.



## சிறுமியின் இருதய சத்திர சிகிச்சைக்கு மாமன்றம் நிதியுதவி

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் சமூகநலன் உதவித் திட்டத்தின்கீழ் இருதய நோயினால் பாதிக்கப்பட்டு சத்திரசிகிச்சை செய்யப்பட்ட சிறுபிள்ளை ஒருவருக்கு மாமன்றம் நிதியுதவி வழங்கியிருக்கிறது.

யாழ்ப்பாணம் கொழும்புத்துறையைச் சேர்ந்தவர் ஹம்சிகா சைலரூபன். ஆறு வயதுச் சிறுமியான இவரது தந்தை முச்சக்கர வண்டி ஓட்டுனராகப் பணிபுரிகிறார். மிகவும் வறுமை நிலையிலுள்ள இவரது குடும்பத்தில், இன்னொரு பிள்ளையும் உண்டு.

இருதய நோயினால் பாதிக்கப்பட்டிருந்த ஹம்சிகாவுக்கு சத்திர சிகிச்சை செய்ய வேண்டிய தேவையேற்பட்டது. கொழும்பு அப்போலோ மருத்துவ மனையில் கடந்த ஜூன் மாதத்தில் இவருக்கான சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. சிகிச்சை வெற்றிகரமாக நடந்தேறியது. இதற்கு 411,000.00 ரூபா மொத்தச் செலவினமாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இந்தச் செலவினத்தில் ஒரு பகுதியாக 157,000.00 ரூபாவை அகில இலங்கை இந்து மாமன்றம் வழங்கியிருக்கிறது. இதில் பெருமளவு மாமன்ற முகாமைப்பேரவை உறுப்பினர்களிடமிருந்து நிதியுதவியாகப் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன், மிகுதி மாமன்ற நிதியிலிருந்தும் வழங்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாண லயன்ஸ் கழகம் ரூபா 100,000.00 கொடுத்துதவியிருப்பதும் குறிப்பிடத்தக்கது. மிகுதி ஜனாதிபதி நிதியிலிருந்து கோரப்பட்டுள்ளது. இந்தத் தொகைக்கும் மாமன்றம் உத்தரவாதம் வழங்கியிருக்கிறது.



இது சிறுவர்களுக்கான சிறப்புப் பகுதி. சிறுவர் சிந்தனைக் கதைகள் சிலவற்றை இங்கு தருகிறோம். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு இக்கதைகளைப் படித்துக் காட்டி அதன் தத்துவத்தை விளக்குவது கடன்.

சிறுவர் ஒலி

# அறிவில்லாத அன்பு

'அப்பா' உலகில் தோன்றிய மதப் பெரியார்கள் அனைவரும், பிறரோடு அன்பாக இரு, அன்புசெய், அன்புதான் எல்லாவற்றுக்கும் மூல காரணம். அன்பு இல்லாவிட்டால், உலக மக்கள் அனைவருமே காட்டு மிராண்டிகளாகத்தான் இருப்பார்கள் என்றுதான் சொல்லியிருப்பதாக நான் படித்திருக்கிறேன். ஆனால் நீங்கள், அறிவற்ற அன்பு காட்டாதே என்று அடிக்கடி சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். அது என்ன அறிவற்ற அன்பு? அப்படி ஒரு அன்பு இருக்கிறதா? சற்று தெளிவுபடுத்துங்கள் அப்பா'' என்றான் மகன்.

''தம்பி! அன்பில்லாமல் இந்த உலகமே இயங்கிட முடியாது. அன்பு செலுத்துவதற்கும் ஒரு எல்லை உண்டு. அந்த எல்லையை மீறாமல், அறிவும் சேர்ந்த அன்பாக இருந்தால்தான், அன்பின் தத்துவத்தை அறிந்திட முடியும். சரி! ஒரு சிறு கதை சொல்லு கிறேன். இது எனது அப்பா சொன்ன கதை. நான் உனக்கு சொல்லுகிறேன். நீ உனது நண்பர்களுக்கு சொல். இளம் வயதில், இளம் உள்ளங்களில் அறிவற்ற அன்பை விதைத்தால் தான், பெரியவர்களாக வந்த பின்பு, நல்ல அறுவடையை எதிர்பார்க்க முடியும்.

ஒரு கிணற்றிலே தேள் ஒன்று தவறி விழுந்து, தத்தளித்துக் கொண்டிருந்தது. அவ்வழியாக வந்த ஒரு முனிவர் அதைப் பார்த்து விட்டார். ஐயோ பாவம்! உயிருக்காகப் போராடிக் கொண்டிருக் கிறதே. உயிருக்காகப் போராடும் ஒரு ஜீவனை காப்பாற்றுவது, அன்புள்ளம் கொண்ட என்னால் முடியும். அது எனது கடமையு மாகும் என எண்ணமிட்டார். உடனே தேளை மெதுவாகக் கையில் பிடித்தார். தேள் அவரை கொட்டி விட்டது. வலி பொறுக்க முடியாத முனிவர் கையை உதறினார். தேள் மறுபடியும் கிணற்றில் விழுந்து தத்தளித்தது. மீண்டும் தேளுக்கு உதவுவோம் என நினைத்து, தேளை நோக்கி கையை நீட்டினார். மீண்டும் தேள் அவரை கொட்டிவிட்டது. இப்படியாகப் பல முறைகள் தேளைப் பிடிக்க முயல்வதும், தேள் அவரை கொட்டுவதுமாக இருந்தது. முனிவரும், தேளை எப்படியும் காப்பாற்றிவிட வேண்டும் என்ற எண்ணத்தி லேயே முயன்று கொண்டிருந்தார். அந்நேரத்தில் அவ்வழியாக வந்த ஒரு வழிப்போக்கன், முனிவரின் செயலைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் முனிவரை நோக்கி, ''சுவாமி! தேள் கொட்டுவது தெரிந்தும் மீண்டும் மீண்டும் ஏன் அதைப் பிடிக்கிறீர்கள்'' எனக் கேட்டான்.

அதற்கு முனிவர், தம்பி! நீ பிற உயிர்களின் மேல் அன்பு செலுத்துவதில்லையா? அது உயிருக்காகப் போராடுகிறதே! தேளின் பண்பு கொட்டுவது. அதை மாற்ற முடியாது. அதுபோல, உயிருக்காகப் போராடும் ஒரு ஜீவனைக் காப்பாற்றுவது மனிதனின் பண்பு. இதையும் மாற்ற முடியாது. அன்பு செலுத்த வேண்டியது எமது எல்லோருடைய கடமையல்லவா? அதனால் தேளை எப்படியும் காப்பாற்றுவேன்'' எனக் கூறி விட்டு மீண்டும் தேளைப் பிடிக்க கையை நீட்டினார். உடனே வழிப்போக்கன், ''சுவாமி! சற்று பொறுங்கள். தேளின் உயிரைக் காப்பாற்ற வேண்டும். அதுதான் பண்பு, அன்பு என்கிறீர்கள். அதை நானே செய்கிறேன் சுவாமி'' எனக் கூறியவன், தன் கையிலிருந்த சிறு தடியை தேளின் அருகே கொண்டு சென்றான். உடனே தேள் தடியைப் பிடித்துக் கொண்டது. தடியுடன் தேளை வெளியில் போட்டான். தேள் துள்ளிக் குதித்து ஓடியே போய்விட்டது. வழிப்போக்கன் ஒன்றும் பேசாது தன் வழியே சென்றுவிட்டான்.

திகைப்புற்ற முனிவர், ஒரு கணம் அசையாது நின்றார். அவரின் எண்ணம் சுழன்றது. சாதாரண ஒரு வழிப்போக்கன், தனக்கு எந்தவித பாதிப்பும் இல்லாது, தேளை காப்பாற்றி விட்டானே. அவன் பாவித்தது சாதாரண ஒரு சிறு தடியைத்தான். நான் ஏன் அதைச் செய்யத் தவறினேன்? எனக்கும் அன்பு, பண்பு, இரக்கம், அத்தோடு அறிவும் இருப்பதாக எண்ணிக் கொண்டிருந் தேனே. ஆனால், இடம், பொருள், ஏவல் இவற்றின் அர்த்தமும், சந்தர்ப்பத்திற் கேற்றவாறு நடந்து கொள்ளவும் நான் அறியாதது ஏன்? ஆம்! இப்போதுதான் புரிகிறது. எனக்கு அறிவு என்ற ஒன்று இல்லை. இருந்திருந்தால் நான் சிறு தடியை மட்டுமல்ல, பெரிய தடியைக் கொண்டே தேளைக் காப்பாற்றி இருப்பேன். தேளிடமும் கடிபட்டிருக்க மாட்டேன். இதற்கு ஒரே வழி – நான் ஏன் அந்த வழிப்போக்கனிடம் ''அறிவு'' பாடம் படிக்கக் கூடாது. அன்பினால் மட்டும் எதையும் சாதித்திட முடியாது என எண்ணியவர் வழிப்போக்கன் சென்ற பாதையில் அவனைத்தேடி ஓடினார். அவரின் வாய், 'கற்றது கை மண்ணளவு' என ஓயாது உச்சரித்துக் கொண்டிருந்தது.''

''அப்பா! அப்பா! போதும்! அன்பு என்றால் என்ன? அறிவு என்றால் என்ன? இவை இரண்டுமே ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்தது என்பதை உணர்ந்து கொண்டேன். இதைத்தான் திருவள்ளுவர் திருக்குறளில்,

*''அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு*
*என்புதோல் போர்த்த உடம்பு''*

என்கிறார். இக்குறளிலே ஒரு சிறு திருத்தம் செய்து,

*''அன்பின் வழியது உயிர்நிலை அறிவிலார்க்கு*
*என்புதோல் போர்த்த உடம்பு''*

என எழுதியிருந்தால் இன்னும் நன்றாகவே இருந்திருக்கும். இல்லையா அப்பா!'' என்றான் அந்த புத்திசாலி மகன்.

ஜி.ஜெயராமன்
இந்துக் கல்லூரி விடுதி – ''சக்தி இல்லம்''
இரத்மலானை

மனதைத் தூய்மையாக வைத்துக்கொண்டால்
ஆத்மா நன்கு பிரகாசிக்கும்
(ஆத்மபோதம்)




இது மாணவர்களுக்கான பக்கம். இதில் சமய வரலாறு, மற்றும் புராணக் கதைகள் உட்பட மாணவர்களுக்குப் பயனுள்ள பல விஷயங்கள் அலங்கரிக்கின்றன. இது போன்ற விஷயங்கள் மாணவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

# பெரிய புராணக் கதைகள்
# திருநாளைப் போவார் நாயனார்

சோழ வளநாட்டின் ஒரு பகுதியில் கொள்ளிட நதி பாய்ந்து செல்கிறது. அந்நதி தன் அலைக்கரங்களால் செழுமணிகளை அள்ளி அள்ளித் தரும். அவற்றை கரையின் இருமருங்கும் தாமரை மலர்கள் கைநீட்டி வாங்கும். அந்தப் பகுதி மேற்கானாடு என வழங்கப்படுகிறது.

அந்த நாட்டில் ஆதனூர் என்னும் சிற்றூர் உண்டு. அவ்வூரில் உழவர்கள் எருதுகள் பூட்டி வயலை உழுவார்கள். அப்போது சேற்றிலுள்ள சினை நண்டுகள் படைச்சாலுக்குத் தப்பித் தாமரை மலரில் தாவி ஏறிக் கரு ஈனும். தாமரை மலர்களோ தேன் சொரியும். மரங்கள் செழுப்பமாக உயர்ந்து வளர்ந்து தங்கள் மலர்க் கரங்களை நீட்டிச் சூரிய மண்டலத்தைத் தடவும்! சோலைகள் மீது மேகங்களும் வண்டுகளும் புடை சூழ்ந்து நீர் மழையோ தேன் மழையோ பூஞ்சோலைகளெங்கும் பொழியும்! தடாகக் கரைகளில் உள்ள தென்னை மரங்களின் அடிப்புறம் அதிரும்படி, வாளை மீன்கள் அவற்றின் மீது எழும்பிப் பாயும். தென்னைகளோ அம்மீன்கள் குளத்திற்குள் புதைந்து போகும்படி அவற்றின் மீது நெற்றுகளைச் சொரியும். அருகில் உள்ள பலாமரங்களில் முதிர்ந்த பழங்கள் வெடித்து தேன் வெள்ளத்தைப் பொழியும். அந்தப் பொழிவிலும் வாளை மீன்கள் எவ்விப் பாயும்!

இத்தகைய வளமைமிக்க ஆதனூரில் வயல் பக்கங்களில் சிறு குடிசைகள் நிறைந்த புலைப்பாடி ஒன்று இருந்தது. அங்கு உழவுத் தொழிலை உரிமையாகக் கொண்ட மக்கள் பலர் கூட்டமாக வாழ்ந்து வந்தார்கள். புல்லால் வேயப்பெற்றவர்களுடைய சின்னஞ் சிறிய வீடுகளின் மீது பழைய கூரைகள் தென்படும். அக்கூரைகள் மீது பசிய சுரைக் கொடிகள் படர்ந்திருக்கும். அந்தப் புலைச் சேரியில் பெட்டைக் கோழிகளும் அவற்றின் குஞ்சுகளும் சுற்றிக் கொண்டிருக்கும். முற்றத்தில் நாய்க்குட்டிகள் படுத்திருக்கும். கைகளில் இரும்புக் காப்பணிந்த சிறுவர்கள் அந்நாய்க் குட்டிகளைத் தூக்கிக் கொண்டு ஓடுவார்கள். அப்போது நாய்க்குட்டிகள் குரைக்கும். சிறுவர்களின் இடையிலுள்ள இரும்புமணிச் சதங்கை ஒலிகள் கிளம்பி, அந்த மெல்லிய குரைப்பை அடக்கும்! ஆங்காங்கேயுள்ள மருத மரங்களின் நிழலில் பெண்கள் தங்கள் குழந்தையை வலிய சிறிய தோளின் மீது படுக்கவைத்துத் தூங்கச் செய்வார்கள். வஞ்சி மரத்தின் அடியில் கோழிகள் முட்டையிட்டு அடைகாக்கும் பானைகளைப் புதைத்து வைத்திருப்பார்கள். மாமரங்களின் கிளைகளில் பறைகள் தொங்கும். தென்னை மரங்களின் அடிப் பொந்துகளில் குட்டி போட்ட நாய்கள் படுத்திருக்கும். காஞ்சி மரத்தின் வாசனைக் கிளைகளில் உழவர்களை விடியற்காலையில் எழுப்பும் சேவல்கள் குடியிருக்கும். அம்மர நிழல்களில் புலைமகளிர் நெல் குற்றும் பாட்டுகளின் ஒலி எங்கும் பரவிக் கேட்டுக் கொண்டிருக்கும். குவளை மலர்களையும் நெற்கதிர்களையும் கூந்தலில் அணிந்த புலைச்சியர்கள் கள்ளுண்டு, கூந்தல் கட்டவிழ நடை தள்ளாடி நிற்பார்கள். அவர்கள் களித்துக் கூத்தாட பறைகள் கொட்டும். அப்பறைக் கொட்டின் தாளத்திற்கு ஏற்ப அவர்கள் ஆடிப்பாடி மகிழ்ந்திருப்பார்கள்.

இத்தகைய புலையர் சேரியில் ஆதித்திராவிடர் மரபில், நந்தனார் என்னும் பெயருடைய ஒருவர் தோன்றி வாழ்ந்து வந்தார். அவருக்கு இயற்கையுணர்வால் சிவபெருமானிடம் மெய்யன்பு மிகுந்திருந்தது. அவ்வூரில் அவர் புலைமைத் தொழில் புரிந்து வந்தார். ஊரிலே தோட்டம் முதலான மானிய நிலங்கள் நந்தனாருக்கு இருந்தன. அவற்றிலிருந்து கிடைக்கும் வருவாயும் உணவும் அவருடைய வாழ்வுக்குப் பயன்பட்டன. அவர் பிறந்து உணர்வு தொடங்கியவுடனேயே, பிறை சூடிய பெருமானிடம் பேரன்பு கொண்டுவிட்டார். சிந்தையில் சிவத்தையன்றி வேறு எதையும் நினைக்கமாட்டார். அவர் புலையராகப் பிறந்திருந்ததால், அக்குலத் தொழிலின் வழியே, சிவபெருமானுக்குத் திருத்தொண்டு புரிய வேண்டுமென்று கருதி, அந்நெறியிலே நின்றார். அவர் மற்றவரைப் போலவே புலைத் தொழில் புரிந்து வந்தாலும் சிவத்தொண்டில் தலைசிறந்தே விளங்கினார். சிவபெருமான் எழுந்தருளியுள்ள திருக்கோயில்கள் தோறும் பேரிகை, மத்தளம் முதலான கருவிகளுக்குப் போர்வைத் தோலும் இறுகக் கட்டும் வார்களும் நந்தனார் செய்து கொடுப்பார். வீணைக்கும் யாழுக்கும் நரம்பும் சிவார்ச்சனைக்கு கோரோசனையும் வழங்குவார். சிவன் கோயில்களின் வாயிற் புறத்திலே நின்று ஆண்டவனைத் தொழுது, உள்ளூரப் பொங்கியெழுந்து, பக்தியின் மிகுதியால் ஆனந்தக் கூத்தாடியும் பாடியும் மகிழ்வார்.

ஒருசமயம் நந்தனார் திருப்புன்கூரில் கோயில் கொண்டிருக்கும் சிவலோக நாதருக்குத் திருப்பணி செய்ய விரும்பினார். அந்த விருப்பத்திலே அவர் மனம் ஒன்றியவராய் சிவலோகநாதனை எப்போது காண்போம் என்று ஏங்கும் பெரும் காதல் கொண்டு ஆதனூரைவிட்டுக் கிளம்பி, திருப்புன்கூருக்கு வந்து சேர்ந்தார். அங்கு சிவன்கோயில் திருவாசல் முன் நந்தனார் இசைபாடிய வண்ணம் நின்றார். அவர் தாழ்ந்த சாதியைச் சேர்ந்தவர் என்பதால் கோயிலினுள் நுழைய முடியவில்லை. ஆனால் அன்பர்கள் விரும்பும் வண்ணம் அருள் புரியும் சிவபெருமானை நேராகவே கண்டு கும்பிட வேண்டும் என்று நந்தனார் பெருங்காதல் கொண்டார். அவருக்கு அருள்செய்ய விரும்பிய சிவபிரான் தம்முன்பு சந்நிதியை மறைத்துக் கொண்டிருந்த இடபதேவரான நந்தியைச் சற்று விலகியிருக்கச் செய்து நந்தனாருக்குக் காட்சி தந்தருளினார். அதைக்கண்ட நந்தனார் ஆனந்தமுற்றார். ஆண்டவனின் திருவாயில் முன் நின்றபடியே அவர் தம் தோற்கருவியைக் கீழே வைத்துவிட்டுக் கீழே விழுந்து கும்பிட்டு எழுந்தார். பிறகு அங்கிருந்து அவர் திரும்பிச் செல்லும்போது திருக்கோயிலின் ஒரு புறத்தில் ஒரு நிலம் பள்ளமாக இருப்பதைக் கண்டு அந்தப் பள்ளத்தை ஒரு பெரிய

திருக்குளமாக வெட்டி வைத்தார். பிறகு கோயில்புறத்தை வலம் வந்து கீழே விழுந்து கும்பிட்டு எழுந்து ஆனந்தக் கூத்தாடிவிட்டு, மீண்டும் திருப்புன்கூர் சிவபெருமானை வணங்கி விடைபெற்றுக் கொண்டு தம்முடைய சொந்த ஊரான ஆதனூருக்கு வந்து சேர்ந்தார்.

அதன் பிறகு நந்தனார் அருகாமையிலுள்ள பல சிவஸ்தலங் களுக்குச் சென்று வணங்கித் தமது திருப்பணிகளை மன ஒருமையோடு செய்து வந்தார். ஒருநாள் அவர் தில்லைப் பொன்னம்பல நாதரைத் தரிசிக்க பெருவிருப்பம் கொண்டார். அதற்காக சிதம்பர நகருக்குப் போக வேண்டும் என்ற பெரும் ஏக்கவுணர்ச்சி அவரை ஓயாமல் பற்றிக் கொண்டிருந்தது. அன்றிரவு முழுவதும் தில்லைக்குப் போக வேண்டும் என்ற நினைவால் கண்ணுறங்காமல் விழித்திருந்தார்.

பொழுது புலர்ந்தது. சிதம்பரப் பித்து நந்தனாரைவிட்டு அகலவில்லை. தில்லையை நினைத்து நினைத்து நந்தனார் ஓயாமல் மனமுருகி, "அந்தோ! நான் தில்லைக்குச் சென்றாலும் திருக்கோயிலுக்குள்ளே சென்று சிதம்பரநாதரின் ஆனந்தக் கூத்தைக் காணும்பேறு என் குலத்துக்கு இல்லையே?" என்றும் "இதுவும் எம்பெருமானின் திருவருள் தானோ!" என்றும் நினைத்து அங்கு செல்லும் முயற்சியைக் கைவிட்டார். ஆனாலும் தில்லை நகருக்குச் சென்று சிதம்பர நாதரைத் தரிசிக்க வேண்டும் என்ற ஆவல் மேன்மேலும் அதிகரித்து வந்ததால், "நாளைப் போவேன்!" "நாளைப் போவேன்!" என்று முடிவு செய்வார். இவ்வாறு ஒவ்வொரு நாளும் "நாளைக்குப் போவேன்!" "நாளைக்குப் போவேன்!" என்று எண்ணிப் பல நாட்களைக் கழித்தார். அதனால் அவரை எல்லோரும் "திருநாளைப் போவார்" என்று அழைக்கலானார்கள்.

இவ்வாறு பல நாட்கள் கழிந்தன. ஒருநாள் திருநாளைப் போவார் உறுதிகொண்டு, ஆதனூரை விட்டுப் புறப்பட்டு தில்லை நோக்கிச் சென்று அதன் எல்லையை அடைந்தார். சிதம்பர நகரின் எல்லையைக் கண்டதும் அவர் கீழே விழுந்து வணங்கினார். அங்கே யாகசாலைகளில் அந்தணர்கள் வளர்க்கும் ஓமப் புகை பெருகி வருவதையும் வேதம் ஓதும் இடங்களும் மடங்களும் நெருங்கியிருப்பதையும் பிறவற்றையும் கண்டார். தமது குலத்தின் குறைபாடு கருதி, கோயிலினுள் நுழைய முடியாதே என்று அவர் மனம் அதிர்ந்து நகருக்குள் நுழைவதற்கே அஞ்சி அஞ்சித் திருவெல்லையிலே நின்று விட்டார்! நின்றவர் அந் நகருக்குள் நுழைவதற்கு அரிதான பெருமையைப் பற்றி நினைக்கலானார். "இந்த எல்லையிலுள்ள யாகசாலைகள், வேத பாடசாலைகள், திருமடங்கள் எல்லாவற்றையும் கடந்து சென்றால், ஊரைச் சுற்றி மதில் சூழ்ந்திருக்கும் ஒரு கோட்டை தென்படுமாம்! அக்கோட்டையின் திருவாசலுக்குள் புகுந்தால் குன்றுகள்போல் பெரும் பெரும் மாளிகைகள் இருக்குமாம்! அங்கெல்லாம் ஆகுதிகள் பொருந்திய மூவாயிரம் வேதிகைகள் இருக்குமாம்! இவ்வாறெல்லாம் சொல்கிறார்களே! அப்படி இருக்கும்போது புலையேன் நான் எப்படி அத்திருநகருக்குள் புகுவேன்?" என்று நந்தனார் அஞ்சி அத்திருநகரின் மதிற் புறத்தின் மீதே ஆராத பேரன்பு வளர்ந்தோங்க உள்ளுருகி கையெடுத்துக் கும்பிட்டு திருவெல்லையை இரவு பகலாக வலம் செய்து சுற்றிக் கொண்டிருந்தார். உள்நுழைய இயலாமை நினைத்து நந்தனார் அயர்வடைந்து, "உள்ளே நுழைவதற்கு என் பிறவியே பெருந் தடையாக இருக்கிறதே! தில்லைப் பொன்னம்பலத்தினுள் ஆனந்தக் கூத்தாடும் நடராஜப் பெருமானை நான் எப்படிக் கும்பிடுவது? எனக்கும் சிதம்பர தரிசனம் கிடைக்குமோ?" என்று நினைந்து நினைந்து மனம் நொந்து அப்படியே உறங்கிவிட்டார்.

அன்பர் உள்ளத்தையே கோயிலாகக் கொண்ட தில்லை அம்பலவாணர் தம்முடைய மெய்யடியாரான நந்தனாரின் பேராவலையும், இன்னல் தரும் இழி பிறவி இதுவே தடை என நினைத்து நந்தனார் துயிலும் நிலைமையும் அறிந்து அத்திருத் தொண்டரின் வருத்தமெல்லாம் தீர்க்க விரும்பினார். அதற்காக சிவபெருமான் நந்தனாரின் கனவில் தோன்றிப் புன்முறுவல் செய்து, "இந்தப் பிறவி ஒழிய நீ தீயினில் மூழ்கி தில்லைவாழ் அந்தண வேதியர்களுடன் நம்மை வந்தடைவாயாக!" என்று உணர்த்தியருளினார். அது போலவே தில்லைவாழ் அந்தணர்கள் கனவிலும் சிவபெருமான் தனித்தனியாகத் தோன்றி தீயமைத்துக் கொடுக்குமாறு கூறிவிட்டுத் திருவம்பலத்தை அடைந்தார்.

தில்லை நடராஜப் பெருமானின் கட்டளையைக் கேட்ட தில்லை வாழ் அந்தணர்கள் யாவரும், அம்பலவாணரின் திருவாயிலில் அச்சத்துடன் வந்துகூடி, "எமது பெருமான் திருவருள் புரிந்த பணியினைச் செய்வோம்" என்று துதித்தார்கள்.

பிறகு அவர்கள் அனைவரும் பரிவு பெருக திருநாளைப் போவாரிடம் சென்று "ஐயரே! அம்பலத்தில் ஆடும் ஆண்டவன் கட்டளைப்படி இங்கே வந்தோம்! உமக்கு நெருப்புமூட்டி எரிதழல் அமைத்துத் தரப்போகிறோம்!" என்று விளம்பினார்கள்.

அதைக் கேட்ட நந்தனார், "அடியேன் உய்ந்தேன்!" என்று கூறி அவர்களைத் தொழுதார். மறையவர்களும் தீ மூட்டினார்கள்.

தீ வளர்ந்திருக்கும் தெற்கு மதிற்புறத்துத் திருவாயிலை திருநாளைப் போவார் அடைந்தார். தீக்குழியை அணுகியதும் இறைவனின் திருவடிகளையே தம் மனத்தில் இருத்திக் கொண்டு அந்நெருப்பை வலம்வந்தார். பிறகு அவர் தம் இரு கைகளையும் உயரத் தூக்கித் தொழுது கொண்டே, அருட்கூத்தாடும் ஆனந்தத் தாண்டவரின் திருவடிகளை நினைத்தவண்ணம் தீயிலே மூழ்கினார். அப்பொழுது சாதிப் பொய்மையோடு அவருடைய மாயப் பொய்யுடலின் திருவுருவமும் ஒழிந்தது.

மார்பில் பூணூலும் சடை முடியும் உள்ள புண்ணிய முனிவர் பெருமானாக நந்தனார் புது வடிவம் கொண்டு சிவ ஒளியுடன் தீயினின்றும் எழுந்தார்.

அவர் அவ்விதம் எழுந்தபோது, செந்தாமரை மலரில் வந்து தோன்றிய அந்தணப் பிருமனைப் போலவே தோற்றமளித்தார். ஆகாயத்தில் தேவதுந்துபிகள் முழங்கின. வானத்தில் தேவர்கள் மகிழ்ந்து ஆரவாரம் செய்து கற்பக மரத்தின் தெய்வீக மலர்களைப் பனி மழை போல் பொழிந்தார்கள். அப்பேறு பெற்ற திருநாளைப் போவாரான நந்தனாரைத் தில்லை வாழ் அந்தணர் மூவாயிரவரும் கை கூப்பித் தொழுதார்கள். சிவனடியார்களும் பணிந்து மனதில் பெருமகிழ்ச்சியடைந்தார்கள்.

தில்லைவாழ் அந்தணர்கள் உடன்வர, திருநாளைப்போவார் தெற்குத் திருக்கோபுரத்தைக் கண்டு தொழுது இறைஞ்சிய வண்ணம் விரைந்து சென்று பொன்னம்பலத்தினுள் புகுந்து கூத்தப் பெருமானின் எல்லையை அடைந்தார். அதன் பிறகு அவரை யாவரும் காணவில்லை!

தில்லைவாழந்தணர்கள் அதிசயித்தனர்; அரும்பெரும் முனிவர்கள் துதித்தனர். ஆனந்த மயமான நடராஜப் பெருமான் தம்மை வந்தடைந்த திருநாளைப் போவாரின் வினைமாசினை அறுத்து தமது மலரடிகளைத் தொழுதுகொண்டிருக்கும்படி பேரின்ப நிலையை அவருக்குத் தந்தருளினார்.

# சுபகருமங்களை இறைவழிபாட்டுடன் தொடங்கவேண்டும்

செல்வி. தே. சஹானாதேவி
தரம் 8 B
புனித அந்தோனியார் மகளிர் மகா வித்தியாலயம்,
கொழும்பு -03

மனிதன் தாய் வயிற்றில் கருவாகி பின் இவ்வுலகில் பிறந்து வாழ்ந்து தனது பூதவுடலை விட்டுப் பிரியும் காலம் வரையும் அவன் பல கருமங்களுக்குள் உட்படுத்தப்படுகிறான். அவை மங்கல கருமங்கள், அமங்கல கருமங்கள் என இருவகைப்படும். மங்கல கருமம் சுப கருமம் எனவும் அழைக்கப்படும். சுப கருமம் என்பது மங்கல செயற்பாடு. இச் செயற்பாடுகள் ஒவ்வொன்றும் நல்ல விதமாக அமைந்து நல்ல பயனை அளிக்க வேண்டும் என்னும் நல்லநோக்கத்தோடு சுப முகூர்த்தத்தில் மேற்கொள்ளப்படும் சடங்குகளோ, கிரியைகளோ சுப கருமங்கள் எனப்படும். இச் சுப கருமங்களில் சில ஆண்பாலாருக்கும், பெண்பாலாருக்கும் தனித்தும் மேற்கொள்ளப்படுவன. சுப கருமங்களில் வேறு சில பொதுவானவை. அவ்வகையில் நாமகரணம், அன்னப்பிராசனம், வித்தியாரம்பம், திருமணம் முதலான சுபகருமங்கள் இருபாலார்க்கும் பொதுவானவையாகும். காது குத்துதல், பூப்பு நீராட்டல் முதலானவை பெண்களுக்கு உரியவையாகும். நாற்று நடுகை, புதிதெடுத்தல், புதிதுண்ணல், அத்திபாரம் இடல் போன்றவை சுப கருமங்களாகும். நாம் மேற்குறிப்பிட்ட சுப கருமங்கள் பற்றி நோக்குவோம்.

### அன்னப் பிராசனம்

குழந்தைகளுக்கு பிறப்புக் காலம் தொடக்கம் சிசுப்பருவம் வரை தாய்ப்பால், பால்வகை ஆகிய நீர் ஆகாரங்களே உடல் வளர்ச்சிக்கு ஊட்டம் அளிக்கும் உணவுகளாக ஊட்டப் படுகின்றன. இப் பருவத்தில் சோறு, கறிவகைகளை மென்று, கடித்து உண்ணுவதற்குரிய பற்கள் சில சிசுக்களுக்கு முளைப்பதில்லை. பல் முளைத்ததும் பெற்றோர் அதனை மகிழ்ச்சிக்குரிய நல்ல கருமமாக கருதுவர். பல் முளைப்பு வளர்ச்சிக்கு ஏற்ப பால், பழம், பருப்பு ஆகியவற்றை குழைத்து ஊட்டுவது அன்னப் பிராசனம் எனப்படும்.

### வித்தியாரம்பம்

குழந்தைகளுக்கு அறிவையூட்டும் சுபகருமம் இதுவாகும். இதனை அட்சராப்பியாசம் என்பர். இவ்வித்தியாரம்பத்தை விஜயதசமி முதலான சுப நாட்களில் சமயச் சடங்குகளின் பின் கல்வியிற் சிறந்த ஆசானின் ஆசியுடன் ஆரம்பிப்பர். ஆசான் மாணவனை மடியில் இருத்திக்கொண்டு முன்னுள்ள தட்டில் இடப்பட்ட அரிசிக்கு மேல் மாணவனின் கையை பிடித்து 'அ முதல் ஃ' வரையுள்ள அட்சரங்களை எழுதப் பழக்குதலே வித்தியாரம்பம் ஆகும்.

### புது வீடு குடிபுகுதல் (கிருகப் பிரவேசம்)

சமுதாய அமைப்பிலே புது வீடு ஒன்றைக்கட்டி, அதில் நிலையாக வாழும் நிலைமை காணப்படுகிறது. அவ்வாறு வீடு கட்ட மனைநிலம் ஒன்றைத் தெரிதல், அதன் பரிமாணங்களைத் தீர்மானித்தல், மனைப் பொருத்தங்களை நிருணயித்தல், அத்திபாரம் இடல், கட்டுமானப் பணியை பூர்த்தி செய்தல் என்னும் செயற்பாடுகளை மனையடி சாத்திரம் கூறும் விதிகளுக்கு அமைய அமைத்தல் மரபு. இவ்வாறு புதுவீடு கட்டும் பணி நிறைவேறியதும் சுப முகூர்த்தத்தில் குடிபுகும் மங்கல நிகழ்வே கிருகப் பிரவேசமாகும். அதனையே புது மனை புகுதல் என்பர். இச்சுப கருமத்தில் செய்ய வேண்டியவை.

- புதுமனையை துப்பரவு செய்தல், கழுவுதல், அலங்கரித்தல்.
- மகளிரும் பெரியோரும் விநாயகர், லட்சுமி முதலிய தெய்வங்களின் படங்கள், நிறைகுடம், படையல், பலகார வகைகள் முதலியவற்றை தாங்கிய வண்ணம் புதுமனைப் புகுதல்.

### புதிதெடுத்தலும் புதிதுண்ணலும்

விவசாயிகள் சுப கருமங்களிற் புதிதெடுத்தல், புதிதுண்ணல் என்பன குறிப்பிடத்தக்கவையாகும். நெற்பயிர் வளர்ந்து கதிர்கள் அறுவடை செய்தல் புதிதெடுத்தலாகும். பொதுவாக தைப்பூசத்தில் இவ்வைபவம் மேற்கொள்ளப்படும்.

புதிது எடுத்தலோடு தொடர்புடைய மற்றொரு சுப கருமம் புதிதுண்ணல் ஆகும். புதிதெடுத்தல் என்னும் கருமம் நிகழ்ந்ததும் ஆலயம் சென்று புத்தரிசிப்பொங்கல் என்னும் நற்கருமத்தைச் செய்யும் விவசாயிகள் இறைவனுக்குப் படைத்த பின் பொங்கலைப் புதிதுண்ணல் என்னும் வழக்கமாக மேற்கொள்வர். சுபகருமங்களை இறைபக்தியுடன் தொடங்கும்போது அவை சிறப்பாக நிறைவடையும் என்பது பண்டு தொட்டு வரும் நம்பிக்கை. இக்காலத்தில் சுப கருமங்களை ஒருசிலர் மட்டுமே பின்பற்றுகின்றனர். இறைவன் அருளுடன் எல்லா நற்பணிகளும் நிறைவேற பண்டு தொட்டு வரும் நம்பிக்கைகளைப் பேணிக் கடைப்பிடிக்க வேண்டும்.

---

# இந்து ஒளியே நீ பல்லாண்டு வாழ்க !

என் இதயத்திலமர்ந்து
இறைவனின் அருளைப் பெறுவதற்கு
உதவிய இந்து ஒளியே!
உனக்கும் உனை யார்த்த
இந்து மாமன்றத்தினர்க்கும்
என் இதயங்கனிந்த
இனிய வாழ்த்துக்கள்.
ஏழிசையாய் இசைப் பயனாய்
இருப்பவன் இறைவன்.
பாரொடு விண்ணாய்ப்
பரந்த எம்பெருமானை
ஓசை ஒளியோடு பாட
உலகெலாம் உலாவரும்
ஒவ்வொரு இந்து ஒளியிலும்
மூவர் பாடிய திருமுறைகளும்,
ஆலயங்களின் சரிதையும்
இன்னும் பல அரிய விஷயங்களும்
எமக்களித்து இறை பக்தியை ஊட்டுகிறது.
இந்து ஒளி உலகமெலாம்
தொடர்ந்து ஒளி வீச வேண்டும்.
நீ உலா வந்த பத்தாண்டுகளென்ன
பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பலகோடி நூறாயிரம் ஆண்டுகள்
இந்து ஒளியே!
வாழ்க! வளர்க! வளம் பெறுக!

தேவாரமாமணி சிவகவிமணி,
- திருமதி செல்வநாயகி முத்தையா
வத்தளை



# உலையிலே ஊதி உலகக் கனல் வளர்ப்பாள்

**மங்கையர் ஒளி**

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

தமிழர் பண்பாட்டில் வழிபாடு பெறும் சிறப்பிடம் தனித்துவமானது. மனித வாழ்வியலில் எதிர்கொள்ளும் துன்பங்களை வென்றெடுக்க வழிபாடே பெரிதும் துணை புரியும். நமது முன்னோரது வரலாறுகள் இந்த உண்மையைத் தெளிவாகவே உணர்த்தியுள்ளன. மனித வாழ்வின் படிமுறை வளர்ச்சியில் வழிபாட்டுப் பயிற்சியும் இணையவேண்டும். காலத்தின் கடப்பையும் வாழ்வின் தேவையையும் வழிபாட்டு நடைமுறைகள் கூர்மையாகக் காட்டுகின்றன. இயற்கையின் தோற்ற வேறுபாடு, பருவ மாற்றங்கள் என்பன வழிபாட்டுடன் நன்கு தொடர்புபடுத்தப் பட்டுள்ளன. மனித உடல் வளர்ச்சியும் உணர்வுநிலை வளர்ச்சிகளும் வழிபாட்டுடன் இணையும் பக்குவ நிலையால் வாழ்க்கை அமைதியாகவும் மகிழ்வாகவும் நிறைவாகவும் இருக்கும். இத்தகைய நன்மைகளைத் தரும் வழிபாடு பற்றிய தெளிவும், அறிவும், பயிற்சியும் இன்று பெரிதும் வேண்டப்படுபவை. எனவே அதுபற்றிய சில கருத்துகளை முன்வைக்கவே இக்கட்டுரை முயல்கிறது.

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்", "தாயிற் சிறந்ததொரு கோயில் இல்லை" என்ற முன்னோரின் கூற்றுகளை இன்று ஆழமாக நோக்குமிடத்து வழிபாட்டின் மூல ஊற்றை உணரமுடிகிறது. தமிழர் பண்பாட்டில் தாயைத் தெய்வமாகப் போற்றும் பண்பு நலன் சிறப்பானது. கருவொன்றைத் தன் வயிற்றிலே தாங்கித் தன் குருதியிலே அதனை வளர்த்து ஈன்று புறந்தரும், தாயின் கடன் ஒப்பற்றது. குழந்தைக்கு முலைப் பாலூட்டிப் பிணிகளிலிருந்து பாதுகாத்து வளர்க்கும் பண்பு தெய்வக் கொடையானது. இன்றைய விஞ்ஞானம் குழந்தைப் பேற்றை வணிகப் பேறாக்கிவிட்டது. ஆனால் நமது முன்னோர் வாழ்வியலில் மக்கட்பேறு தெய்வக் கொடையென நம்பப்பட்டது. அதனால் தாயின் பணியும் பங்கும் பெரிதும் மதிக்கப்பட்டன. குழந்தையின் முன்னறி தெய்வமாகத் தாய் வழிபடப்பட்டாள். தாய்மையின் பண்பு நலனுக்குப் பெண்மையின் தனித்துவமான ஆற்றல்களும் உரம் சேர்த்தன.

பெண்மையின் தனித்துவமான ஆற்றல்கள் காலங்காலமாகப் பலராலும் வியந்தும் விமர்சிக்கப்பட்டும் வருகின்றன. மனித வாழ்வு முற்று முழுதாக இயற்கையோடு ஒட்டியதாக இருந்தபோது பெண்மையின் பேராற்றல் பெரிதும் மதிக்கப்பட்டது. ஆனால் மனித வாழ்வில் செயற்கையான செயற்பாடுகள் சேர்ந்தபோது பெண்மையின் பேராற்றல் புறந்தள்ளப்பட்டது. வழிபாட்டு நிலையில் பெண்ணின் மதிப்பும் குறைவடைந்தது. பருவ வளர்ச்சி கோல நிலையில் மட்டுமே பெண்மை பேசப்படலாயிற்று. பெண்மையின் கொடைநிலைகள் விஞ்ஞானத்தின் விந்தையான செயற்பாடுகளால் நிறைவேற்றப்பட்டபோது பெண்மையின் பங்களிப்பும் குறைவடைந்தது. ஆனால், இயற்கையின் சீற்றம் வெளிப்படும் வேளையில் விஞ்ஞானம் செயலிழந்து நிற்கையில் மீண்டும் பெண்மையின் பேராற்றல் பற்றிய எண்ணம் தோன்றுகிறது. பெண்ணிடம் புதைந்து கிடக்கின்ற ஆற்றல்களை முன்னோர் உணர்ந்து வழிபட்ட நிலைகளை மீள நோக்கும் செயற்பாடும் தோன்றுகிறது.

இந்த நிலையைத் தெளிவாக விளங்கிக்கொள்ள மக்கள் கவிஞன் பாரதியின் பாடல்கள் நன்குதவும். வாழ்க்கையில் வறுமையுடன் பிடியிலே சிக்கித் தவித்த பாரதி வழிபாட்டையே துணையெனக் கொண்டான். அவன் பாடிய எளிய தமிழ்க் கவிதைகளில் தெய்வப்பாடல்களும் நிறைய உண்டு. மரபான வழிபாட்டு வாழ்வியலில் வந்த பாரதி, துன்பந்தீர அதுவே பிறக்கும் உதவும் என நம்பினான். பாரதி பாடிய தோத்திரப் பாடல்களில் சக்தியை வியந்து பாடிய பாடல்களே அதிகம். சக்தியை வழிபாடு செய்து அனைத்தையும் பெறலாம் என அவன் வழிகாட்டினான். புதுமைப் பெண் பற்றிய சிந்தனையே, சக்தியின் பேராற்றல் கண்ட பாரதியின் புதிய சிந்தனையாகும். சக்தி வழிபாட்டிற்காக ஒதுக்கப்பட்ட காலம் ஒன்று அவன் காலத்தில் மரபாக இருந்தது. அது நவராத்திரி வழிபாடாகும். முன்னோரின் வழிபாட்டு நடைமுறைகளில் பெண் தெய்வ வழிபாடும் இடம் பெற்றிருந்தது. பாரதி பாடிய நவராத்திரிப் பாட்டு இதற்கு நல்லதொரு சான்று.

> *"சத்ய யுகத்தை அகத்தி லிருத்தி*
> *திறத்தை நமக்கரு ளிச்செய்யும் உத்தமி"*

எனப் பாரதி பாடுகிறான். எமக்குரிய ஆற்றல்களை நல்கும் சக்தியை வழிபடல் நன்று. இதை விடப் பாரதி பாடிய நவராத்திரிப் பாட்டு மரபுமரபாக வந்த பெண்மையை துதிக்கின்ற வழிபாட்டு நிலைகளைத் தெளிவாகப் புலப்படுத்துகின்றது. மனிதனுக்குத் தேவையான ஆற்றலை மூன்று பெண்மையின் பேராற்றல்களாக பாரதி இனம் காட்டுகின்றான். பராசக்தி, வாணி, ஸ்ரீதேவி, பார்வதி எனப் பெண் தெய்வங்களாகப் பெண்மையின் பேராற்றல் வழிபடப்பட வேண்டுமெனப் பாரதி ஒரு வரையறை செய்துள்ளான். மலைமகள், கலைமகள், திருமகள் என மூன்று வடிவங்களாக நாம் வழிபடும் தெய்வங்களின் ஆற்றல் பெண்களிடம் இயற்கையின் கொடையாக இருப்பதை உணரவைக்கிறான். அது ஒன்றாகி நிற்கும் நிலையும் உண்டு என்பதையும் தெளிவு படுத்தியுள்ளான். அதனைப் பின்வரும் பாடல் காட்டுகிறது.

> *"மாதா பராசக்தி வையமெல்லாம் நீ நிறைந்தாய்*
> *ஆதாரம் உன்னையல்லால் ஆரெமக்குப் பாரினிலே*
> *ஏதாயினும் வழி நீ சொல்வாய் எமதுயிரே*
> *வேதாவின் தாயே மிகப் பணிந்து வாழ்வோமே."*

இந்தப் பாடலில் பாரதி காட்டும் வழிபாட்டு மரபு தாய்மையினை வழிபடும் மரபின் தொடர்ச்சியை விளக்குகிறது. தாயின் பரிவும் அன்பும் குழந்தையின் தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்றும்.

உலகத்திலே தாயன்புக்கு நிகரானது எதுவும் இல்லையென்பர். 'எனக்கு ஆதாரம் நீயே' எனப் பாரதி பாடும்போது தன் குழந்தமையனுபவத்தை நினைந்தே பாடுகிறான். இந்த அநுபவம் உலகத்துப் பிறந்த அனைவருக்குமே பொருந்தும். வயிற்றுப்பசியை உணர்ந்து பாலூட்டும் தாயின் அரவணைப்பு எல்லாக்குழந்தை களாலும் உணரப்பட்ட அநுபவமே. எதையும் தாயிடம் கேட்டுப் பெறும் குழந்தையின் குறை நிரப்பும் தெய்வீகப் பண்பு தாயின் சிறந்த குணநலமாகும். எமக்காகத் தனது உயிரை தரவல்ல அந்த ஒப்பற்ற தாய்மையை வணங்கினால் அவள் ஏதாவது நல்ல வழி கூறுவாள் எனப் பாரதி பாடியுள்ளான். தாயைப் பணிந்து வாழ்வதே சிறந்தது என்ற ஒரு அறிவுரையையும் இப்பாடல் மூலம் பாரதி கூற முற்படுகிறான். வீட்டுநிலையில் மட்டுமன்றி நாட்டு நிலையில் மட்டுமன்றி பரந்த உலகமட்டத்திலே கூட எமக்கு ஆதாரமாக இருக்கக்கூடியது பெண்மையின் பேராற்றலை வழிபடுவதே, என்பதுதான் பாரதியின் முடிவாக உள்ளது. குழந்தைப் பருவம் முதல் முதுமை வரை இந்த வழிபாடுதான் தேவையென உணர்த்துகின்றான்.

பெண்மையின் பேராற்றல்களை மூவகைப்படுத்திச் சிறப்பாகக் காட்டும் முயற்சியையும் பாரதி மேற்கொண்டுள்ளான். பூமகள், கலைமகள், திருமகள் என மூன்று உருவங்களாக அந்த ஆற்றலை எமது முன்னோர் வழிபாட்டுமரபு முன்னரே உணர்த்தி யுள்ளது. மூன்று தெய்வநிலைகளும் மூன்று வாழ்வியல் தேவை களை உணர்த்தும் உருக்களாயுள்ளன. வாணி, ஸ்ரீதேவி, பார்வதி எனத் தெய்வ நிலையில் மூன்று ஆற்றல்கள் வழிபடப்பட்டன. வாணி பற்றிய பாரதியின் பாடல் வருமாறு,

*"வாணி கலைத் தெய்வம் மணிவாக் குதவிடுவாள்*
*ஆணி முத்தைப் போலே அறிவு முத்து மாலையினாள்*
*காணுகின்ற காட்சியாய்க் காண்பதெலாங் காட்டுவதாய்*
*மாணுயர்ந்து நிற்பாள் மலரடியே சூழ்வோமே."*

கலைக்குத் தெய்வமான வாணியின் தன்மைகளை விளக்கும் பாரதியின் பாடலில் புதைந்திருக்கும் பெண்மையின் பேராற்றலான அறிவுத்திறன் மானிடர்க்கு மிகவும் இன்றியமையாதது. அறிவின் திறத்தை வெளிப்படுத்துவது வாக்குத்திறனாகும், "தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்" என வள்ளுவர் பெண்மையின் வாக்குத்திறனை விளக்கினார். பெண்ணின் பேச்சு இடத்திற்கேற்பச் செயலுக்கேற்ப அமைந்திருக்கும். முத்துப் போல அறிவு முத்தை உதிர்க்கும் ஆற்றல் பெண்ணுக்கு உண்டு எனப் பாரதி கூறுகிறான். பெண் பல்வேறு அணிகலன்களால் தன்னை அழகு செய்பவள். அவளுக்கு 'அறிவு' என்னும் முத்துமாலை அழகுக்கு அழகு செய்வதாய் உள்ளது. பாரதியின் 'புதுமைப்பெண்' என்னும் கவிதையில் பெண்ணை "மதுரத்தே மொழி மங்கையர்" என்று குறிப்பிட்டுள்ளான். பேச்சாற்றல் கொண்ட பெண்மையின் அறிவு பேச்சாற்றல் கொண்ட பெண்மையின் அறிவு "காணுகின்ற காட்சியாய்க் காண்பதெல்லாங் காட்டுவதாய் மாணுயர்ந்து நிற்கும்" எனப் பாரதி கூறுவது அவன் காணவிரும்பிய புதுமைப் பெண்ணின் கோலமாகும். பெண்ணின் மலரடியைச் சூழ்ந்து வாழ்வதே நல்லது என்ற பாரதியின் கூற்று பெண்ணின் தாயன்பை நாடி நிற்பதே நல்லதென உணர்த்துகிறது.

*" மனிதர் தம்மை அமரர்க ளாக்கவே*
*ஆற்றல் கொண்ட பராசக்தி யன்னை நல்*
*அருளினா லொரு கன்னிகை யாகியே*
*தேற்றி உண்மை கள் கூறிட வந்திட்டாள்."*

எனப் 'புதுமைப் பெண்' என்ற பாடலின் அடிகள் இக்கருத்தை, மனித வாழ்வியல் நிலையில் பெண்மையின் தோற்றம் தெய்வத்தின் தோற்றமே எனவும், பெண்ணின் பேச்சு உண்மையான தெய்வத் தின் கூற்று எனவும் விளக்கி நிற்கின்றன. பாரதியின் ஸ்ரீதேவி பற்றிய பாடல் பெண்மையின் பிறிதொரு ஆற்றலை வெளிப் படுத்திக் காட்டுகிறது.

*" பொன்னரசி நாரணார் தேவி புகழரசி*
*மின்னுநவ ரத்தினம்போல் மேனியழகுடையாள்*
*அன்னையவள் வையமெலாம் ஆதரிப்பாள் ஸ்ரீதேவி*
*தன்னிரு பொற்றாளே சரண்புகுந்து வாழ்வோமே"*

மனித வாழ்வியலுக்குச் செல்வம் தேவை. விரும்பியதைப் பெறப் பொருட்செல்வம் வேண்டும். "பொன்னரசியின் பொற்றாளை" வணங்கினால் நாம் மகிழ்வாக வாழ்வு நடத்தலாம் எனப் பாரதி கூறுகிறான். நாரணன் தேவியான ஸ்ரீதேவி செல்வம் தருபவள். இந்த வையம் முழுவதையும் ஆதரிப்பதற்கு அவளுடைய அருள் தேவை. பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை யென்றார் வள்ளுவர். பொருட் செல்வம் பேணும் பெண்ணின் குணநலம் வாழ்க்கைக்கு வளம் தரும். எனவே செல்வத் தரும் ஆற்றல் பெண்ணின் தனிச்சிறப்பாயமையவேண்டும். செல்வத்துடன் மேனியழகையும் பெண்மை கொண்டிருப்பது பிறிதொரு சிறப்பு. செல்வச் சிறப்புப் பெற்ற பெண்மையின் கால்களைச் சரணாகக் கொண்டு வாழ்வதே நன்று என்ற பாரதியின் கருத்தே நவராத்திரி வழிபாட்டு நடைமுறையில் நடுமூன்று நாட்களையும் ஸ்ரீதேவி வழிபாட்டிற்கெனச் சிறப்பாக ஒதுக்கப்பட்டதன் விளக்கமாக வுள்ளது. பார்வதியைப் பற்றிப் பாரதி பாடிய பாட்டு நமது உலகியல் வாழ்வில் பெண்மையின் ஆற்றல் எவ்வாறு இணைந்திருக்கின்றது என்பதை விளக்குகின்றது.

*"மலையிலே தான் பிறந்தாள் சங்கரனை மாலையிட்டாள்*
*உலையிலே ஊதி உலகக் கனல் வளர்ப்பாள்*
*நிலையில் உயர்ந்திடுவாள் நேரே அவள் பாதம்*
*தலையிலே தாங்கி தரணிமிசை வாழ்வோமே."*

இப்பாடலில் உலகவாழ்வியலில் பெண்மையின் சிறப்பிடம் துலக்கமாகக் காட்டப்பட்டுள்ளது. பெண் தனித்துப் பணி செய்யும் பிறவி அன்று. அவள் ஆணுடன் இல்லறத்தில் இணைந்து பணிசெய்யும் நிலையில் உலகையே வளர்க்கின்ற பெரும் பணிசெய்யும் ஆற்றலுடையவளென்பது உணரப்படுகின்றது. மலையிலே பிறந்த பார்வதி சங்கரனை மாலையிட்டு மனைவியாக வாழும் நிலையைப் பாரதி எடுத்துக் கூறுவதற்கு ஒரு காரணம் உண்டு. ஆணும் பெண்ணும் இணைந்து வாழும் வாழ்வு இல்லறம் எனப் பேசப்பட்டது. இல்லறம் நன்மக்கட்பேறால் சிறப்புறும். மனைமாட்சிக்கு நன்கலமாக அமைவது நன்மக்கட்பேறாகும். பார்வதி சங்கரனை மாலையிட்டு இல்லறம் நடத்தியதாகக் கூறுவதால் தெய்வீக நிலையிலும் மனித நிலையிலும் ஒரு ஒழுங்கான வாழ்வியல் நடைமுறை இருப்பது உணர்த்தப்படுகிறது. உலையிலே ஊதி உணவு ஆக்கும் பெண்மையின் பெரும்பணியைப் பாரதி தெய்வீக நிலையிலும் எடுத்துக்காட்டுவது தமிழர் வழிபாட்டு நடைமுறையின் சிறப்பாகும். மனித நிலையிலே தெய்வங்களை இணைக்கும் 'பாவனா சக்தி' பக்தியின் உயர்ந்த பக்குவநிலை. ஆழ்வார்களும் நாயன்மார்களும் அந்நிலையில் வழிபாடு செய்தனர். பாரதியின் உள்ளத்திலும் பெண்மையின் பேராற்றல் வழிபாட்டிற்குரியது என்ற தெளிவு ஏற்பட்டபோது தெய்வீக வாழ்வுக்கும் மானிட வாழ்வுக்கும் உள்ள வேற்றுமை விலகிப் போயிற்று.

'உலையிலே ஊதி உலகக் கனல் வளர்ப்பாள்' என்னும் அடி இந்தப் பக்குவ நிலையை நன்றாக உணர்த்தி நிற்கிறது. தாய்மையின் உயர்ந்த நிலையையும், தன்னைச் சார்ந்த

அனைவரையும் தாய்மை, உணவளித்துக் காக்கும் உயர்ந்த கொடை மரபையும் பாரதி மனத்துள் வாங்கிப் பாடியுள்ளமை புலனாகின்றது. எனவே, தாயின் பாதங்களைத் தலையிலே தாங்கி வாழவேண்டும் என்று அறிவுறுத்துகிறான். பராசக்தியைப் பணிந்து வாழச் சொன்னான். வாணியின் மலரடியைச் சூழ்ந்து நிற்கச் சொன்னான். ஸ்ரீ தேவியின் தாளைச் சரண்புகச் சொன்னான். பார்வதியின் பாதத்தைத் தலையிலே தாங்கச் சொன்னான். அன்னை என்னும் வடிவிலே இந்த மூன்று சக்திகள் இருப்பதை நாம் உணரவேண்டும். பாரதியின் இலக்கு இதுவே. நவராத்திரிப் பாட்டு தாய்மையைப் போற்றுவதுடன் அதனை இருநிலைகளில் வைத்து நாம் நோக்குவதற்கும் வழி செய்துள்ளது. பெண்மையின் பேராற்றலை வழிபடுவதற்கு பாரதி காட்டும் நடைமுறை நவராத்திரி விழாவாக இன்றுவரை நிலைத்துள்ளது.

நடைமுறை வாழ்வியலில் நவராத்திரி வழிபாடு இப்பண்பு நலனை நன்கு விளக்கும் வகையில் நடைபெறுகிறது. துர்க்கை, மகாலக்சுமி, சரஸ்வதி என்னும் மூன்று பெண் தெய்வங்களையும் வழிபட ஒன்பது நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. பத்தாம் நாள் விஜயதசமி என நிறைவு நாளாக அமைந்துள்ளது. அழிவுசக்தி, ஆக்கசக்தி, அறிவு சக்தி என மூன்று பேராற்றல்களை நாம் பெறுவது நவராத்திரி வழிபாட்டின் பயன் என்ற நம்பிக்கையும் நம்மிடையே வேரூன்றியுள்ளது. வையம் முழுவதையும் படைத்தளிக்கின்ற மகாசக்தியின் புகழை வாழ்த்தினால் நாம் செய்யும் வினைகள் அனைத்திலுமே வெற்றியுண்டாகும். எமது உடலில் உள்ள சக்தியை ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்குப் பயன்படுத்த வேண்டும். பராசக்தியின் புகழ் பாடுவதால் நூறுவயது புகழுடன் வாழலாம் என பாரதி சக்தி வழிபாட்டின் பயன் கூறுகிறான்.

*"மாறுதலின்றிப் பராசக்தி தன் புகழ்*
*வையமிசை நித்தம் பாடு கின்றோம்*
*நூறுவயது புகழுடன் வாழ்ந்துயர்*
*நோக்கங்கள் பெற்றிட வேண்டுமென்றே"*

மகாலக்குமியை வழிபடுவதால் ஆக்க சக்தியினைப் பெறலாம். வாழ்வில் வறுமை நீங்கிச் செல்வச் செழிப்புடன் வாழ அவள் அருள் புரிவாள். நாம் செய்யும் வினைகளில் அழகும் பொலிவும் அவள் தருவாள். நமது வேதனைகளையும் வெறுப்புகளையும் நீக்க நல்ல செயற்பாடுகளைச் செய்ய அவள் அருள்தேவை. எனவே, அவள் வாழும் இடங்களை நாம் அறிந்திருக்க வேண்டும் என்பதால் பாரதி தனது பாடலில் அவள் வாழுமிடங்களை வரிசைப்படுத்திக் கூறியுள்ளான்.

*"பொன்னிலும் மணிகளிலும் – நறும்*
*பூவிலும் சாந்திலும் விளக்கினிலும்*
*கன்னியர் நகைப்பினிலும் – செழுங்*
*காட்டிலும் பொழிலிலும் கழனியிலும்*
*முன்னிய துணிவினிலும் – மன்னர்*
*முகத்திலும் வாழ்ந்திடும் திருமகளைப்*
*பன்னி நற்புகழ்பாடி – அவள்*
*பதமலர் வாழ்த்தி நற்பதம் பெறுவோம்"*

உலகிலுள்ள அழகான பொருட்கள் எல்லாம் இந்த ஆக்க சக்தியின் உறைவிடமாம். பொன், மணி, நறும்பூ, சாந்து, விளக்கு, கன்னியர் நகைப்பு, செழுங்காடு, பொழில், களனி, முன்னிய துணிவு, மன்னர் முகம் என மகாலக்குமி உறையும் இடங்கள் எல்லாம் அழகும், செழுமையும் வளமும் பெற்றவையாயுள்ளன. இதனை அறிவிக்கும் செயற்பாடாக நவராத்திரி வழிபாட்டிலே 'கொலுவைக்கும்' நடைமுறை இன்று வரை தொடர்கிறது. நவராத்திரி கொலுவிலே எவற்றை வைக்க வேண்டும் என்ற ஐயப்பாட்டைப் பாரதியின் பாடல் தெளிவாக்கும். நவராத்திரி வழிபாட்டில் கன்னியர் முக்கியப்படுத்தப்படுவதன் நோக்கத்தையும் பாரதியின் பாடல் விளக்கி நிற்கிறது. அழகிய ஆடைகள் அணிந்து அணிகலன்கள் பூண்டு அழகுக் கோலத்துடன் வலம் வரும் இளம் பெண்களின் சிரிப்பிலே மகாலக்குமி இருப்பாள். பெண்மையின் அழகுக் கோலம் வழிபாட்டிற்குரியதாகச் சிறப்புப் பெற்றிருப்பதையே இது உணர்த்துகிறது. இதேபோன்று பாரதி கலைமகளின் உறைவிடங்களையும் வரிசைப்படுத்திக் கூறுகிறான்.

*"வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்*
*வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்*
*கொள்ளை யின்பம் குலவு கவிதை*
*கூறு பாவலர் உள்ளத் திருப்பாள்*
*உள்ளதாம் பொருள் தேடி யுணர்ந்தே*
*ஓதும் வேதத்தின் உள் நின் றொளிர்வாள்*
*கள்ளமற்ற முனிவர்கள் கூறும்*
*கருணை வாசகத் துட்பொருளாவாள்"*

*"மாதர் தீங்குரற் பாட்டில் இருப்பாள்*
*மக்கள் பேசும் மழலையில் உள்ளாள்*
*கீதம் பாடும் குயிலின் குரலைக்*
*கிளியின் நாவை இருப்பிடம் கொண்டாள்*
*கோதகன்ற தொழிலுடைத் தாகிக்*
*குலவு சித்திரம் கோபுரம் கோயில்*
*ஈதனைத்தின் எழிலிடை யுற்றாள்*
*இன்பமே வடி வாகிடப் பெற்றாள்"*

வீணையின் ஒலியிலும், பாவலர் உள்ளத்திலும், வேதத்தின் உட்பொருளிலும், முனிவரின் கருணை வாசகத்துள்ளும், மாதர் பாட்டிலும், மக்கள் மழலையிலும், குயிலின் குரலிலும், கிளியின் நாவிலும், சித்திரம், கோபுரம், கோயில் என அறிவு சக்தியின் உறைவிடங்களைப் பாரதி எடுத்தியம்பியுள்ளான். நவராத்திரி விழாவிலே இசைக்கருவிகளும் இனிய பாடல்களும் தொடர்புற்ற தன்மையைப் பாரதியின் பாடல் விளக்குகிறது. நவராத்திரி விழாவின் நிறைவு மூன்று நாட்களும் அறிவு சக்தியான கலைமகளை வழிபடுவதற்கு ஒதுக்கப்பட்டுள்ளன. அந்நாட்களில் இசை நிகழ்ச்சிகளும் கலை நிகழ்ச்சிகளும் கோல அழகும் இடம் பெறுகின்றன. கலையுடன் தொடர்புடைய கலைமகளை வழிபடும் போது கலைத்தொழில் புரிவோர் தமது கருவிகளை அவளுடைய பாதங்களில் வைத்து வழிபடும் மரபு ஒன்றும் நடைமுறையில் உண்டு. கருவிகளை இயக்காமல் கலைமகளைப் பாடிப் பரவிப் பத்தாம் நாள் மீண்டும் தமது தொழில் நுட்பக் கருவிகளை இயக்கும் மரபு நிலவி வருகிறது. இதனைப் பாரதியின் பாடலும் சுட்டுகிறது.

*"வஞ்ச மற்ற தொழில்புரிந் துண்டு*
*வாழும் மாந்தர் குல தெய்வ மாவாள்*
*வெஞ்ச மர்க்குயி ராகிய கொல்லர்*
*வித்தை யோர்ந்திடு சிற்பியர், தச்சர்*
*மிஞ்ச நற்பொருள் வாணிகஞ் செய்வோர்*
*வீரமன்னர் பின் வேதியர் யாரும்*
*தஞ்ச மென்று வணங்கிடுந் தெய்வம்*
*தரணி மீதறி வாகிய தெய்வம்"*

நவராத்திரி வழிபாடு சகல தொழிலாளர்களையும் இணைக்கும் ஒரு வழிபாடாகவும் விளங்குகிறது. வழிபாட்டு நடைமுறையில் ஒன்றான 'கொலுவைத்தல்' இதனைச் சான்று காட்டுகிறது.

கொலுவிலே வைக்கப்படும் பொருட்கள் இத்தொழிலாளர் ஒன்றிணைப்பைக் காட்டுகின்றன. இத்தகைய கொலுவைக்கும் நடைமுறை ஒன்று ஜப்பானிய நாட்டிலும் இன்றுவரை நடை முறையில் உள்ளது. அவர்களுடைய கொலு அணிவகுப்பிலே மன்னர், படைவீரர், மக்கள், மிருகங்கள், மலர்கள், பறவைகள், இசைக்கருவிகள், தொழிற் கருவிகள் என எல்லாம் அடங்கும். தமிழர் நவராத்திரி விழாபோல அந்நாட்டவர் பெண்குழந்தைகளை முக்கியப் படுத்தும் விழாவிலே இத்தகைய கொலு அலங்காரத்தைச் செய்கின்றனர். அன்றைய தினம் பெண் குழந்தைகளுக்கு மரபான ஆடை அணிந்து கல்விப் பயிற்சி, இசைக்கருவிப் பயிற்சி அளிக்கும் நடைமுறையும் இன்றுவரை நிலவுகிறது.

பெண்மையின் ஆற்றலை வழிபட்டு வணங்குவது உலக மக்கள் அனைவருக்கும் நலம் தருவதாகும். இந்த உலகளாவிய வழிபாட்டு மரபை பாரதியும் எடுத்துக் கூறியுள்ளான்.

*"ஊனர் தேசம் யவனர்தந் தேசம்*
*உதய ஞாயிற் றொளி பெறுநாடு*
*சேண கன்றதோர் சிற்றடிச் சீனம்*
*செல்வப் பார சிகப்பழந் தேசம்*
*தோண லத்த துருக்கம் மிசிரம்*
*சூழ்க டற்கப் புறத்தினில் இன்னும்*
*காணும் பற்பல நாட்டிடை யெல்லாம்*
*கல்வித் தேவியின் ஒளிமிகுந் தோங்க"*

பாரதியின் வழிபாட்டுச் சிந்தனை வீடு தாண்டி நாடு தாண்டி உலகெங்கும் வியாபித்து நிற்கிறது. சிதறிக்கிடக்கும் உறவு களையும் நட்புகளையும் வழிபாடு ஒன்றிணைக்கும். கூட்டு வழிபாடு ஒற்றுமையைப் பலப்படுத்தும். அந்த வழிபாட்டு மரபைப் பேணி வளர்க்கும் பொறுப்பு பெண்களுக்கே உரியது. தாய்மை நிலையில் பெண் செய்கின்ற பணிகள் உலகம் சமமாய் இயங்க வழிவகுக்கும். இருபதாம் நூற்றாண்டில் பாட்டுத் திறந்தாலே இந்த வையத்தைப் பாலித்திட எண்ணியவன் பாரதி. பாட்டுக் கலந்திட ஒரு பத்தினிப் பெண்ணும் கவிதைகளும் பராசக்தியின் காவலும் பாரதி கேட்டவை. இந்த வரம் உலக மக்கள் அனைவரும் கேட்டுப் பெற வேண்டிய இன்றியமையாத வரமாகும். பெண்மையைப் போற்றி வழிபாட்டைத் தொடர்வதால் உள்ளம் தூய்மை அடையும். உலகம் சமநிலை பெறும்.

பெண்மையின் பேராற்றலை இன்று எல்லோரும் உணரும் வகையில் உலகெங்கும் நவராத்திரி வழிபாடு நடைபெறுகின்றது. பாரதி குறிப்பிட்ட நாடுகள் தவிர்ந்த ஏனைய நாடுகளிலும் புலம் பெயர்ந்த நமது தமிழ் உறவுகளும் நட்புகளும் இந்த வழிபாட்டைத் தொடர நல்வாய்ப்புப் பெற்றுள்ளனர். கவின் கலைகளின் பரிமாற்றம், தொழில்நுட்பங்களின் பரிமாற்றம், உணர்வுகளின் பரிமாற்றம் என்பன உலகெங்கும் நடைபெற நவராத்திரி விழா நன்கு பயன்படுகிறது. வாழ்வின் அவலங்களிலிருந்து விடுபட வழிபாடுதான் உதவும். எமது முன்னோர் செயற்படுத்திய நடைமுறைகளின் ஆழமான பொருள், காலம் கடந்து நிற்பதை இப்போது உணரமுடிகின்றது. வழிபாட்டால் அடைய விரும்புவதை அனைவர்க்கும் உணர்த்துவதே எமது கடன்.

*"எண்ணிய முடிதல் வேண்டும்*
*நல்லவே எண்ணல் வேண்டும்*
*திண்ணிய நெஞ்சம் வேண்டும்*
*தெளிந்த நல் லறிவு வேண்டும்*
*பண்ணிய பாவ மெல்லாம்*
*பரிதிமுன் பனியே போல*
*நண்ணிய நின்முன் இங்கு*
*நசிந்திடல் வேண்டும் அன்னாய்"*

(பாரதி)



# தாய்த் தெய்வ வழிபாடு



**திருமதி தர்மினி றஜீவன் B.A**

இந்த நூற்றாண்டிலும் ஞானம் பின்னிய அருட்கடலாய் நம் உணர்வின் தாயாக மதிக்கப்படுபவள் பெண். இதன் முக்கியத் துவத்தினாலே இந்து மதத்தில் பெண்களைத் தெய்வமாக மதித்துப் போற்றும் சாக்த நெறி வளர்ச்சி பெற்றது. இச் சாக்த நெறியானது தமிழின் தொன்மைக்கும் பெருமைக்கும் சான்றாக அமைவது. தாய்வழி சமூகத்தின் பல்வேறு கட்டுமானங்களையும் இந்துமதம் கற்றுத்தருகின்றது. உலகலாவிய ரீதியில் வளர்ச்சியடைந்துள்ள இந்துமதமானது பெண்மைக்கு முக்கியத்துவம் கொடுத்து தாய்மை உணர்வினை சக்தி வழிபாடாக போற்றுகின்றது. பொறிபுலன் களால் காணப்படும் பௌதிக உலகின் இயல்புகளை ஆராய்வது விஞ்ஞானத்தின் வேலையாகும். பொறி புலன்களைக் கடந்து விளங்கும் பரம்பொருளின் நன்மைகளை எண்ணிப் பார்ப்பது மெய்ஞ்ஞானத்தின் நோக்கமாகும். காணப்படும் பொருள்கள் அனைத்திலும் காணமுடியாத பொருளாகக் கலந்து திகழும் நித்தியப் பொருளினை இறைவன் என்று நம் ஞானிகள் குறித்தனர். இறைவனின் இருப்பு நிலையினைச் சிவம் என்றும், இயக்க நிலையினை சக்தி என்றும் கண்டனர். இந்த இணைப் பினை பாலும் வெண்மையும் போல், சூரியனும் கதிர்களும் போல், மலரும் மணமும் போல், நீரும் குளிர்ச்சியும் போல் விளங்குவதாக அறிதல் வேண்டும். சொரூப நிலையில் உள்ள பரமசிவம் உயிர்களிடம் கொண்ட கருணையின் காரணமாகத் தடத்த நிலையினை மேற்கொள்ளுகிறான். தடத்த நிலையில் இறைவன் கொள்ளும் வடிவங்கள் எல்லாம் அருள் திருமேனிகளாகக் கூறப் பெறுகின்றன. அருளினைச் சக்தி என்றும் ஞானம் என்றும் சாத்திரங்கள் மொழிகின்றன. இறைவன் இச் சாசக்தியினால் உயிர்களுக்கு அருள் புரிய வேண்டும் என்று விரும்புகிறான். ஞான சக்தியினால் உயிர்களின் தகுதிகளையும் தேவைகளையும் அறிகிறான். கிரியா சக்தியினால் உயிர்கள் உய்யும்படி படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில் களையும் புரிகிறான். சக்தி இல்லையேல், சிவன் இத் தொழில் களைப் புரிவது இல்லை. சிவம் இல்லை எனில், அதன் குணமாகிய சக்தியும் இல்லை. ஆகவே சிவமும் சக்தியும் ஒன்றை இன்றி ஒன்று இருப்பது இல்லை. இரண்டும் இணைந்தே இருக்கும் என்பது தெளிவு. சக்தியைக் கொண்டுதான் சிவன்; உயிர், உலகு

ஆகியவற்றுடன் தொடர்பு கொள்கிறான். சக்தியின் தயவினால் தான் உயிர்கள் பாசத்தை விட்டுப் பதியினை அடைய வேண்டும். சிவனை வழிபடுவோர் அப்பெருமானுடன் சரிபாதியாக உறையும் சக்தியையும் வழிபடுவோராகவே கருதப்பெறுவர். சக்தியை வணங்குவோராகவே எண்ணப் பெறுவர். எனவேதான், பன்னிரு திருமுறைகளில் சக்தியைப் பிரித்துத் தனியே பாடப்பெறும் பதிகங்கள் காணப்பெறவில்லை. "எங்கள் பிராட்டியும் எங்கேனும் போன்றிசைந்த" என்று மாணிக்கவாசகர் அருளிச் செய்தது போல் சிவமும் சக்தியும் இணைத்துப் பாடிய இடங்களே உள்ளன.

தாய் எனப்படும் மூலப்பகுதியில் இருந்து உலகம் விரிவடைந்தது என்பது சாங்கியம் உள்ளிட்ட இந்தியத் தத்துவங்களின் துணிவு. வேத காலத்திற்கு முற்பட்ட சிந்துவெளி நாகரிகத்தில் தாய் தெய்வ வழிபாடு காணப்படுதலை தமிழர் நாகரிகத்தின் சிறப்புக் கூறுகளின் ஒன்றாக வரலாற்று அறிஞர்கள் சுட்டியுள்ளனர். பிற்காலத்தில் தாய்வழிபாடு பெருகியதாலன்றோ ஞானிகள் பிரபந்தங்கள் பலவற்றை பாடியருளினர். அவர்களின் குமர குருபரர், அபிராமிப்பட்டர், தாயுமானவர், வள்ளலார், மகாகவி பாரதியார் ஆகியோரின் பாடல்களில் பொதிந்துள்ள அன்னையின் அருட்சிறப்பினைக் காணலாம்.

இறைவனே, அம்பிகையின் அழகிய உருவத்தினைத் தன் உள்ளத்தில் ஓவியமாக எழுதிப் பார்த்து இன்புறுவதாகவும் மீனாட்சி அம்மைப் பிள்ளைத்தமிழில் குமரகுருபரர் பாடியுள்ளார். அப்பகுதி வருமாறு.

*"உடுக்கும் புவனம் கடந்து நின்ற*
*ஒருவன் திருவுள்ளத்தில் அழ (கு)*
*ஒழுக எழுதிப் பார்த்திருக்கும்*
*உயிரோ வியமே!"*

வருகைப் பருவத்தில் அமைந்த இப்பாடலில் கவிஞரின் அரிய கற்பனைத் திறனாய்க் கண்டு இன்புறலாம்.

அபிராமிப்பட்டர், அபிராமித்தாயின் கருணையினை நோக்கிப் பாடத் தொடங்கினார். உதிக்கின்ற கதிரவனாகவும், உச்சித்திலக மாகிய மஞ்சாடி மலராகவும், மதிப்பிடற்கு உரிய அரிய மாணிக்க மாகவும், மணமும் வனப்பும் மிக்க மாதுளம் மலராகவும், திருமகளை உள்ளிட்ட தேவதைகள் போற்றும் மின்னற் கொடியாகவும், மணம் கமழும் குங்கும நீராகவும் அம்பிகையின் உருவச் சிறப்பினை ஆகமங்கள் போற்றும் பாங்கு பட்டருக்கு அனுபவமாகவே அடைந்தது.

*"உதிக்கின்ற செங்கதிர்! உச்சித்திலகம்! உணர்வுடையோர்*
*மதிக்கின்ற மாணிக்கம்! மாதுளம் போது! மணற்கமலை..."*

தாயுமானவர் திருவானைக்காவில் விளங்கும் அகிலாண்ட நாயகி பேரில் சந்தவிருத்தமும், கயிலை மாநகர் பெரிய நாயகி விருத்தமும் பாடியுள்ளார். ஞானப் பாடல்கள் பலவற்றை அனுபவப் பொழிவாகப் பாடியருளிய தாயுமானவர் அம்பிகையின் அருளில் தோய்ந்து பாடிய கவிதைகளும் அற்புதம் வாய்ந்தவை எனலாம்.

*"...நெட்டிலே அலையாமல் அறிவிலே பொறையிலே*
*நின்னடியர் கூட்டத்திலே..."*

வள்ளலார் நடராஜப் பெருமானையும் சிவகாம வல்லியையும் போற்றிப்பாடிய பாடல்களும் சிறப்பாகச் சுட்டத்தகுவன. தில்லை வழிபாட்டின் பொழுது இவர் காமக்கோட்டத்தில் எழுந்தருளியுள்ள சிவகாம வல்லியின் பெயரில் அம்மை திருப்பதிகம் அருளியுள்ளார்.

*"நீறணிந்து ஒளிர் அக்க மணிதரித்து உயர் சைவ*
*நெறிநின்று உனக்கு ரியவோர்..."*

என்னும் பாடல் நோக்கத்தக்கது. பாரதியார் தம்மைச் சக்திதாசன் என்றே சாற்றிக் கொண்டார். அவர் கவிதைத் தொகுதியில் சக்தியைப் பார்த்து விண்ணப்பித்த பாடல்கள் யாவும் ஆற்றலும் அருமையும் பொருந்தியவை. சிவசக்தி, மகாசக்திக்கு விண்ணப்பம், ஓம்சக்தி பராசக்தி, சக்தி திருப்புகழ், மகாசக்தி வாழ்த்து முதலிய பற்பல தலைப்புக்களில் பாரதியார் புனைந்துள்ள பாடல்கள் யாவும் அவர் சக்திதாசன்தான் என்பதை உறுதிப் படுத்தின. இவர் மனித நேயத்திற்கு சிறந்த ஓர் எடுத்துக்காட்டு.

*"நல்லதோர் வீணை செய்தே – அதை*
*நலங்கெடப் புகுதியில் எறிவதுண்டோ?*
*சொல்லடி சிவசக்தி..."*

என்பதனூடாக அவர் சக்திக்குக் கொடுத்த முக்கியத்துவம் புலனாகின்றது.

இந் நூற்றாண்டில் வாழ்ந்த பாரதிதாசன் "எதிர்பாராத முத்தம்" என்னும் நூலில்

*பாட்டுக்குப் பொருளாய் நின்ற பராபரச் சிறுமி நெஞ்சக்*
*கூட்டுக்குக் கிளியாய்ப் போந்து கொஞ்சினாள் அரங்கு தன்னில்!...*

எனப் பாடியுள்ளார். இளங்கோவடிகள் வாழ்ந்த காலத்தில் அம்பிகை வழிபாடு மிகச்சிறப்பாகத் திகழ்ந்தது. அம்பிகையின் திருப்பெயர், அருட்செயலையும் ஒருங்கே இணைத்து நாமாவளியே பாடியுள்ளார். பாண்டியன் அவையில் நீதி கேட்க முற்பட்ட கண்ணகியின் தோற்றத்தினைச் சப்த மாதர்களுடன் இணைத்து பாடியிருக்கும் பகுதியினால், இளங்கோவடிகள் காலத்தில் சப்த மாதர் வழிபாடும் இருந்த உண்மை உய்த்துணரப்படும். திருமுறை கண்ட சோழனாகிய முதலாம் இராசராசன் காலத்திற்கு பிறகுதான் சிவாலயங்களில் அம்பிகைக்கு தனி சன்னிதி அமைத்து வழிபடும் மரபும் காணப்படுவதாக அறிஞர் கருதுகின்றனர்.

ஆகமம் சார்ந்த வழிபாட்டு மரபில் தனிப் பெருந் தெய்வ மாகவும், அறுவகைச் சமய நெறிகளில் முதன்மைக்குரிய நெறியாகவும், ஆகமம் சாரா வழிபாட்டு நெறிமுறையில் பத்தினித் தெய்வ வழிபாடாகவும் விளங்கும் தாய்த் தெய்வ வழிபாட்டிற்கு ஈழத்திலும், இந்தியாவிலும் தலைசிறந்த ஆலயங்கள் விளங்கு கின்றன. விழாக்களிலும் விரதங்களிலும் வழிபாட்டுக் கூறுகளிலும் சிறப்பிற்குரியதாகக் கூறப்படும் சக்திவழிபாடு காணப்படுகின்றது. சக்தி வழிபாட்டின் மகிமையை எடுத்துக்காட்டுவது நவராத்திரி ஆகும். ஒன்பது நாட்களிலும் சக்தியை துர்க்கை, இலக்குமி, சரஸ்வதி என்கின்ற மூன்று மூர்த்தங்களை முறையே வீரம், செல்வம், கல்வி என்பவற்றை வேண்டி வழிபாடு ஆற்றப்படும். இதனை சிறப்புப்படுத்தி சிவனிற்கு ஒரு இராத்திரி சக்திக்கு ஒன்பது இராத்திரி எனப் பெருமைப்படுத்தப்படுகின்றது. நவராத்திரியின் மூலம் பெண்மை முதன்மைப்படுத்தப்பட்டு தெய்வநிலைக்குரியதாக்கப்படுகின்றது.



# நால்வர் காட்டிய அன்பு நெறி



திருமதி எஸ். பி. உதயகுமாரன்
பதுளை

*"கலை நிறை கணபதி சரணம் சரணம்*
*கஜமுக கணபதி சரணம் சரணம்"*

இவ்வுலகில் தோன்றிய மனிதர் அனைவரும் தம் வாழ்வு வளம் பெறவும், மாக்கள் தன்மையிலிருந்து விடுதலை பெற்று மக்கள் தன்மை அடையவும் வழிகாட்டுவது தான் சமயம். அதாவது மனிதனைப் பண்புடையவனாக்குவது சமயமே.

இவ்வுலகையும் அதில் உள்ளவற்றையும் காணும் மனிதன் அவற்றில் மயங்காமல் இவற்றிடையே ஓர் உண்மையை உணர்ந்து அனைத்திற்கும் மூலவேராய் அமைந்த ஒன்றை அறிகிறான். அவ்வறிவுக்கு எட்டாத அப்பாற்பட்ட பொருள் உண்டு. அப்பொருளே இவ்வுலகையும் அதிற் காணப்படும் பொருள்கள் யாவற்றையும் (உயிர்கள் உட்பட) இயக்குவதையும் உணர்கிறான். உயிர்கள் உய்யும் வழி அறிந்து அப்பொருளையடைந்து இன்புற்றிருக்க வேண்டும். அந்நிலையை அடைவதற்கு மனித மனத்தின் மாசை அகற்றி, பண்புடையவனாய், ஒழுக்க சீலனாய், பிறர்க்குப் பயன்படுபவனாய் வாழ முற்படுவதே சமய வாழ்கையாகும்.

மக்கள் தமது அறிவால் அறிதற்கரியவனான அந்த இறைவனை, முழுமுதற் பொருளை, சச்சிதானந்தப் பொருளை உய்த்துணர்ந்து பிறப்பில்லாத நிலையை அடைய வேண்டும். அந் நிலையை அடைவதற்கு வழிசமைப்பதே அன்பு நெறி.

*"அன்பும் சிவமும் இரண்டென்பார் அறிவிலார்*
*அன்பே சிவமாவதாகும் அறிகிலார்*
*அன்பே சிவமாவதாகும் அறிந்த பின்*
*அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே"*

என்றார் திருமூலர்.

*"யாம் இரப்பவை*
*பொருளும் பொன்னும் போகமும் அல்ல நின்பால்*
*அருளும் அன்பும் அறனும் மூன்றும்*
*உருள் இணர்க் கடம்பின் ஒலி தாராயே"*

எனப் பரிபாடல் வரிகள் கூறுகின்றன.

இக்கூற்றிக்கிணங்க அருளும் அன்பும் அறனும் பெற்று மனிதன் உய்வடையும் நெறிகளை தாம் வாழ்ந்து காட்டினர் எமது சமய குரவர் நால்வரும். இவர்கள் காட்டிய நெறியே அன்பு நெறியாகிய எமது சமயநெறி. இந்நெறியைச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பர்.

சரியை நெறியில் நிற்று எண்பத்தொரு வருடங்கள் இவ்வுலகில் வாழ்ந்து காட்டி, சாதாரண மனிதனும் தன்னலமற்ற தொண்டினாலே உய்வடைய முடியும் என்பதை எமக்கு உணர்த்தினார் அப்பர் சுவாமிகள். அப்பர் சுவாமிகள் இறைவனாலே சூழை நோய் கொடுத்து ஆட்கொள்ளப்பட்டவர். தாம் சென்ற திருத் தலங்கள் தோறும் உழவாரத் தொண்டாற்றி "தொண்டுக்கு அப்பர்" என்ற சிறப்பையும் எய்தினார்.

*"நங்கடம்பனைப் பெற்றவள் பங்கினன்*
*தென் கடம்பைத் திருக்கரக் கோயிலான்*
*தன் கடன் அடியேனையும் தாங்குதல்*
*என் கடன் பணி செய்து கிடப்பதே"*

இவ்வுலகில் சமணர்கள் ஆற்றிய கொடுமைகளையெல்லாம் இறையருளால் வென்று, தம் பழுத்த அனுபவத்தினாலே இறைவனையடைந்தவர் அப்பர். அவருடைய பாடல்களில் அனுபவத்தின் முதிர்ச்சியை நாம் காணலாம். இவர் வாழ்ந்து காட்டிய நெறியை அடிமை நெறியென்றும் தாச மார்க்கமென்றும் கூறுவர்.

*"முன்ன மவனுடைய நாமங் கேட்டாள்*
*மூர்த்தி யவனிருக்கும் வண்ணங் கேட்டாள்*
*பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்*
*பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்*
*அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்*
*அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தைத்*
*தன்னை மறந்தாள் தன் நாமங் கெட்டாள்*
*தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே"*

தன்னை பல்லவ மன்னனிடம் அழைத்துச் செல்வதற்கு வந்த அமைச்சரிடம் தான் இறைவனுக்கன்றி வேறு எவருக்கும் ஆட்பட மாட்டேன் என உறுதியாகக் கூறுகின்றார். இதனை "நாமார்க்கும் குடியல்லோம், நமனை யஞ்சோம்" என்ற அவரின் பதிகத்தின் மூலமறியலாம்.

இறைவனின் கைலைக் காட்சியைக் காண, மேலே தொடர்ந்து செல்ல முடியாத நிலையில் கைலைக் காட்சியைக் கண்டன்றி மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன் என உறுதியுடன் நின்று, இறையருளால் திருவையாற்றில் கைலைக் காட்சியைக் கண்டு களிக்கின்றார்.

அப்போது "மாதர்ப் பிறைக்கண்ணி யானை..." என்ற பதிகம் பாடுகின்றார். இவ்வாறு வாழ்ந்து இறைவனிருக்கும் உலகத்தை யடைதலாகிய "சாலோகம்" எனப்படும் முத்தி நிலையை அடைகின்றார்.

கிரியை நெறியில் நின்று வாழ்ந்து காட்டியவர் சம்பந்தப் பெருமான். கிரியை என்பது செயல் என்றும், விதிப்படி செய்யப் படும் பூசை என்றும் கூறப்படும். மூன்றாம் வயதில் உமை யம்மையின் ஞானப் பால் உண்டு இறைவனால் ஆட்கொள்ளப் பட்டவர் சம்பந்தர். இயற்கையில் இறைவனைக் கண்டிலர். அவருடைய பாடல்களில் இயற்கையின் வர்ணனைகளைக் காணலாம்.

*"சடைமு யங்கு புனலன்னை லன்நெறி*
*வீசிச் சதிர் வெய்த*
*உடைமு யங்குமர வோடுழி தந்தென*
*துள்ளங் கவர் கள்வன்*

*கடன்மு யங்குகழி சூழ்குளிர் கானலம்*
*பொன்னஞ் சிற கன்னம்*
*பெடைமு யங்கு பிர மாபுரமேவிய*
*பெம்மா னிவ னன்றே"*

சம்பந்தர் ஆலயங்கள் தோறும் சென்று இசையுடன் இறைவனைப் பாடிப் பரவினார். இறையருளாலே பொற்றாளம், முத்துச்சிவிகை, முத்துக்குடை பெற்று தலங்கள் தோறும் யாத்திரையை மேற்கொண்டவர். இறையருளால் மக்களுடைய துன்பங்களைப் போக்கியவர். இவ்வுலகில் பதினாறு வருடங்கள் வாழ்ந்து, தம் திருமணத்திற்கு வந்திருந்த அனைவரையும் நல்லூர்ப் பெருமான் என்னும் ஆலயத்தில் சிவசோதியில் கலந்து முத்தியடையச் செய்தவர். அப்போது அவர் "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி..." என்னும் நமச்சிவாயத் திருப்பதிகத்தைப் பாடினார். இவர் வாழ்ந்து காட்டிய இந்நெறியை மகன்மை நெறியென்றும், சற்புத்திர மார்க்கம் என்றும் கூறுவர். இந்நெறி நிற்போர் இறைவனருகிலிருப் பதாகிய சாமீப முத்தியைப் பெறுவர்.

மூன்றாவதான யோக நெறியில் நின்று வாழ்ந்தவர் சுந்தரர். யோகம் என்பது சேர்தல் என்னும் பொருள்படும். ஆன்மா இறைவனுடன் சேரும் வழியைக் காட்டுவதாகும். இவரின் திருமணத்தன்று இறைவனால் ஓலை கொடுத்து ஆட்கொள்ளப் பட்டவர். எமது சமய குரவர்களில் இல்லாத நிலையில் நின்று, இல்லறத்தார்க்குரிய கடமைகளையும், செய்து இறை பணியாற்றியவர். இறைவனைத் தோழனாகக் கொண்டவர். தாம் விரும்பியவற்றையெல்லாம் இறைவனிடம் உரிமையுடன் கேட்டுப் பெற்றவர்.

*"நீள நினைந்தடியேன் உமை நித்தலுங் கைதொழுவேன்*
*வாளெனக் கண் மடலாள் அவள் வாடி வருந்தாமே*
*கோளிலியெம் பெருமான் குண்டையூர்ச் சில நெல்லுப்*
*பெற்றேன்*
*ஆளிலையெம் பெருமானவை யட்டித் தரப்பணியே"*

இப்பதிகத்தின் மூலம் இறைவனுக்கும் இவருக்குமிடையே யுள்ள மிக நெருங்கிய அன்பைக் காணலாம்.

"பத்தூர் புக்கிரந்துண்டு... " என்ற திருநாகைக் காரோணத்தில் பாடிய பதிகத்தின் மூலமும் இவர் இறைவனுடன் நெருங்கியுள்ள தன்மையை நாம் உணரலாம்.

சத்தியம் தவறியமையால் திருவொற்றியூர் எல்லையை விட்டு நீங்கியவுடன் தன்னிரு கண்களின் பார்வையையும் இழந்து பின் இறைவனை வேண்டிப் பரவிப் பாடி, திருவெண்பாக்கத்தில் ஊன்று கோலினையும், திருக்கச்சியேகம்பத்தில் "ஆலந்தானுகந்து அமுது செய்தானை" என்று பாடி இடக்கண் பார்வையையும், திருவாரூரில் வலக்கண் பார்வையையும் பெற்றவர்.

*"மீளா யடிமை உமக்கே யாளாய்ப் பிறரை வேண்டாதே*
*மூளாத் தீப்போல் உள்ளே கனன்று முகத்தால் மிக வாடி*
*ஆளாயிருக்கு மடியார் தம் அல்லல் சொன்னக் கால்*
*வாளா திருப்பீர் திருவாரூரில் வாழ்ந்து போதீரே..."*

இவரின் வாழ்க்கை நெறி நாம் இவ்வுலகில் சத்தியந் தவறாது வாழ வேண்டுமென்ற பேருண்மையினை உணர்த்துகிறது.

இவர் இறைவனனுப்பிய வெள்ளை யானை மேலேறித் திருக்கைலையை அடைந்தவர். இந்நெறியைத் தோழமை நெறியென்றும் சக மார்க்கம் என்றும் கூறுவர். இந்நெறி நிற்போர் இறைவன் போன்ற வடிவத்தைப் பெறுதலாகிய "சாரூபம்" என்ற முத்தியைப் பெறுவார்.

இறுதியாக மிக மேன்மையான ஞானநெறியில் நின்று வாழ்ந்து காட்டியவர் மணிவாசகப் பெருமான். பாண்டிய மன்னனின் அமைச்சராக இருந்த இவர் தன் கடமை நிமித்தம் குதிரை வாங்கச் சென்றபோது, திருப்பெருந்துறையில் குருந்த மரநிழலில் இறைவனே மானிடவடிவந் தாங்கி குருவாக வந்து ஆட்கொள்ளப்பட்டவர்.

இவர் பாடிய பாடல்கள் திருவாசகம் என்று கூறப்படும். "திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்" என்ற வாக்கின் மூலமும்,

*"வான் கலந்த மாணிக்க வாசகர் நின் வாசகத்தை..."*

என்ற இராமலிங்க அடிகளாரின் பாடல் மூலமும் நாம் திருவாசகத்தின் பெருமையை உணரலாம்.

திருவாசகப் பாடல்கள் மெய்யுருகிப் பாடப் பாட மனதினை உருக்கி இறைவன் பால் ஈர்த்துச் செல்வன.

*"நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்*
*தாயிற் சிறந்த தயவான தத்துவனே"*

என்று சிவபுராணத்திலும்,

*"கல்லா மனத்துன் கடைப்பட்ட நாயேனை"*

என்று திருவம்மானையிலும்,

*"பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து நீ..."*

என்று பிடித்தபத்திலும் இறைவனின் பெருங் கருணையை வியந்துருகிப் பாடுகின்றார்.

*"மெய்தான் அரும்பு விதிர் விதிர்த்*
*துன் விரையார் கழற்கென்*
*கைதான் தலை வைத்துக் கண்ணீர்*
*ததும்பி வெதும்பி யுள்ளம்*
*பொய் தான் தவிர்த்துன்னைப் போற்றி*
*சய சய போற்றி யென்றும்*
*கைதான் நெகிழ விடேன் உடை*
*யாயென்னைக் கண்டு கொள்ளே"* (திருச்சதகம்)

*"ஆடு கின்றிலை கூத்துடை*
*யான் கழற் கன்பிலை என் புருகிப்*
*பாடு கின்றிலை பதைப்பதும்*
*செய்கிலை பணிகிலை பாத மலர்*
*சூடு கின்றிலை சூட்டுகின்*
*றது மிலை துணையிலி பிணநெஞ்சே*
*தேடு கின்றிலை தெருவுதோ றலநிலை*
*செய்வ தொன் றறியேனே"*

இவருடைய பாடல்களில் பழம்போல் நவின்ற அவரின் உள்ளத்தின் ஞான முதிர்ச்சியைக் காணலாம்.

தில்லை மூவாயிரவர் "நீர் பாடிய பாடலுக்குப் பொருள் யாது?" எனக் கேட்க, அப்பாடலுக்குப் பொருள் "அவனே" என்று கூறி, நடராஜப் பெருமான் சன்னிதிக்குள் சென்று மறைந்தருளினார். இவர் முப்பத்திரண்டு வருடங்கள் இவ்வுலகில் வாழ்ந்தவர். இவருக்கும் இறைவனுக்குமுள்ள தொடர்பு குருசீட தொடர்பாகும். இதனை சன்மார்க்கம் என்றும் கூறுவர். இந் நெறியில் நிற்போர் அடையும் முத்தியானது இறைவனுடன் இரண்டறக் கலத்தலாகிய "சிவ சாயுச்சியம்" எனப்படும்.

சரியை கிரியை யோகம் ஞானம் என்ற நான்கும் முறையே அரும்பு, மலர், காய், கனி போன்றதாகும். எனவே நாமும் இந் நால்வர் காட்டியருளிய அன்பு நெறியில் நின்று வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து உய்வடைவோமாக !

*"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"*

ஐப்பசியில் முருகனுக்குப் பெருவிழா



# கந்தவேளின் கருணையும் கந்த சஷ்டி விரதமும்



செல்வி அ. பூங்கோதை (B.A.Dip.in.Edu.)
கொழும்பு விவேகானந்தா கல்லூரி

மிகவும் தொன்மையான மதம் எனவும், மதங்களில் முதன்மை பெற்ற மதம் எனவும் சிறப்பித்துக் கூறப்படும் மதம் இந்து மதமாகும். இந்து மதமானது தன்னுள் ஆறு பிரிவுகளைக் கொண்டது. அவையாவன சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சைவமதம், விஷ்ணுவை முழுமுதற் கடவுளாகக் கொண்ட வைணவ மதம், சக்தியை முழுமுதற் கடவுளாக கொண்ட சாக்த மதம், முருகனை முழுமுதற் கடவுளாகக் கொண்ட கௌமார மதம். இறுதியாக சூரியனை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சௌர மதம் என்பனவாகும்.

இவற்றுள் முருகனை முழுமுதற் கடவுளாக வழிபடும் மதமான கௌமார மதம் மிகவும் சிறப்புடையதாகும். அனாதியாகவே ஆணவ மலத்தால் பீடிக்கப்பட்ட ஆன்மாக்கள் முருகப் பெருமானை வழிபடுவதன் மூலம் தமது கன்ம வினையினை விரைவில் அறுத்து, ஆன்மாக்களின் இலட்சியமாகிய மோட்சத்தை இலகுவில் அடையலாம் என்பது அனுபவம் பெற்ற முருகபக்தர்களின் அருள்வாக்கு.

முருகப் பெருமானை வழிபடும் முறைகளில் விரதமும் ஒன்றாகும். இவரை வேண்டி இருக்கும் விரதங்களான கந்த சஷ்டி விரதம், கார்த்திகை விரதம், மாத சஷ்டி, மாத கார்த்திகை, வெள்ளிக்கிழமை என்பன குறிப்பிடத்தக்கனவாகும். இவற்றுள் கந்த சஷ்டி விரதம் மிகவும் சிறப்புடையதாகவும் இந்துக்கள் அனைவராலும் போற்றி விசுவாசத்துடன் நோற்கப்படும் ஓர் விரதமாகும். இவ் விரதமானது ஐப்பசி மாதம் பூர்வ பக்க முதல் நாளாகிய பிரதமை தொடக்கம் சஷ்டி ஈறாகவுள்ள ஆறு நாட்களுக்கு அனுஷ்டிக்கப்படும். இந் நோன்பினை அனுஷ்டிப்போர் கடைப்பிடிக்க வேண்டிய விதி முறைகள்பற்றி முருகப் பெருமானின் வரலாறு கூறும் கந்த புராணம் என்னும் நூல் கூறுகின்றது. இவ் விரதத்தின்போது ஆறு நாட்களும் சிறிது நீர் மட்டும் அருந்தி உபவாசம் இருக்க முடியாதவர்கள் ஐந்து நாட்கள் பால் பழம் உண்டு, ஆறாவது நாளான சஷ்டி அன்று உபவாசம் இருக்கலாம் என்றும், இவ்வாறு இருக்க முடியாதவர்கள், முதல் ஐந்து நாட்களும் நண்பகல் இறைவனுக்கு நிவேதனம் செய்து அவ் நிவேதனத்தை உண்டு, இரவு பட்டினி இருந்து ஆறாவது நாள் உபவாசத்துடன் வழிபாடு செய்யலாம் எனவும் கூறப்படுகின்றது.

இவ் விரதகாலங்களில் முருகப்பெருமானின் புகழை எடுத்துக் கூறும் நூல்களான கந்தர் அலங்காரம், கந்தர் அனுபூதி, கந்தர் கலி வெண்பா, திருப்புகழ், திருமுருகாற்றுப்படை, கந்த சஷ்டி கவசம் போன்ற நூல்களைப் பாராயணம் செய்தல் சிறந்த பயனைத்தரும். சூரனும், முருகப் பெருமானும் போர்புரிந்து சூரனின் ஆணவத்தை அடக்கி ஆட்கொண்ட நாளே இறுதி நாளாகிய "கந்த சஷ்டி" எனப்படும். இவர்கள் இருவருக்கும் இடையில் போர் நடந்த இடம் முருகப் பெருமான் குடிகொண்டுள்ள ஆறுபடை வீடுகளில் ஒன்றாகிய திருச்செந்தூர் என்னும் தலமாகும். சூரன்போர் நடக்கும் தினத்தில் திருச்செந்தூர் கடல் நீரானது போர் நடத்துவதற்கு வசதியாக முருகப் பெருமானின் அருட்கருணையால் உள்முகமாகச் சென்று இடவசதியினை கொடுப்பது ஒரு தெய்வீகச் செயலாகும்.

கந்த சஷ்டி நோன்பு பற்றி ஓர் புராணவரலாறு உண்டு. பிரம்மாவிற்கு தக்கன், காசிபன் என்னும் இரு புதல்வர்கள் இருந்தனர். இவர்களுள் தக்கன் சிவனை நோக்கி கடும்தவம் புரிந்து பல வரங்களைப் பெற்றிருந்த போதிலும், இறுதியில் சிவனால் தோற்றுவிக்கப்பட்ட வீரபத்திரக் கடவுளால் கொல்லப்பட்டார். காசிபனும் கடுந்தவம் புரிந்து சிவனிடம் இருந்து மேலான சக்தியைப் பெற்றான். ஒருநாள் சுக்கிரனால் ஏவப்பட்ட மாயை என்னும் பெண்ணின் அழகில் மயங்கி தனது தவவலிமை எல்லாவற்றையும் இழந்தான்.

இதனைத் தொடர்ந்து காசிபனும், மாயை என்னும் பெண்ணும் மனித உருவத்தில் முதலாம் சாமத்தில் இணைந்து மனித தலையுடன் கூடிய சூரனும், இரண்டாம் சாமத்தில் சிங்க உருவில் இருவரும் இணைந்து சிங்க முகத்துடன் கூடிய சிங்கனும், மூன்றாம் சாமத்தில் யானை உருவில் இணைந்து யானை முகத்துடன் கூடிய தாரகனும், நான்காம் சாமத்தில் ஆட்டின் உருவில் இருவரும் இணைந்து ஆட்டுத்தலையுடன் கூடிய "அசமுகி" என்னும் பெண்ணும் பிறந்தனர்.

மாயை காரணமாக தோன்றிய இவ் நால்வரும் ஆணவமிகுதியால் செருக்குக் கொண்டு காணப்பட்டனர். இவர்கள் கடுந்தவத்தினை மேற்கொண்டதால் சிவன் இவர்கள் முன் தோன்றி காட்சிகொடுத்து, என் சக்தி அன்றி வேறு ஒரு சக்தியாலும் வெல்லமுடியாது என அருளினார். இவ்வரத்தைப் பெற்ற சூரன் முதலானோர் தம்மைப்போல் பலரை உருவாக்கி அண்டங்கள் எல்லாவற்றையும் ஆண்டு, இந்திரன் முதலான தேவர்களை சிறையிலிட்டு சொல்லொண்ணா துன்பங்களை கொடுத்து அதர்ம வழியில் ஆட்சி செய்தனர்.

இக் கொடுமையைத் தாங்க முடியாத தேவர்கள் சிவனிடம் முறையிட்டனர். சூரன் முதலானவர்களை அழிப்பதற்காக சிவன் தனது நெற்றிக் கண்ணில் இருந்து ஆறு தீப்பொறி மூலம் உருவாக்கப்பட்டவரே ஆறுமுகப் பெருமான் ஆவர். இவர் சரவணப் பொய்கையில் ஆறு கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டார். உரிய காலம் வந்ததும் பார்வதிதேவியினால் ஆறு குழந்தைகளும் ஒன்று சேர்க்கப்பட்டு ஆறுமுகக் கடவுளானார். இவ் ஆறுமுகக்கடவுள் சூரனை வதைசெய்யும்போது மாயையினால் மாமரமாக நின்ற சூரனை தனது ஞானவேலால் பிளந்து அவனது ஆணவத்தினை அடக்கி சேவலும், மயிலுமாக மாற்றி சேவலை தன் கொடியாகவும், மயிலை தன் வாகனமாகவும் ஆக்கி சூரனை ஆட்கொண்டார். இவ்வாறே சிங்கமுகன், தாரகன் என்போரின் ஆணவம் அழிக்கப்பட்டு, இவர்கள் முறையே அம்பிகையினதும், ஐயனாரினதும் வாகனமாக்கினார்.

இவ்வாறு சூரன் முதலானோர் மாயையினால் தோற்றுவிக்கப்பட்டு, பல கன்மங்களைச் செய்தபோதிலும் இறுதியில் ஆணவ முனைப்புடன்கூடிய அக் கன்மங்கள் ஆறுமுகப் பெருமானின் ஞானவேலால் அழிக்கப்பட்டு முருகனின் திருவருள் கிடைக்கப்பெற்று நற்கதியடைந்தனர்.

## முல்லைத்தீவு மாவட்டத்தில் மாமன்றத்தின் உதவிப் பணி

அகில இலங்கை இந்து மாமன்றம் நடைமுறைப்படுத்தும் சுனாமி, யுத்தம் மற்றும் இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட வசதி குறைந்த பிள்ளைகளைப் பராமரிக்கும் திட்டத்தின் கீழ், முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்ட பிள்ளைகளுக்குரிய நிதியுதவிக் கொடுப்பனவு காசோலைகள் முல்லைத்தீவு அரசாங்க அதிபர் அலுவலகத்தில் அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் அவர்கள் தலைமையில் வழங்கும் நிகழ்வு.



### வளர்க இந்து ஒளி !

அகில இலங்கை இந்து மாமன்றம் வெளியிட்டுவரும் காலாண்டு சஞ்சிகையான "இந்து ஒளி" பத்து ஆண்டுகளை நிறைவு செய்கிறது என்பது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விடயம். கடந்த பத்து ஆண்டுகளாக "இந்து ஒளி" சிறந்த சேவையை இந்து மக்களுக்கும் குறிப்பாக இந்து மாணவர்களுக்கும் ஆற்றியிருக்கிறது. குறைந்த விலையில் சிறந்த சேவையை இந்து ஒளி செய்திருக்கிறது என்பது போற்றுதற்குரிய விஷயம்.

அகில இலங்கை இந்து மாமன்றத்தையும், இந்து ஒளி வெளியீட்டுக் குழுவினரையும் இந்து மக்களாகிய நாம் அனைவரும் நன்றியுடன் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

- இ. கந்தசாமி
*தலைவர்*
*குருக்கள்மடம் இந்துசமய விருத்திச் சபை*

# இந்து ஒளி பத்தாண்டு நிறைவு – வாழ்த்துச் செய்திகள்

## சைவ அறிவுக் களஞ்சியம்

ஆதியும்அந்தமும் இல்லாதது இந்து சமயம். தனித்துவ பாரம்பரியத்தையும், தொன்மைச் சிறப்புக் களையும் கொண்ட இந்து சமயம் பல இன்னல்களையும் சோதனைகளையும் கடந்து இன்றும் தனது தனித்துவத்தை இழக்காது தனக்கென மேலான ஒரு இடத்தைப் பிடித்துள்ளது. இத்தகைய சிறப்பு வாய்ந்த இந்து மதத்தின் உன்னதத்தை தொடர்ந்தும் சுட்டிக் காட்டும் வகையில் – சைவத்தை எடுத்தியம்பும் திறமையான ஆக்கங்களைத் தாங்கி இலங்கையில் வெளிவரும் "இந்து ஒளி" சஞ்சிகையின் பணி போற்றுதற்குரியதாகும்.

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் காலாண்டு சஞ்சிகையான இது, இந்து மதத்தின் கருத்துக்களையும், அது கூறும் நற்பண்புகளையும், ஒழுக்க விழுமியங் களையும் மக்களிடையே எழுத்து வடிவில் எடுத்தியம்பும் பணி வியக்கத்தக்க ஒன்றே. இந்து மக்களிடையே இந்து சமயத்தினதும், இந்து கலாச்சாரத்தினதும் பண்பாடு பற்றிய அறிவைப் பரப்பி அதனை விருத்திசெய்யும் சைவ அறிவுக் களஞ்சியமாக "இந்து ஒளி" வெளிவருகிற தென்றால் அது மிகையாகாது.

பத்தாண்டு நிறைவையடையும் இந்த சஞ்சிகையின் பணி மேலும் தழைத்தோங்க உளமார்ந்த வாழ்த்துக் களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

- ஆர். பிரபாகரன்
*ஆசிரியர் - வீரகேசரி*

## வாழ்வுக்கு வழிகாட்டும் இந்து ஒளி

அகில இலங்கை இந்து மாமன்றம் வெளியிடும் "இந்து ஒளி" சஞ்சிகைக்கு பத்தாண்டுகள் நிறைவு பெறுவதையிட்டு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மாமன்றத்தின் அங்கத்துவ நிறுவனம் என்ற வகையில் லேக் ஹவுஸ் இந்து மன்றம் பெருமையடைகிறது.

1996 ஆம் ஆண்டு கார்த்திகைத் தீபத்தன்று முதலாவது இதழை வெளியிட்ட நாள் முதற்கொண்டு இன்றைக்குப் பத்தாண்டு காலமாக இலங்கைவாழ் இந்துக்கள் அனைவரையும் விழிப்படையச் செய்தமைக் காக 'இந்து ஒளி'யையும், அதனை வெளியிடும் அகில இலங்கை இந்து மாமன்றத்தையும் பாராட்டியாக வேண்டும்.

இந்துப் பண்பாட்டின் மகத்துவத்தையும், சிறப்பையும் எடுத்துக் கூறி, இலங்கை வாழ் இந்துக்களின் நல்வாழ்வுக்கு வழிகாட்டுவதாக என்றும் 'இந்து ஒளி' விளங்க வேண்டுமென மனதார வாழ்த்துகிறோம்.

-விசு கருணாநிதி
*செயலாளர்*
*லேக்ஹவுஸ் இந்து மன்றம்*

## நூறாண்டு காலம் ஒளி வீசட்டும்!

இந்து மக்களின் மனங்களில் கடந்த பத்தாண்டுகளாக ஒளி வீசி வரும் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் காலாண்டு வெளியீடான 'இந்து ஒளி'க்கு அதன் வாசகி என்ற வகையில் வாழ்த்து தெரிவிப்பதில் பெருமைப்படுகிறேன்.

கடந்த பத்தாண்டுகளாக இறையருளால் எவ்வித தடங்கலுமின்றி தவறாமல் வெளிவரும் இந்து ஒளி, ஆழ்ந்த புலமையுடன் அணியெனச் சொற்கள் நிறைந்த, அனைவரும் உணரும் வண்ணம் – உணர்த்த வண்ணம் வெளிவரும் விடயங்கள், பாடசாலை மாணவர்களின் ஆக்கத் திறனை ஊக்கப்படுத்த அவர்களுக்கென சில பக்கங்களை ஒதுக்கி அவர்களின் அறிவை மேம்படுத்தும் வகையிலான கட்டுரைகள், கவிதைகளையெல்லாம் பிரசுரித்து வெளி வருவது சிறப்புக்குரியது.

ஞானக் களஞ்சியமாகத் திகழும் இச் சஞ்சிகை காலத்துக்கேற்ப கலையம்சமாகத் திகழும் வண்ணம் அந்தந்தக் காலங்களில் விரதங்கள், விழாக்களின் சிறப்பிதழ்களாக காலம் தவறாமல், நேரம் தவறாமல் இந்து மக்களின் கரங்களில் தவழும் வண்ணம் வெளிவருவதும் மேலும் சிறப்பைத் தருகிறது.

இந்து மக்களின் சமுதாய மேம்பாட்டுக்காகவும், நமது பண்டைய தெய்வீக கலாசாரத்தின் சிறப்புக்களை எடுத்துச் சொல்லும் வகையிலும் வெளிவரும் "இந்து ஒளி", மேலும் பல நூறாண்டுகளுக்கு மேலாக தவறாமல் மலர்ந்து இந்து மக்களை நல்வழிப் பாதையில் கொண்டு செல்ல – அவர்கள் செல்லும் பாதையில் ஒளிவீசி – அவர்களை வழிப்படுத்த துணை நிற்க வேண்டும் என இனிதே வாழ்த்துகிறேன்.

- திருமதி வசந்தகௌரி விமலேந்திரன்
*ஆசிரியர் - பக்திப்பூக்கள்*
*கொழும்பு - 10*

## பல ஆண்டுகள் தொடரட்டும்!

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் காலாண்டிதழான "இந்து ஒளி" பயனுள்ள நல்ல பல விடயங்களுடன் வெளியாகிவருகிறது. இச் சஞ்சிகைக்கு பத்து ஆண்டுகள் நிறைவு பெறுவதையிட்டு, மாமன்றத்தின் அங்கத்துவ சங்கம் என்ற வகையில் அன்பான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

கடந்த பத்து ஆண்டுகளாக ஒழுங்காக வெளிவந்த "இந்து ஒளி", இந்து மக்கள் அனைவரும் பயன்பெற்று இன்புறும் வகையில் இன்னும் பல ஆண்டுகள் தொடர்ந்து வெளிவருவதற்கு எல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரிவாராக.

- க. சண்முகராசா
*தலைவர்*
*சங்கரத்தை அபிவிருத்தி சபை (கொழும்பு)*

## உளமார வாழ்த்துகிறேன்!

இந்துவின் ஒளியே – நீ
இங்கு பல்லாண்டு வாழ்க!
அகில இலங்கை – முழுதும்
ஆலமரம் போல் கிளைபரப்பி
ஆதிசிவன் போல் சேவைகள் செய்கிறாய்!

அழிவிலா எம் – மதத்தினை
அனுதினமும் வளர்க்கிறாய்
அஞ்சி வாழ்ந்த மலையக – மக்களுக்கு
அர்ப்பணிப்புடன் உன் சேவை
அலை கொழிக்கும் தீவினில் செய்கிறாய்!

பத்தாண்டு காலமாய் – இந்துவின்
பக்திசாதனமாய் இருந்தாய்!
ஆயிரம் வித்துகள் – முளைக்கவிடப்பட்டபோதும்
ஆயிரத்தில் ஒன்றாய் நீ
ஆலமரமாய் வளர்ந்து நின்றாய்!

மன்றத்தின் சமயப் பணி – தலைவரும்
மனிதத்தன்மையும் நிறைந்த
சிவஞானச் செல்வர் – இராஜபுவனீஸ்வரன்
சித்தந் தெளியச் செய்த
சேவைகள் மலையகத்தில் அழியாதசுவடுகள்!

மன்றத்தின் பொதுச் செயலாளரும்
மாண்புமிகு சட்டத்தரணியுமான
கௌரவ கந்தையா நீலகண்டன் – மலையகத்துக்கு
அளித்த கௌரவம் என்றும்
மலையகத்தில் அழியாத செல்வங்கள்!

மென் மேலும் – உன்
மேன்மையான சேவைகளை
செய்து உலக மெல்லாம் – உன்
சேவையைப் பரப்ப
உளமார நான் வாழ்த்துகிறேன்!

– சரண்யா திருகோணப்பெருமாள்
*தரம் - 13 (உயிரியல் பிரிவு)*
*சென். ஜோசப் த. ம. வி*
*மஸ்கெலியா.*

## பிரகாசம் திக்கெட்டும் பரவட்டும் !

பொன்விழா கண்ட அகில இலங்கை இந்து மாமன்றம் இந்து சமூகத்திற்கு ஆற்றிவரும் அளப்பரிய சேவைகளுள் ஒன்றான "இந்து ஒளி" காலாண்டிதழ், எமது இளம் சந்தியினருக்கு மிகுந்த பயனுடையதாக விளங்குகின்றது.

வாழ்க்கை நெறியாகத் திகழும் இந்து சமயத்தின் ஆழமான சிந்தனைகளும், பரந்த நோக்கும், அரிய கருத்துகளும் ஒவ்வொரு இந்துவையும் சென்றடைய வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டு "இந்து ஒளி" தாங்கி வரும் விடயங்கள் சிறப்பாக நோக்குதற்குரியது. ஆன்மிக உணர்வினையூட்டி உள்ளொளி பரப்பும் இச்சஞ்சிகை இந்து மக்களுக்கு ஒரு பொக்கிஷமாகவே விளங்குகிறது என்பதில் ஐயமில்லை.

ஒரு தசாப்த காலத்தை நிறைவு செய்யும் "இந்து ஒளி"யின் பிரகாசம் திக்கெட்டும் பரவ மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு, இந்து மாமன்றத்தின் அறப்பணிகள் வளர எல்லாம் வல்ல பரம்பொருளைப் பரவுகிறேன்.

- (திருமதி) ஜெ. சிவகுமார்
*பொறுப்பாசிரியர் - இந்து மன்றம்*
*கொழும்பு இந்துக் கல்லூரி, பம்பலப்பிட்டி*

## மென்மேலும் வளரட்டும்

ஈழத்தில் சைவத்தை வளர்த்தெடுக்கும் நோக்கில் இயங்கி வருகின்ற அகில இலங்கை இந்து மாமன்றம் அரும்பெரும் பணியாற்றி வருகின்றது. பிரசித்தி பெற்ற இந்து ஆலயங்கள் பலவற்றிற்கும் சேவையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இம் மன்றத்தால் காலாண்டிதழாக வெளியிடப்படும் 'இந்து ஒளி' பல பயனுள்ள கட்டுரைகளை உள்ளடக்கியுள்ளது. மாணவர்களின், குறிப்பாக உயர்தர வகுப்புகளில் சமய பாடத்தை கற்கும் மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைகின்றது. இச்சஞ்சிகை மென்மேலும் வளர்ச்சி பெற இந்து மாணவர் மன்ற பொறுப்பாசிரியர் என்ற வகையில் நல் ஆசிகளை கூறுகின்றேன்.

- வை. உமா மகேஸ்வரன்
*பொறுப்பாசிரியர் - இந்து மாணவர் மன்றம்*
*கொ/ விவேகானந்தா கல்லூரி.*

## சிறப்பாகப் பிரகாசிக்கட்டும்

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் காலாண்டு இதழான வெளிவரும் "இந்து ஒளி", எமது மாணவ சமூகம் சமய அறிவைப் பெறுவதற்கும், சமய கலாசார விழுமியங்களை அறிந்து அதன்படி ஒழுவதற்கும் ஓர் உந்து சக்தியாக விளங்குகின்றது. எதனையும் ஆராய்ச்சி கண்கொண்டு நோக்கும் தன்மையுடைய மாணவ சமுதாயத்தினரின் சந்தேகங்கள், பிரச்சினைகள், தேடல்கள் என்பனவற்றுக்குரிய தீர்வுகள் இவ்விதழ் வாயிலாகக் கிடைக்கிறது. க.பொ.த.உயர்தர வகுப்பில் இந்து நாகரிகம் பாடமாகக் கற்கும் மாணவர்கள், ஒரு உசாத்துணை நூலாகப் பயன்படுத்தக்கூடிய வகையிலான ஆக்கங்களுடன் இந்து ஒளி வெளிவருகிறது.

இந்து மாமன்றத்தின் கல்விப் பணியின் ஊடாக மலர்ந்து பத்தாண்டுகள் நிறைவுபெறும் இந்து ஒளி, தொடர்ந்து வரும் காலங்களிலும் சிறப்பாக சுடர்விட்டுப் பிரகாசிக்கவேண்டும் என வாழ்த்தி தில்லைக் கூத்தனின் திருநடம் போற்றுகின்றேன்.

- செல்வன் தி. கோகுலன்
*தலைவர் - இந்து மன்றம்*
*கொழும்பு இந்துக் கல்லூரி, பம்பலப்பிட்டி.*

## வாழ்க நீ வளமுடன்!

ஒரு தசாப்தமாக
ஒளி பரப்பி – எங்கள்
ஒவ்வொருவர் உள்ளத்திலும்
தடம்பதித்த – இனிய
இந்து ஒளியே!

உனக்கோ
முடிவில்லை.... எல்லையில்லை
ஒன்றா இரண்டா
ஓராயிரம்
நற்செய்திகளை வழங்கினாயே!

ஒரு நல்ல
புத்தகம் திறந்து கொண்டால்
நரகத்தின் வாசல் மூடப்படும்
ஒவ்வொரு பக்கம் நகரும்போதும்
நீ எதிர்காலத்தில்
அடியெடுத்து வைக்கிறாய்

இந்து ஒளியே !
மனதின் மர்மப்பிரதேசம்
நீ .....
அத்தனை அற்புதத்தை
உன்னுள் நான் கண்டேன்

இந்து ஒளியே!
உந்தன்
புனிதத்தை புகழ்ந்து பாட
ஒரு நாவினால் இயலாது
தொடரும் கதை இது

சிறுவர்களுக்கு
வண்ணக் கதைகளும்
மூத்தோருக்கு
அறிவூட்டும் ஆக்கங்களும்
தவறாது நீ வழங்கினாயே!

அறியாமைக்கு
அறிவு தீபம் ஏற்றினாயே!
உன்னால் தானே
பல உள்ளங்கள்
பண்பட்டும் உயர்ந்துமுள்ளன!

மறக்க முடியுமா – உன்னை
மறைக்க முடியுமா – உன்
மங்கா புகழை...
மங்கை இவள்
மனமகிழ்ந்து உரைக்கிறேன்
வாழ்க நீ வளமுடன்
வளர்க உன் புகழ் பல்லாண்டு!

-செல்வி சிமோன் டிலோஜினி
*தரம் 13 (கலைப்பிரிவு)*
கொ/இந்துக் கல்லூரி, இரத்மலானை

## கொழும்பு இந்துக்கல்லூரி, இரத்மலானை
### அதிபர் திரு. ந. மன்மதராஜன் அவர்களது
## வாழ்த்துச் செய்தி

தலைநகரிலே தனித்துவமிக்க நிறுவனமாக மிளிரும் அகில இலங்கை இந்து மாமன்றம் சமயப் பணிகளில் மட்டுமல்லாது சமூகப் பணிகளிலும் முற்றுமுழுதான பங்களிப்புடன் செயலாற்றி வருவதன் ஊடாக நாடளாவிய ரீதியில் தன் சேவையை விஸ்தரித்து வளர்த்து வருகின்றது. மாமன்றம் பொன்விழா கண்டுள்ள இவ்வேளையில் மாமன்றத்தின் வெளியீடான 'இந்து ஒளி' பத்தாண்டு நிறைவெய்துவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன்.

இச்சஞ்சிகை காலாண்டு இதழாக வெளிவந்தாலும் தன்னகத்தே பல்வேறு விளக்கங்களைக் கொண்ட கட்டுரைகளையும், இந்து சமய விழுமியக் கருத்துக்களைக் கொண்ட ஆக்கங்களையும், காலத்துக்குக் காலம் இடம்பெறும் இந்து சமய நிகழ்வுகளையும் தாங்கியதாக மலர்ந்து, இந்து மக்களின் வாழ்க்கையில் பரிபூரண ஒளியை வழங்கி வருகின்றது. "இந்து ஒளி" மேலும் பல நூறாண்டு காலம் ஒளி வீசவேண்டும் என பத்தாண்டு நிறைவுபெறும் இவ்வேளையில் பெருமிதத்துடன் வாழ்த்துகிறேன்.

## கொழும்பு விவேகானந்தா கல்லூரி
### உப அதிபர் திரு க. தில்லைநாதன் அவர்களது
## வாழ்த்துச் செய்தி

திருமூலரால் "சிவபூமி" என சிறப்பித்துச் சொல்லப்பட்ட இலங்கைத் திருநாட்டில் மகத்தான சமயப்பணியாற்றிவரும் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் காலாண்டு வெளியீடான "இந்து ஒளி" பத்தாண்டுகளை நிறைவுசெய்வது போற்றப்பட வேண்டியதாகும். இந்து மாமன்றத்தின் ஆன்மீகச் செயற்பாடுகளில் தலைசிறந்ததாக "இந்து ஒளி" வெளியீட்டுப் பணியைக் குறிப்பிடலாம்.

இந்து மாமன்றத்தின் பணிகளும், 'இந்து ஒளி' வெளியீடும் இடையூறின்றி மென்மேலும் தொடர இறையருள் வேண்டி பிரார்த்திக்கிறேன்.

## நீர்கொழும்பு விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி
### அதிபர் திரு. ந. கணேசலிங்கம் அவர்களது
## வாழ்த்துச் செய்தி

அகில இலங்கை இந்து மாமன்றம் ஆற்றிய பணிகளால் உயர்ந்து பொன்விழாவைக் கொண்டாடி புதிய வீறு நடை போடும் இத்தருணத்தில் மாமன்றத்தின் காலாண்டு சஞ்சிகையான 'இந்து ஒளி' சுடர் விட்டு பத்தாவது அகவையில் காலடி எடுத்து வைத்திருப்பது மாமன்றம் ஈட்டிய வெற்றியின் ஒரு மைல் கல்லாகும். காலாண்டுக்கொருமுறை ஞான ஒளி வீசும் சஞ்சிகையான 'இந்து ஒளி'க்கு இந்து மக்கள் கொடுக்கும் ஆதரவே சிறந்த ஒரு 'சான்றிதழ்' ஆகும். விழாக்காலங்களான தைப்பொங்கல், சித்திரைப் புத்தாண்டு, மகாசிவராத்திரி போன்ற தினங்களை ஒட்டி இது சிறப்புச் சஞ்சிகையாக வெளிவருவது இந்துக்களுக்கு புத்தூக்கம் தரும் "ஞானப் பானம்" எனக் கூறுதல் பொருந்தும். சமய, சமூக, ஆன்மீக மேம்பாட்டுக் கருவூலங்களை விளக்கி நிற்கும் சமகால மொழிப் பாங்கில் அமைந்த சஞ்சிகையாக வெளிவருவது ஒரு வரப்பிரசாதம் எனச் சொல்லலாம்.

"இந்து ஒளி" பத்தாவது அகவையைப் பூர்த்தி செய்யும் இச்சந்தர்ப்பத்தில் மென்மேலும் பல்லாண்டு சிறப்புற வெளிவர வேண்டும்; மாதாந்த சஞ்சிகையாக மலர வேண்டும்; உலகில் பரந்து வாழும் ஒவ்வொரு இந்து மக்களையும் சென்றடைய வேண்டும்; அதற்கான சகல வளங்களையும் வழங்க எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிய வேண்டுமெனப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

# இந்து ஒளி பத்தாண்டு நிறைவு – வாழ்த்துச் செய்திகள்

## சிறப்புடன் வளர வேண்டும்!

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் சமய, சமூக நல, கல்விப் பணிகளுடன் இணைந்த வகையில் – மாமன்றத்தின் குரலாக வெளிவரும் "இந்து ஒளி" காலாண்டு சஞ்சிகை பத்து வருடங்களை நிறைவு செய்து கொள்ளுவது மாமன்றத்திற்கு மட்டுமல்ல, அனைத்து இந்துப் பெருமக்களுக்கும் மகிழ்ச்சி தரும் செய்தியாகும்.

ஆன்மீகம், சமய அறிவு, சமய வரலாறுகள் சம்பந்தப்பட்ட பல்வேறு நல்ல பல விடயங்களுடன் வெளியாகும் "இந்து ஒளி" எதிர்காலத்திலும் இந்து மக்கள் மத்தியில் சிறப்பாகப் போற்றி மதிக்கப்படும் என எங்களுக்கு மிகுந்த நம்பிக்கை இருக்கிறது.

பத்து வருடங்கள் நிறைவுபெறும் இவ்வேளையில், மேலும் அதன் சிறப்பான வளர்ச்சிக்கு எல்லாம் வல்ல ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானைப் பிரார்த்திக்கிறேன்.

-வே. கந்தசாமி *(மாமன்றப் பொருளாளர்)*

## பல்லாண்டுகள் வளரட்டும்!

எமது நாட்டில் வாழும் இந்து மக்களுடைய பிரச்சினைகளை எதிர்கொண்டு அவற்றைத் தீர்த்து வைக்கும் ஒரே ஸ்தாபனம் என்ற வகையில் அகில இலங்கை இந்து மாமன்றம் இந்து மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. இலங்கையிலுள்ள சமயப் பெரியார்களையும், தொண்டர்களையும் தன்னகத்தே கொண்ட மாமன்றத்தின் சமய, சமூக, கல்விப் பணிகளை பிரதிபலிப்பதாக, அதன் காலாண்டு சஞ்சிகையான "இந்து ஒளி" விளங்குகிறது.

இது மாமன்றத்தின் செய்திகளையும், பணிகளையும் பலருக்கு அறியத்தருகிறது. மாணவர்களுக்கு மட்டுமல்ல இந்து மக்கள் அனைவருக்குமே பயனுள்ள விடயங்கள் இதில் வெளிவருகின்றன. சிறந்த கல்விமான்களும், பேராசிரியர்களும், ஆசிரியர்களும், மாணவர்களும் இந்து சமய வளர்ச்சிக்கு ஏதுவான கட்டுரைகளை "இந்து ஒளி"யில் எழுதி வருகிறார்கள்.

ஒவ்வொரு இதழிலும் இடம்பெற்றுவரும் பஞ்ச புராணங்களின் தொகுப்பு இந்து மக்கள் காலை, மாலை வேளைகளில் வீட்டில் பிரார்த்தனை செய்யும்போது மிகவும் உதவியாக அமைகிறது. மேலும், இந்து ஒளியின் மூலமாகவே இந்து சமயத்தின் சின்னமாக அமைகின்ற நந்திக்கொடியும் பிரசன்னமாக வந்துள்ளது. "மாணவர் ஒளி" பகுதியில் பெரிய புராணக் கதைகள் வெளியாவது பாராட்டுக்குரியது. இது மாணவர்களின் உள்ளத்திலே சைவ நாயன்மார்களுடைய வரலாற்றையும், தத்துவங்களையும் அறியச் செய்கிறது.

ஒரு தசாப்தகால சேவையின் ஊடாக வளர்ச்சிபெற்றுள்ள "இந்து ஒளி" ஆண்டுகள் பல தொடர்ந்து வெளிவரவேண்டும் எனப் பிரார்த்திப்பதோடு, எனது உள்ளங்கனிந்த வாழ்த்துக் களையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

-சிவஞானச்செல்வர் க. இராஜபுவனீஸ்வரன்

## சிறப்பான வளர்ச்சி கண்டு சாதனை படைக்கட்டும்!

பொன்விழா கண்டு மகிழ்ந்திருக்கும் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உத்தியோகபூர்வ ஏடான "இந்து ஒளி"யின் பத்தாண்டு நிறைவு, மாமன்ற அங்கத்தவர்களுக்கு மட்டுமல்ல இலங்கை வாழ் சைவப் பெருமக்கள் அனைவருக்கும் பெருமிதம் தருகிறது.

மாமன்றம் 1996இல் தனக்கென ஓர் ஆத்மீக சஞ்சிகையாக "இந்து ஒளி"யினை வெளியிட்டதன் மூலம் சைவத் தமிழ் மக்களின் ஆத்மீக சிந்தனைகளையும், பல்வேறு சமய நிகழ்வுகளையும், சமயச் செய்திகளையும், தமிழ் மக்களின் கலை கலாச்சார செய்திகளையும் ஏனைய மக்களிடையே கொண்டு செல்லும் செய்திப் பாலமொன்றை அமைத்துத் தந்திருக்கிறது. இச் சஞ்சிகை கடந்த காலத்தில் துரித வளர்ச்சி பெற்று தனது பத்து வயதினைப் பூர்த்தி செய்யும் இவ்வேளையில், இன்றைய "இந்து ஒளி"யானது ஒரு முதிர்ச்சி பெற்ற பத்திரிகையாக – பல காத்திரமான விடயங்கள் அடங்கிய இதழாக – மிளிர்வதைக் கண்டு ஆனந்தமடைகின்றேன். இக் காலாண்டிதழ் பலதரப்பட்ட மக்களுக்கும் பயன் தரும் வகையில் குறிப்பாக மாணவ சமுதாயத்திற்குத் தேவையான சைவ ஆத்மீகச் செய்திகளைத் தாங்கி வருவதினால் புலம் பெயர்ந்து மேலைத் தேசங்களில் வாழும் எமது சைவச் சிறார்கள் பலர் இதனால் பல நன்மைகளைப் பெறுகின்றார்கள் என்பதை காணக்கூடியதாக இருக்கின்றது.

எமது சைவக் கொடியாம் நந்திக் கொடியின் பாவனையை மக்களிடையே ஊக்குவிப்பவன் என்ற வகையில் மாமன்றத்தின் காலாண்டிதழான "இந்து ஒளி" தனது வாசகர்களுக்கு அடிக்கடி நந்திக்கொடி பற்றிய கட்டுரைகளையும் செய்திகளையும் தந்துதவுவது கண்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். உள் நாட்டிலும், வெளிநாடுகளிலும் இடபக் கொடியின் பாவனையை ஊக்குவிப்பதில் அகில இலங்கை இந்து மாமன்றம் காட்டிவரும் அக்கறையும் ஊக்கமும் கண்டு சைவ மக்களாகிய நாம் பெருமை கொள்கின்றோம்.

இக் காலாண்டிதழ் மென்மேலும் சிறப்பான முதிர்ச்சியும் வளர்ச்சியும் பெற்று பல சைவப் பெரியார்களின் தரமான கட்டுரைகள், செய்திகள் பலவற்றைத் தாங்கி சைவ மக்களுக்கு தொண்டுகள் பல செய்து சாதனை படைக்க எல்லாம் வல்ல நடராஜப் பெருமான் அருள் பாலிக்க வேண்டும் என்று வேண்டி பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்.

- சின்னத்துரை தனபாலா J.P.

*மாமன்றத் துணைத் தலைவர், சமூக நலன் குழுத் தலைவர்*
*அகில இலங்கை இந்து மாமன்றம்*

## உலகெங்கும் ஒளி வீசட்டும்!

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் காலாண்டு சஞ்சிகையான "இந்து ஒளி" கடந்த பத்து வருடங்களாக இலங்கையில் ஒளி வீசிப் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது.

இச் சஞ்சிகை இலங்கையில் மாத்திரமல்ல, உலகெங்கும் ஒளிவீச எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

-வி. தேவராஜ்

*பிரதம ஆசிரியர் - வீரகேசரி*

## என்றும் பிரகாசிக்கட்டும்

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் காலாண்டிதழாக வெளிவரும் 'இந்து ஒளி' பத்து ஆண்டுகள் தொய்வின்றித் தொடர்ந்து வெளிவந்து பதினொராவது ஆண்டிலே அடியெடுத்து வைப்பது ஒருபெருஞ் சாதனையாகவே கொள்ளப்படவேண்டியதாகும்.

இந்து மாமன்றத்தின் செய்திகளை வெளிக் கொணரும் இதழாக மட்டுமல்லாது, இந்து சமயம் தொடர்பான விளக்கங்களை வழங்கிவரும் சாதனமாகவும், மாணவர்களின் கல்வி அறிவுக்கு உதவும் வகையில் பரீட்சைக்கான வழிகாட்டல் ஊடகமாகவும் விளங்கிவருகின்றது.

"இந்து ஒளி" சஞ்சிகையில் வரும் ஆக்கங்கள் என்றும் நிலையான பயனை வழங்கும் என்பதில் மறுப்பில்லை. இச் சஞ்சிகையைத் திறம்பட, தொடர்ந்து வெளியிட தகைமைசார் கட்டுரையாளர்களதும், ஆய்வாளர்களதும், சமயத்துறைசார் பெருமக்களதும், மாணவச் செல்வங்களதும் ஒத்துழைப்பு கிட்டியது. அதேபோன்று மாமன்றத்தின் பொதுச் செயலாளர் கந்தையா நீலகண்டன் அவர்களது ஆர்வம், தூண்டுதல், வழிகாட்டல் என்பன பாராட்டத்தக்கது.

"இந்து ஒளி"யில் வெளிவந்த பாடத்திட்டத்தோடு இணைந்த கட்டுரைகள் தொகுக்கப்பட்டு உயர்தர வகுப்பு மாணவர்கள் பயன் பெறத்தக்க பாடநூலாக விரைவில் வெளிவரவுள்ளமை "இந்து ஒளி"யின் தரத்திற்கு கட்டியம் கூறி நிற்கின்றதென்றால் அது மிகையல்ல.

"இந்து ஒளி" பத்தாவது ஆண்டு நிறைவு மலராக வெளிவரும் இவ்வேளையிலே 'இந்து ஒளி' ஆசிரியர் குழுவின் ஒரு உறுப்பினன் என்ற முறையிலே இந்துக்களின் இதய நாதமாக இச்சஞ்சிகை பல்லாண்டுகள் தொடர்ந்து வெளிவரவும், அதன் மூலம் பெரியவர்கள், மாணவர்கள் என சகல தரத்தினரும் பயனடையவும் எல்லோரதும் ஒத்துழைப்பையும், வரவேற்பையும் நாடி நிற்பது கடமையாகக் கொள்கின்றேன்.

நமது சமூகத்தின் அறிவுத்தேடலுக்கும், வரலாற்று ஆய்வுக்கும், பெருமைக்கும் உரியதாக 'இந்து ஒளி' நின்று நிலைத்துப் பிரகாசிக்கட்டும்.

- தர்மலிங்கம் மனோகரன்

பொதுச் செயலாளர்

*அனைத்திலங்கை இந்து வாலிபர் சங்கம்*

## இறைபணி தொடரட்டும்!

இந்து மக்களிடையே சமய அறிவையும் பக்தியினையும் வளர்க்க வேண்டும் என்ற பெருவிருப்புடன் அகில இலங்கை இந்து மாமன்றத்தினால் காலாண்டிதழாக வெளியிடப்படும் "இந்து ஒளி" பத்தாவது அகவையில் பிரவேசிப்பது குறித்து பெருமிதமடைகின்றேன். சமயக் கருத்துக்களை மக்களுக்குத் தெரியப்படுத்த "இந்து ஒளி" போன்ற முழுமையான சஞ்சிகையொன்று இன்றைய காலத்தின் தேவையாகும். பக்தி நெறியை வளர்க்க, அன்று ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சமயப் பிரசுரங்களை அச்சிட்டு வெளியிட்ட பணியைப் போலவே கடந்த பத்து வருட காலமாக அகில இலங்கை இந்து மாமன்றமும் 'இந்து ஒளி' மூலம் செய்து வருகின்றது.

சைவ ஞானத்தை வளர்ப்பதும், எதிர்கால சைவ சந்ததியைக் கட்டியெழுப்புவதும், சைவசமயம் கருவறுக்கப்படாமல் காப்பதும் நம் தலையாய கடமையென கட்டுரைகள் பிரசுரிப்பதுடன், முதல் பக்கத்தில் பஞ்ச புராணங்களுடன் தொடங்கி, இதில் வரும் கதைகளை பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு படித்துக்காட்டி அதன் தத்துவங்களை விளக்கும் வகையில் "சிறுவர் ஒளி" என்ற பகுதியையும், மாணவர்களின் பாடத்திட்டத்திற்கு அமைய பயனுள்ள விடயங்களையும், அவர்களை ஊக்குவித்து வாசிப்புப் பழக்கத்தை தூண்டவும், அவர்களின் ஆக்கங்களையும் உள்ளடக்கியதாக "மாணவர் ஒளி" என்ற பகுதியையும் வெளியிட்டு மாணவர்களை பக்தி நெறியில் அழைத்துச் செல்கிறது. இந்து மாமன்றம் அகில இலங்கை ரீதியாக என்னென்ன சேவைகளை செய்கிறார்கள் என்பதனை மாமன்றச் செய்தியாகப் பிரசுரிக்கும் ஒரு செய்திப் பத்திரிகையாகவும் விளங்குகிறது.

'இந்து ஒளி'யை இறைவன் திருவருளால் இந்த பத்து வருட காலமாக எத்தனையோ சிரமங்கள் மத்தியில் தொடர்ச்சியாக - காலாண்டு இதழாக வெளியிட அர்ப்பணிப்புடனும் தியாக சிந்தையுடனும் பாடுபடும் ஆசிரியர் குழுவினர் மற்றும் மாமன்ற முகாமைப் பேரவையினர் போற்றுதற்குரியவர்களாவர். சமய அறிவையும் பக்தியையும் பரப்பி வருகின்ற இந்து ஒளியை படிப்பதனாலேயே சித்தந் தெளியும்; செய்கையனைத்திலும் செம்மை பிறக்கும்; வித்தைகள் சேரும்; மனதிடை தத்துவம் உண்டாகும்; நெஞ்சில் சஞ்சலம் நீங்கும் - மகாகவி பாரதியாரின் இந்தப் பாடல் வரிகள் இங்கு பொருத்தமாக அமைகின்றன. இத்தகைய "இந்து ஒளி" பல்லாண்டு பல்லாண்டு காலமாக இந்து உலகம் உள்ளளவும் வாழவேண்டும், வளர வேண்டும், இறைபணி ஆற்றவேண்டும் என வாழ்த்துகிறேன்.

- கலாநிதி மு. கதிர்காமநாதன்

*தலைவர்*

*மன்னார் மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியம்*

## முழு நிலவாக ஒளிவீச வேண்டும்!

மாமன்றத்தின் இந்து சமய சஞ்சிகையான "இந்து ஒளி" தனது பத்தாண்டு நிறைவில் ஏறு நடை போடுகின்றது. வருங் காலங்களிலும் மேலும் அதிக பிரகாசத்துடன் ஒளிவீசி இந்து மக்களின் இன்னல் இருளை நீக்கும் என நம்புகின்றோம்.

வளர்பிறையாகத் தோன்றிய "இந்து ஒளி" பத்தாண்டு நிறைவிலே முழு நிலவாக ஒளிவீச வேண்டும் என உள்ளம் உவந்து வாழ்த்துகின்றோம்.

சுந்தரமாகத் தோன்றி சுடரொளி வீசிவந்த
இந்து ஒளி தசவாண்டை எய்தியதே - நந்தா
விளக்காக மேதினியில் மேலும் பிரபைகொள
விளம்பி நின்றோம் வியன் வாழ்த்து நாம்.

-கொழும்பு மகளிர் இந்து மன்றம்
*கொழும்பு - 3*

## ஒளிரட்டும் இந்து ஒளி!

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் "இந்து ஒளி" சஞ்சிகை, தனது பத்தாண்டு சேவையை பூர்த்தி செய்வது இலங்கை வாழ் இந்துக்கள் அனைவருக்கும் ஒரு இனிய நற்செய்தியாகும்.

சேவை ஒன்றே நோக்கமாக, இந்து சமய அறிவு விருத்திக்கு ஆக்கபூர்வமான பங்களிப்பை நல்கி, எமது இந்து சமூகத்துக்கு ஓர் ஊக்க சக்தியாக பாதை அமைத்து வந்துள்ளது "இந்து ஒளி". சமய அறிவு குன்றிவரும் இக்காலகட்டத்தின் தேவையுணர்ந்து கல்வியூட்டி இளம் உள்ளங்களை நெறிப்படுத்தி இந்து சமூகத்தில் தனக்கென ஓர் இடத்தினைப் பிடித்துக்கொண்டு பத்து வருடங்கள் தன் சேவையை நல்கி வருவது பாராட்டுக்குரியது.

சிறுவர்கள், மாணவர்கள், இளைஞர்கள், வளர்ந்தோர் யாவரும் பயன்பெறத்தக்கதான ஆக்கங்களை தொடர்ச்சியாக நல்கி, இந்து சமய வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்புச் செய்துவரும் இச்சஞ்சிகை தொடர்ந்து மலர்ந்து இந்து மக்களுக்கு ஒளியூட்ட இறைவன் அருள்வானாக.

ஒளிரட்டும் இந்து ஒளி - ஓங்கட்டும் இந்து நெறி
வளரட்டும் இந்து தர்மம் - வாழட்டும் இந்து சமூகம்!

- மு. பவளகாந்தன்
*தலைவர்*
*மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றம்*

## பணி தொடரட்டும் !

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் காலாண்டு சஞ்சிகையான 'இந்து ஒளி' நல்ல சமய தகவல்களையும், ஆழமான சமய உண்மைகளையும் தாங்கி சிறப்புடன் - ஒழுங்காக வெளிவந்து, இப்பொழுது பத்தாண்டுகளை நிறைவு செய்வது பாராட்டப்பட வேண்டியதாகும். இவ்வளவு நீண்ட காலமாக இச் சஞ்சிகையை வெற்றிகரமாக நடத்திவந்திருப்பது இந்து மாமன்றத்தின் மாபெரும் பணிகளுள் ஒன்றாக அமைந்திருப்பதுடன், சமயப் பெரியார்களினதும், அறிஞர்களினதும் ஒத்துழைப்பும் துணைக் காரணமாக இருந்ததையும் சிறப்பாகக் குறிப்பிடலாம். 'இந்து ஒளி' நல்ல செய்திகளை நிச்சயமாக எதிர்கால சந்ததியினருக்கு எடுத்துச் செல்லும். வாழ்க அதன் பணி!

- பிரம்மஸ்ரீ ராமச்சந்திரக்குருக்கள் பாபு சர்மா
*செயலாளர், சர்வதேச இந்துமத பீடம், கொழும்பு-13*

## வெள்ளிவிழா காணவேண்டும்

அகில இலங்கை இந்து மாமன்றத்தினால் 1996ம் ஆண்டிலிருந்து வெளியிடப்படும் "இந்து ஒளி" சஞ்சிகைக்கு பத்து ஆண்டுகள் நிறைவு பெறுவதையிட்டு, மாமன்றத்தின் அங்கத்துவ நிறுவனமான ஈழத்துத் திருநெறித் தமிழ் மன்றத்தின் சார்பில் ஆசியையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

நாட்டில் இதுவரையில் பல பத்திரிகைகள், சஞ்சிகைகள் வெளிவந்த போதிலும், அவற்றில் சில இடைநடுவில் நின்றுவிட்டன. ஆனால் இந்து மாமன்றத்தின் "இந்து ஒளி" இந்து மக்களின் ஆதரவுடன் தொடர்ச்சியாக வெளிவந்து சாதனை படைத்துள்ளது. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு பயன்படத்தக்கதும், இந்து மக்களுக்குத் தேவையானதுமான விஷயங்களையும் தாங்கி வரும் இச்சஞ்சிகையின் உற்பத்திச் செலவு அதிகமாக இருந்த போதிலும் மாமன்றம் குறைந்த விலையில் விநியோகிப்பது சிறப்பான விஷயம்.

பதினொராவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் "இந்து ஒளி" மேலும் சிறப்பான வளர்ச்சி கண்டு வெள்ளிவிழா காணவேண்டும் என உளமார வாழ்த்துகிறேன்.

- சி. கணேசன்
*செயலாளர்*
*ஈழத்துத் திருநெறித் தமிழ் மன்றம்*

## சைவத் தமிழுலகில் ஒளி வீசட்டும்

இந்து சமய மக்களுக்கென வெளியிடப்படும் பண்பாட்டு அறிவியல் சமய சஞ்சிகையாக "இந்து ஒளி" அமைகிறது. இது, இந்துசமயப் பண்பாட்டுப் பின்புலத்தை மீளவும் நினைவூட்டி உயிர்த்துடிப்புடன் வாழ்வதற்கு உதவி வருகின்றது. இந்து சமயச் சடங்குகள், கிரியைகள், விழாக்கள், விரதங்கள், தத்துவங்கள் போன்றவற்றை விளக்கி விவரிக்கும் தரமான கட்டுரைகளைக் கொண்ட சஞ்சிகையாகவும் இது உள்ளது.

"இந்து ஒளி"யில் இடம்பெறும் பஞ்சபுராணங்களும், திருமுறைசார்ந்த கருத்துக்களும் இறை தத்துவத்தை வாழ்விப்பன. முழுமுதற் பரம்பொருளான சிவபெருமானை நினைந்து இவை ஓதப்படவேண்டும் என்பது விதி. ஆகவே உலகிலே ஆதித் தொன்மைச் சமயமான இந்து சமயமும், அதன் முழுமுதற் கடவுளான சிவபெருமானைப் பற்றிய பெருமைகளுடனும் வெளிவருவது "இந்து ஒளி" சஞ்சிகை என்பது கண்கண்ட உண்மை.

ஒரு தசாப்த காலத்தை நிறைவு செய்யும் "இந்து ஒளி"யை வாழ்த்துவதுடன், சந்திர சூரியன்களுள்ள மட்டும் சைவ உலகிலும் தமிழுலகிலும் ஒளி வீசி நிற்க எல்லாம் வல்ல பார்வதி பரமேஸ்வரரது திருவடிகளை நினைந்து பிரார்த்தித்துக் கொள்கிறேன்.

திருமுறைக் கலாநிதி
கனகசபாபதி நாகேஸ்வரன் M.A

## பொலிவுடன் மலரவேண்டும்!

அகில இலங்கை இந்து மாமன்றத்தினால் தாது வருடம் கார்த்திகை மாதத்தில் (1996) ஆரம்பிக்கப்பட்டு இப்பொழுது இந்து மக்கள் மத்தியில் பேரபிமானத்தையும், பெருமதிப்பையும் பெற்றுத் திகழும் "இந்து ஒளி" வெளியீட்டுக்கு பத்தாண்டுகள் பூர்த்தியாவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறோம்.

மாணவர்களுக்கு மட்டுமல்ல அனைவருக்குமே பயனுள்ள சமய விஷயங்களைத் தாங்கி வெளிவரும் இச்சஞ்சிகை, தொடர்ந்துவரும் காலங்களிலும் சிறப்புடனும், பொலிவுடனும் மலருவதற்கு இறையருள் துணை நிற்கப் பிரார்த்திக்கிறோம்.

'இந்து ஒளி'யின் பத்தாண்டு நிறைவையொட்டி கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபையினரின் சார்பில் இதயங்கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

-எஸ். ரி. எஸ். அருளானந்தன் J.P

*தலைவர்*

*கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபை, கொழும்பு*

## சூரியனைப் போல பிரகாசிக்கட்டும்!

"இந்து ஒளி" சஞ்சிகை இந்து மக்களுக்கும், மாணவ மாணவிகளுக்கும் சமய வழிகாட்டியாக விளங்குகிறது. இதன் ஊடாக இந்து நெறி விரிவாகவும், எளிமையாகவும் போதிக்கப்படுகிறது. இந்த விஞ்ஞான உலகத்தில் சமய வழிபாடுகள் குறைந்து வரும் நிலையில், வழிபாட்டின் முக்கியத்துவத்தையும் அதற்கான வழிமுறைகளையும் சைவ மக்களுக்கு தெளிவுபடுத்தும் வகையில் "இந்து ஒளி" அமைந்திருக்கிறது.

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் காலாண்டிதழான இச் சஞ்சிகைக்கு பத்தாண்டுகள் நிறைவு பெறுவது பெருமகிழ்ச்சிக்குரியதாகும். சூரியனின் ஒளி உலகெங்கும் வேறுபாடின்றி பிரகாசத்தைத் தருகின்றது. அதுபோலவே, இறைவனுடைய ஒளியாகிய அருள் எல்லா உயிரினங்களிலும் ஒளி வீசிக்கொண்டிருக்கிறது. மாமன்றத்தின் "இந்து ஒளி" சஞ்சிகையும் எதிர் காலத்தில் சிறப்பாக ஒளி வீச வேண்டும் என இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

- செ. கமலநாதன்

*செயலாளர்*

*தேவாரப் பண்ணிசை மன்றம் கொழும்பு - 15*

## சிறப்பாக ஒளிர வேண்டும்!

அகில இலங்கை இந்து மாமன்றம் இந்து மக்களுக்காக காலாண்டிதழாக வெளியிட்டு வரும் 'இந்து ஒளி' சஞ்சிகைக்கு பத்தாண்டுகள் நிறைவுபெறுவது மிகவும் மகிழ்ச்சிக்குரிய நிகழ்வாகும். ஈழத்திருநாட்டில் மட்டுமல்ல, உலகம் முழுவதும் பரந்து வாழும் இந்து மக்கள் அனைவருக்குமே மிகவும் பயனுள்ள வகையில் அமைந்திருக்கும் 'இந்து ஒளி' சஞ்சிகை கடந்த ஒரு தசாப்தமாக காலந் தவறாமல் தொடர்ச்சியாக வெளிவந்துள்ளதன் மூலம் பெருமை பெறுகிறது. இச் சஞ்சிகை மேலும் பல தசாப்தங்களுக்கு சிறப்பாக ஒளிர வேண்டும் என உளமார வாழ்த்துகிறேன்.

- சிவநெறிப் புரவலர் செ. திருகோணப் பெருமாள்

*செயலாளர்*

*இந்து மாமன்றம், மஸ்கெலியா*

## அணையாத தீபமாக பிரகாசிக்கட்டும்!

இலங்கை வாழ் இந்து மக்களின் சேவைக்காகவே முற்று முழுதாக தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ள அகில இலங்கை இந்து மாமன்றம், சமய, சமூக, கல்விப் பணிகளின் ஊடாக ஐம்பதாண்டுகளை நிறைவுசெய்து பொன்விழா காணுவது போற்றுதற்குரிய நிகழ்வாகும். இவ்வேளையில், மாமன்றத்தின் காலாண்டிதழான 'இந்து ஒளி' சஞ்சிகையும் பத்தாண்டுகளை நிறைவுசெய்வது இன்னொரு சிறப்பான நிகழ்வாகக் குறிப்பிடலாம்.

சிறுவர்கள், மாணவர்கள், வளர்ந்தோர் என அனைவருக்கும் பொருத்தமான - பயனுள்ள பல விடயங்களை தாங்கியதாக ஒழுங்காக வெளிவந்து, இப்போது பத்தாண்டுகளை பூர்த்தி செய்திருப்பதன் ஊடாக "இந்து ஒளி" மட்டுமல்ல, இந்து மாமன்றமே பெருமை பெறுகிறது.

எதிர்காலத்திலும் "இந்து ஒளி" அணையாத தீபமாகப் பிரகாசித்து இந்து மக்கள் அனைவரினதும் மத்தியில் ஒளிபரப்பி - பயனளிக்க வேண்டும் என இறையருள் துணைகொண்டு வாழ்த்துகிறேன்.

- கலாநிதி தி. கமலநாதன்

*முன்னாள் பீடாதிபதி*

*யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய்*

## பல்லாண்டு வாழியவே!

தேனமுதத் தமிழோடு தெய்வ தத்துவங்கள் போதிக்கும்
வானமுத மஞ்சரியாம் இந்து ஒளி - ஞானமுத
ஈரைந்து அகவைதனை நிறைவு செய்யு மிந்நாளில்
பாரனைத்தும் பரந்து பல்லாண்டு வாழியவே!

- மு. சின்னையா J.P

*(மாமன்றத்தின் முன்னாள் நிர்வாக உத்தியோகத்தர்)*

மீள் நோக்கு

# பத்தாண்டு வளர்ச்சியில் இந்து ஒளி

## கடந்தகால நிகழ்வுகளும் நினைவுகளும்

அ. கனகசூரியர்

நம்ப முடியவில்லை! ஆனால் உண்மை. 'இந்து ஒளி' சஞ்சிகை தோற்றம் பெற்றது நேற்றுப்போல இருந்தாலும், காலசக்கரத்தின் சுழற்சியினால் ஒரு தசாப்த காலம் நிறைவாகிறது என்பது நம்பத்தகுந்த - உண்மைச் செய்தியாகும்.

அகில இலங்கை இந்து மாமன்றம் ஐம்பது ஆண்டுகளை நிறைவு செய்திருப்பதன் மூலம் பொன்விழா கண்டுள்ள மகிழ்ச்சிகரமான இவ்வேளையில், மாமன்றத்தின் காலாண்டு வெளியீடான 'இந்து ஒளி' சஞ்சிகை பத்தாண்டுகளை நிறைவு செய்து கொள்ளுவது இன்னொரு சிறப்பு நிகழ்வாகும். இது மாமன்றத்திற்கு மட்டுமல்ல, அனைத்து இந்துப் பெருமக்களுக்கும் மகிழ்ச்சி தருவதாக அமைந்துள்ளது என்பதை சிறப்பாகச் சொல்லலாம்.

1996ம் ஆண்டு நவம்பர் மாதத்தில், தாது வருடத்தின் ஐப்பசி - மார்கழி இதழாக சுடர்விட்டு ஒளிவீச ஆரம்பித்த "இந்து ஒளி" சஞ்சிகை, மாமன்றத்தின் காலாண்டிதழாக காலந்தவறாது - கிரமமாக வெளிவந்து இப்போது பத்தாண்டுகளை நிறைவு செய்வது ஒரு சாதனை நிகழ்வென்றே சொல்ல வேண்டும்.

கடைசியாக வெளிவந்த "இந்து ஒளி"யின் சித்திரை - ஆனி இதழ் (அமரர் வே. பாலசுப்பிரமணியம் நினைவுச் சிறப்பிதழ்) பற்றிய மதிப்பீட்டுக் குறிப்பொன்று 2006.08.20ம் திகதி தினகரன் - வார மஞ்சரியில் வெளியாகியிருந்தது. இந்த மதிப்பீட்டுக் குறிப்பின் ஓரிடத்தில் இந்து ஒளியின் சிறப்பைப்பற்றி சொல்லப்பட்டிருந்ததை இங்கு நினைவு படுத்துவது பொருத்தமானது.

"நமது நாட்டில் கலை இலக்கிய, சமய சம்பந்தமான மாதாந்த, காலாண்டு வெளியீடுகளாக பல சஞ்சிகைகள் வெளிவருகின்றன. பொருளாதார நெருக்கடி மற்றும் வேறு காரணங்களினால் சில வெளியீடுகள் இடை நடுவில் நிறுத்தப்பட்டும் உள்ளன. ஆனால், ஒரு சமய சஞ்சிகையாக - கிரமமாக வெளிவரும் பருவகால இதழ் என்ற பெருமையை அகில இலங்கை இந்து மாமன்றத்தின் காலாண்டிதழான 'இந்து ஒளி' பெறுகிறது. மாணவர்களுக்கு மட்டுமல்ல, இந்து மக்கள் அனைவருக்குமே மிகவும் பயனுள்ளதாக இச்சஞ்சிகை அமைந்திருக்கிறது என்று சொல்வதில் தவறில்லை" இவ்வாறு தினகரன் வார மஞ்சரி புகழாரம் சூட்டியிருப்பது "இந்து ஒளி"யின் வெற்றிக்கு சான்றுரைப்பதாக அமைந்துள்ளது.

"இந்து ஒளி" சஞ்சிகைக்கும் எனக்கும் இடையிலான நெருக்கத்தை இங்கு குறிப்பிடுவதில் தவறில்லை என நினைக்கிறேன். நான் 1997ம் ஆண்டு ஜூன் மாதம் முதலாம் திகதியன்று நிர்வாக உதவியாளராக மாமன்றத்துடன் இணைந்து கொண்டேன். அதற்கு ஏழு மாதங்களுக்கு முன்னரே, 'இந்து ஒளி' வெளிவரத் தொடங்கி விட்டது. அப்பொழுது மாமன்றத்தில் நிர்வாக அலுவலராக சேவையாற்றிவந்த திரு. மு. சின்னையா "இந்து ஒளி" சஞ்சிகை வெளியிடுவதில் பெரும் பங்களிப்புச் செய்து வந்தார். நான் மாமன்றத்தில் இணைந்து கொண்ட பின்னர், மாமன்றப் பொதுச் செயலாளர் திரு. கந்தையா நீலகண்டன் 'இந்து ஒளி' வெளியீட்டுக்கான பணிகளை கவனிக்கும் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்தார். எனினும், தொடர்ந்து சிலகாலம் திரு. மு. சின்னையா அவர்கள் வெளியீட்டுப் பணிகளில் எனக்கு பெருமளவு உதவி வந்தார் என்பதை மறுக்க முடியாது. "இந்து ஒளி"யில் வெளியாகும் வாழ்த்து வெண்பாவை திரு. சின்னையா அவர்களே இயற்றி வழங்கி வருகிறார் என்ற அந்தரங்கமான ஒரு தகவலை, இப்பொழுது பகிரங்கமாகவே சொல்லி வைக்க விரும்புகிறேன்.

இச்சந்தர்ப்பத்தில் இந்து ஒளியின் வளர்ச்சியின் ஊடாக அதன் வரலாற்றுப் பாதையை சிறிது நோக்குவது பொருத்தமாக விருக்கும்.

மாமன்றத்தின் பணிகளுள் ஒன்றாக, சமய சஞ்சிகை யொன்றை வெளியிடவேண்டும் என்ற மாமன்ற உறுப்பினர்களது நீண்டகால விருப்பமும், வேண்டுகோளும் திருவருள் துணை கொண்டு 1996ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் நிறைவேறியது. அதுவே "இந்து ஒளி" காலாண்டிதழின் உதயமாகும். தாது வருடம் கார்த்திகைத் திங்கள் 9ம் நாள் (24.11.1996) திருக்கார்த்திகைத் திருநாளில் முதலாவது தீபத்தின் முதலாவது சுடர் மலர்ந்தது.

"தீபம் இருளை விலக்கி எதிரேயுள்ள பொருளைக் காட்டுகிறது. அதுபோல படிப்பறிவு, அறியாமை இருளை அகற்றி உண்மைகளை உணர்த்துகிறது. கணிதம், விஞ்ஞானம், பூகோளம் என்று பலவற்றைப் படித்து அறிவை வளர்த்துக் கொள்கிறோம். கற்றது கைமண் அளவு; கல்லாதது உலகளவு என்பது பழமொழி. ஆக கைமண் அளவு அறிவுதான் நம்மிடம் உள்ளது. உலகு அளவுக்கு அறியாமை இருக்கிறது. இதை அகற்ற உலகளவு அறிவைப் பெறவேண்டும் என்பது தெளிவு."

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி அவர்கள் தீபாவளி திருநாளையொட்டி விடுத்திருந்த செய்தியில் சொல்லப் பட்டிருந்த மேற்படி அருள்வாக்கை தனது இதயத்தின் குரலாக வெளியிட்டிருந்த அன்றைய முதலாவது "இந்து ஒளி" சஞ்சிகை, "இந்து மக்களிடையே சமய அறிவை வளர்க்கவல்ல ஒளியாக - விநாயகப் பெருமானின் திருவருளுடன் - கார்த்திகைக் குமரனின் திருவவதார தினத்திலே ஏற்றப்படுகிறது" என்று குறிப்பிட்டிருந்தது போல, சிறப்பானதொரு வளர்ச்சிப் பாதையில் தடம்பதித்து, இப்பொழுது

பத்து வருடங்களை நிறைவு செய்திருப்பது வெற்றிகரமானதும், மகிழ்ச்சிகரமானதுமான விஷய மாகும்.

"இந்து ஒளி"யின் முதற்தீபத்தின் முதலாவது சுடருக்கு ஆசிச் செய்தி வழங்கியிருந்த நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் "இந்து ஒளி எனும் சஞ்சிகை ஆழமான சமய தத்துவங்களை – மக்களுக்கு விளங்கக்கூடிய கருத்துக்களை முன்வைக்க வேண்டும்" என்று சொல்லியிருந்தார். கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமிஜி ஆத்மகனானந்தா மகராஜ் அவர்கள் தனது ஆசிச் செய்தியில் "கடலைப் போன்று பரந்து கிடக்கும் இந்து சமயக் கருத்துக்களை மக்கள் அறியச் செய்யவும், அவர்களது சமய அறிவு வளரும் வகையிலும் மாமன்றத்தின் சஞ்சிகை வெளியீட்டு முயற்சி அமைய வேண்டும்" என்று தெரிவித்திருந்தார். சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் தனது வாழ்த்துச் செய்தியில் "இந்து ஒளி வெளியீடு பற்றி அறிந்து மகிழ்கிறோம். அந்த இதழ் சிறப்புற அமைய அம்பாள் துணை நிற்பாராக" எனக் குறிப்பிட்டிருந்தார்.

இந்துமதத் தலைவர்களினதும், பெரியார்களினதும் ஆசிகளுடனும், வாழ்த்துக்களுடனும் ஒளிவீசத் தொடங்கிய 'இந்து ஒளி' ஒரு தசாப்த காலப் பாதையில் பத்து தீபங்களுடன் நாற்பது சுடர்களைப் பரப்பியுள்ளது. சில வெளியீடுகள் காலத்திற்குப் பொருத்தமான வகையில், அவ்வப்போது சிறப்பிதழ்களாகவும் மலர்ந்துள்ளன.

உங்கள் கரத்தில் தவழும் இந்த இதழ் (தீபம்:10, சுடர்:04) பத்தாண்டு நிறைவையொட்டிய சிறப்பிதழாக வடிவமைக்கப் பட்டிருப்பது ஒரு சிறப்பு ஏற்பாடாகும். பத்தாண்டில் பிரகாசித்த ஒளிமுகங்கள், இந்த சிறப்பிதழின் அட்டையின் பின்பக்கத்தை அலங்கரிக்கின்றன.

இதுவரையில் சமய அறிஞர்கள், சமய ஆர்வலர்கள், ஆசிரியப் பெருமக்கள், மாணவர்கள் எனப் பலர் "இந்து ஒளி" சஞ்சிகைக்கு ஆக்கங்களை எழுதி வந்துள்ளனர். அவர்கள் ஒவ்வொருவரினதும் பெயர்களைக் குறிப்பிட வேண்டும் என விரும்பியபோதிலும், அது அதிகமான பக்கங்களை எடுத்துவிடும் என்பதால், அதனை தவிர்க்க வேண்டியதாகிவிட்டது. கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண, உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்குப் பயனுள்ள வகையிலான அவர்களது பாடத்திட்டத்திற்கு அமைவான பல கட்டுரைகளை "இந்து ஒளி" சஞ்சிகையில் பல அன்பர்கள் எழுதி வருவதையும் சிறப்பாகக் குறிப்பிட வேண்டும். "சிறுவர் ஒளி", "மாணவர் ஒளி" என்ற தலைப்புகளில் அவரவர்களுக்குப் பயனுள்ள விடயங்களை வெளியிட்டு வருவதும் சிறப்பானதொரு அம்சமாகும். "இந்து ஒளி" சஞ்சிகையின் (தீபம்:9 சுடர்:3) வெளியீட்டிலிருந்து "மங்கையர் ஒளி" என்ற புதிய அம்சமொன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சைவப் பெரியார் அமரர் ஆ. குணநாயகம் அவர்கள் "இந்து ஒளி" சஞ்சிகைக்கு ஆரம்பகாலத்தில் தொடர்ச்சியாக ஆக்கப் பங்களிப்புச் செய்து வந்திருப்பதையும் சிறப்பாகக் குறிப்பிட வேண்டும். முதலாவது இதழிலிருந்து (தீபம்: 1, சுடர்: 1) "சைவத் திருமுறைகள் வகுத்துள்ள வாழ்க்கை நெறி" என்ற தலைப்பில் தொடர் கட்டுரையொன்றை எழுத ஆரம்பித்தார். தீபம்: 2, சுடர்: 1 வரையிலான ஐந்து இதழ்களில் அவரது கட்டுரை தொடர்ந்தது. இது தவிர, "புதுமைக்கும் வழிகாட்டிகளாகப் பண்டே நின்றொளிரும் பண்பாட்டுச் சுடர்கள்" என்ற தொடரில் 1998 ஆடி – புரட்டாதி (தீபம்: 2, சுடர்: 3) இதழிலிருந்து அமரர் ஆ. குணநாயகம் அவர்கள் எழுத ஆரம்பித்த கட்டுரை, ஒவ்வொரு இதழிலும் ஒவ்வொரு சுடராக 2001 சித்திரை – ஆனி (தீபம்: 5, சுடர்: 3) இதழ்வரை மூன்றாண்டு காலம் தொடர்ந்து வெளிவந்தது. அந்த வகையில் பன்னிரண்டு தொடர் கட்டுரைகளை அவர் எழுதியிருக்கிறார்.

கடந்த சில வருடங்களாக "இந்து ஒளி" சஞ்சிகையின் ஒவ்வொரு இதழிலும் நந்திக்கொடியின் சிறப்புகளை எடுத்துக் காட்டும் வகையிலான கட்டுரைகள் வெளியாகிவருவதும் சிறப்பான விஷயமாகும். பல அறிஞர்களும், அன்பர்களும் தாங்களாகவே முன்வந்து இது சம்பந்தமான கட்டுரைகளை தந்து உதவுகிறார்கள்.

மாமன்றத்தின் கல்விப் பணிக்கும் 'இந்து ஒளி' பேருதவியாக அமைந்திருப்பதை சிறப்பாகச் சொல்லலாம். கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தர வகுப்பு மாணவர்களின் இந்து நாகரிகம் பாடத்திட்டத்திற்கு ஏற்ற வகையிலான கட்டுரைகள் "இந்து ஒளி" சஞ்சிகையில் வெளியாகிவரும் அதே வேளையில், தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்து "இந்து நாகரிகம்" என்ற பெயரில் தனியானதொரு நூலாக மாமன்றக் கல்விக் குழுவின் ஏற்பாட்டுடனும், உதவியுடனும் மாமன்றம் அவ்வப்போது வெளியிட்டு வந்துள்ளது.

"இந்து ஒளி" சஞ்சிகை நாடளாவிய ரீதியில் இந்துப் பெருமக்கள் ஏராளமானோர் கரங்களுக்கும் சென்றடைகிறது. பலர் வருடாந்த சந்தா செலுத்திப் பெற்றுக் கொள்கிறார்கள். பெரும்பாலான பாடசாலை மாணவர்கள் சஞ்சிகையை வாசித்துப் பயனடைகிறார்கள். பல்கலைக்கழகங்களின் நூலகங்களுக்கும், கலாசார இலக்கிய மன்றங்களுக்கும் இலவசமாக அனுப்பி வைக்கப்படுகிறது. மாமன்றத்தின் அங்கத்துவ சங்கமான சுங்கத் திணைக்கள இந்து ஊழியர் சங்கத்தின் விசேட ஏற்பாடாக கடந்த சில வருடங்களாக நாடளாவிய ரீதியில் 100 தமிழ்ப் பாடசாலைகளுக்கு 'இந்து ஒளி' இலவசமாக அனுப்பிவைக்கப்படுகிறது. மேற்படி இந்து ஊழியர் சங்கத்தின் சார்பில் திரு. எம். ஆர். ராஜ்மோகன் 100 பிரதிகளுக்குமுரிய வருடாந்த சந்தாப் பணத்தை மாமன்றத்திற்குச் செலுத்தி வருகிறார். வெளிநாடுகளுக்கும் 'இந்து ஒளி' சென்றடைகிறது என்பதும் மகிழ்ச்சிகரமான இன்னொரு தகவலாகும்.

மாமன்றத்தின் துணைத் தலைவரான திரு. சின்னத்துரை தனபாலா ஒவ்வொரு தடவையும் நூற்றுக்கும் மேற்பட்ட 'இந்து ஒளி' சஞ்சிகையின் பிரதிகளை கொள்வனவு செய்து, தனது நண்பர்களுக்கும் அறிமுகமானவர்களுக்கும் இலவசமாகவே வழங்கும் சிறப்பான கைங்கரியத்தைச் செய்து வருகிறார். இவர் இந்துப் பெருமக்கள் மத்தியில் நந்திக்கொடியின் மகத்துவத்தையும் தனித்துவத்தையும் அறியச் செய்தவர். இதன் ஊடாக நந்திக் கொடிகளையும் இலவசமாகவே வழங்கிவரும் மற்றுமொரு நற்பணியும் இவருடன் ஒன்றிணைந்துள்ளது.


'இந்து ஒளி' சஞ்சிகை இப்பொழுது இணையத் தளத்திலும் வெளியிடப்பட்டு வருகிறது என்பது மற்றுமொரு சிறப்புச் செய்தியாகும். மாமன்றத்தின் துணைச் செயலாளரும், முகாமைப் பேரவை உறுப்பினருமான திரு. கு. பார்த்தீபன் இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருப்பதுடன், இது விடயத்தில் தொடர்ந்தும் உதவி வருகிறார்.

"இந்து ஒளி" சஞ்சிகை மாமன்றத்தினால் வர்த்தக நோக்கம் கருதி வெளியிடப்படுவதில்லை என்பதும் பலருக்குத் தெரிந்திருந்தாலும், சிலர் அதனை அறியாமலிருக்கலாம். சஞ்சிகையொன்றின் அச்சுப்பதிப்புக்கான மொத்தச் செலவினம் நாற்பது ரூபாவுக்கு மேற்பட்டதாக இருந்த போதிலும், அதனை குறைந்த விலையிலான இருபது ரூபாவுக்கே விநியோகம் செய்யப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

ஒரு சஞ்சிகையில் உள்ளடக்கம் பெற்றிருக்கும் விடயங்களுக்கு மேலதிகமாக, அதன் வடிவமைப்பு, அச்சுப்பதிப்பு என்பவையே கவர்ச்சியையும் பெறுமதியையும் ஏற்படுத்துகிறது. அந்தவகையில் 'இந்து ஒளி'யை சிறப்பாக அச்சுப்பதித்து வழங்கும் யுனி ஆர்ட்ஸ் நிறுவனத்தினரை மாமன்றம் பெரிதும் பாராட்டுகிறது. குறிப்பாக, நிறுவன நிர்வாக அதிபர் திரு. பொன். விமலேந்திரன் அவர்களுக்கும், கணினி அச்சுப் பதிப்பில் உதவிவரும் திரு. கி. கோபிகிருஷ்ணா, செல்வி. ஜே. கிறிஸ்டினா புவனா, திருமதி ச. பிருந்தா, செல்வி. சி. சிவரஞ்சனி மற்றும் அட்டைப் படத்திற்கான கணினி வடிவமைப்பில் உதவிவரும் செல்வி இரா. சுதர்சினி (சுதா), திரு. எம். ஜெகதீஸ்வரன், ஒப்பு நோக்கில் உதவி வரும் திரு. ஜே.ரி. இராசநாயகம் ஆகியோருக்கும் மாமன்றம் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளது.

இவை அனைத்திற்கும் மேலாக, 'இந்து ஒளி' இந்துப் பெருமக்களின் மத்தியில் பேரபிமானமும் பிரபல்யமும் பெற்றிருப்பதற்கும், ஒரு தசாப்த காலத்தை சிறப்பான வளர்ச்சியுடனும் வெற்றியுடனும் நிறைவு செய்வதற்கும் காரணமாகவிருக்கும் மாமன்ற பொதுச் செயலாளரும் முகாமைத்துவமும் தரும் ஆதரவையும் ஊக்குவிப்பையும் இந்தச் சந்தர்ப்பத்தில் சிறப்பாகக் குறிப்பிட வேண்டும். அதே வேளையில், சஞ்சிகை உரிய காலங்களில் தவறாது வெளிவரவேண்டும் என்பதில் பெரும் ஆர்வமும் உறுதியும் கொண்டிருக்கும் காரணத்தினால் ஆரம்ப காலத்திலிருந்தே வெளியீடுகள் குழுவின் செயலாளர் பொறுப்பையும் மாமன்றப் பொதுச் செயலாளர் ஏற்று நடத்திவருவது இதற்கு ஆதாரமாகும்.

'இந்து ஒளி', ஒரு தசாப்தகாலத்தின் வெற்றி நிலையைத் தொடர்ந்து, அடியெடுத்து வைக்கும் அடுத்த பாதையில் – அடுத்து வரும் தசாப்த காலத்தில் மாதாந்த சஞ்சிகையாக மலர்ந்து ஒளி வீச வேண்டும் என்பதில் மாமன்றம் மிகுந்த நம்பிக்கை கொண்டிருக்கிறது. இதற்கு இந்துப் பெருமக்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் தொடர்ந்து கிடைக்கும் என எதிர்பார்க்கிறோம். இதற்காக அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானின் திருவருளை வேண்டி அனைவரும் பிரார்த்திப்போமாக.





## 'இந்து ஒளி' சிறப்புடன் ஒளி வீச இனிய நல்வாழ்த்துக்கள்!

ஐம்பது வருடங்களை நிறைவு செய்து பொன்விழா கண்டு பெருமை பெறும் அகில இலங்கை இந்து மாமன்றத்துடன், கடந்த ஒரு தசாப்த காலத்திற்கும் மேலாக நெருங்கிய உறவையும் தொடர்பையும் கொண்டிருப்பதன் மூலம் யுனி ஆர்ட்ஸ் நிறுவனம் பெருமையுடன் மகிழ்வடைகிறது.

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் காலாண்டிதழான 'இந்து ஒளி' உட்பட, மாமன்றத்தின் பெரும்பாலான வெளியீடுகள் இங்கிருந்துதான் உருவாக்கம் பெறுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

1996ம் ஆண்டு கார்த்திகை தீபத் திருநாளில் சுடர்விட்டுப் பிரகாசிக்கத் தொடங்கிய 'இந்து ஒளி' சஞ்சிகை பத்தாண்டுகளை நிறைவுசெய்துகொள்ளும் இந்த வேளையில், முதலாவது சுடரிலிருந்து நாற்பதாவது சுடர்வரையும் எதுவித தடங்கலுமின்றி காலந்தவறாது வெளிவந்த நிலையில், இந்து மாமன்றத்தின் தேவைக்கும், விருப்பத்திற்கும், திருப்திக்கும் ஏற்றவகையில் கிரமமாக 'இந்து ஒளி'யை வடிவமைத்து, அச்சுப்பதித்து வழங்கியதில் எமது நிறுவனம் முழுநிறைவடைகிறது.

'இந்து ஒளி'யின் பத்தாண்டு நிறைவுக்கும், இதன் எதிர்கால வளர்ச்சிக்கும் சிறப்புக்கும் இறையருள் துணையுடன் இனிய நல்வாழ்த்துக்களை யுனி ஆர்ட்ஸ் நிறுவனம் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றது.

-நிர்வாகத்தினர்

**யுனி ஆர்ட்ஸ் தனியார் நிறுவனம்,**
**கொழும்பு – 13**

## பல்லாண்டு பணி தொடரட்டும் !

அண்ணாமலை தீபம் என
அருள் பொழியும் இந்து ஒளி
உண்ணாமுலையாளாய் ஒளிபரப்பி
நீ வாழ்க!
ஈழமதில் மட்டுமல்ல
கடல் கடந்து உன்புகழை
தனதாக்கி கொண்டனையே
நீ வாழ்க!
இடுக்கண் வந்திடினும்
உன் பணியை விட்டிலையே
நீ வாழ்க!
கற்றவரும் மற்றவரும்
காதல் கொண்டார் உன் பணியில்
மாணவ மணிகளையும் வசீகரித்தாய்
நீ வாழ்க!
சமய சமூக கலாசார
விழுமியங்கள் உன் அடக்கம்
அநீதி கண்டு குரல் கொடுக்க
அஞ்சாத இந்து ஒளி
நீ வாழ்க!
இந்து மத தத்துவத்தை
இழித்திடும் மூடருக்கு
எறி ஈட்டி போலானாய்
நீ வாழ்க!
தச ஆண்டுதனை
விய ஆண்டில் பூர்த்தி செய்து
பல்லாண்டு உன் பணி தொடர
வாழ்த்துகின்றோம் நாம்

- க. நடராஜா ஜே.பி
*தலைவர்*
*கூழாவடி இந்து இளைஞர் மன்றம்,*
*மட்டக்களப்பு*

## கொழும்பு இந்துக்கல்லூரி, பம்பலப்பிட்டி அதிபர் திரு. த. முத்துக்குமாரசாமி அவர்களது வாழ்த்துச் செய்தி

கடந்த ஐம்பது ஆண்டுகளாக அரும்பெரும் பணிகளாற்றி வரும் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் மற்றுமொரு கல்விப் பணியாக "இந்து ஒளி" காலாண்டு சஞ்சிகை ஒளிர்கின்றது. இலங்கையில் வாழும் இந்துக்கள் மாத்திரமன்றி கடல் கடந்த நாடுகளிலும் வாழும் இந்துக்களையும் தன்னகத்தே இணைத்து இந்து சமூகத்திற்கு வழிகாட்டியாக விளங்குவதுடன், குறிப்பாக எமது இளம் சமூகத்தினரிடையே இந்து சமய அறிவையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்துவதிலும் "இந்து ஒளி" பெரிதும் உதவுகிறது.

இந்து சமயத்தின் அரிய தத்துவக் கருத்துகள், இந்து சமயக் கிரியைகள், விழாக்கள், விரதங்கள் பற்றிய விளக்கம், வாழ்க்கையிற் சைவம் என காலத்தின் தேவைக்கேற்ப பல விடயங்களையும் இவ்விதழ் தாங்கி வருவது வரவேற்கத் தக்கதாகும். சிறுவர், பாடசாலை மாணவர், பல்கலைக்கழக மாணவர், வளர்ந்தோர் என சமூகத்தின் சகல தரப்பினரும் படித்துப் பயன்பெறும் வகையில் அமைந்திருக்கும் 'இந்து ஒளி', ஆன்மீக உணர்வையும் அறிவொளியையும் பரப்பும் நோக்கோடு வெளிவரும் ஒரு சில சஞ்சிகைகளுள் ஒன்றாகக் குறிப்பிடலாம்.

'இந்து ஒளி'க்கு பத்தாண்டு நிறைவுபெறும் இத்தருணத்தில் எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன், இந்து மாமன்றத்தின் அறப்பணிகள் மேலும் சிறப்புற ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானின் பாதார விந்தங்களைப் பணிந்து நிற்கிறேன்.

## கொழும்பு விவேகானந்தா கல்லூரி பிரதி அதிபர் திரு. வி. எஸ். ராஜா அவர்களது வாழ்த்துச் செய்தி

இலங்கையில் இந்து சமய வளர்ச்சிக்கு காத்திரமான பங்களிப்பினை ஆற்றிவரும் அகில இலங்கை இந்து மாமன்றம் பொன்விழா காணும் இவ்வேளையில் இந்து மாமன்றத்தின் காலாண்டு வெளியீடான "இந்து ஒளி" பத்து ஆண்டுகளை நிறைவு செய்வது பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய நிகழ்வாகும்.

இந்து மாமன்றத்தின் சிறப்பான பணி மேலும் தொடருவதுடன், இந்து மக்கள் அனைவருக்கும் பயன்தரும் ஆரோக்கியமான விடயங்களுடன் "இந்து ஒளி" சஞ்சிகையும் சிறப்பாக மலர வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

## உலகெங்கும் பிரகாசிக்கட்டும் !

இந்து மக்களின் குரலாக – அவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் விளங்கும் அகில இலங்கை இந்து மாமன்றம், தனது இன்னொரு பணியாக "இந்து ஒளி" என்ற காலாண்டிதழையும் வெளியிட்டு வருகிறது. இச்சஞ்சிகை தனது ஒரு தசாப்த கால சேவையில், பத்து தீபங்களை ஏற்றிவைத்திருப்பதையிட்டு மிகுந்த மகிழ்ச்சியடைகிறோம்.

பலருக்குத் தெரியாத இந்து சமய உண்மைகளை "இந்து ஒளி" வெளிக்கொணர்கிறது. இந்து சமய தத்துவங்கள், சமய வரலாறுகளும், விரதங்களின் மகிமை, புராணக் கதைகள், ஆலயங்களின் சிறப்புகள் போன்ற பல விஷயங்களைத் தாங்கியதாக மலரும் "இந்து ஒளி", மனித ஒழுக்கமும் பண்பாடும் சீரழிந்து கொண்டு செல்லும் இக்காலத்தில் அவற்றைக் கட்டியெழுப்பும் தூணாக திகழ்கின்றது. பாடசாலை மாணவர்களின் எழுத்தாற்றலுக்கு வித்திடுவதோடு, பாமரர் முதல் படித்தவர் வரை பயன்பெறும் ஒரு இதழாகவே "இந்து ஒளி" தனது சேவையைச் செய்கின்றது.

இந்து சமயத்தின் கலாசாரத்தை கட்டியெழுப்பும் "இந்து ஒளி"யின் சேவை மேலும் தொடருவதுடன், உலகளாவிய ரீதியில் தனது ஒளியைப் பிரகாசிக்கச் செய்து அனைத்து மக்களிடையேயும் இருளைப் போக்கவேண்டும் எனப் பிரார்த்தித்து வாழ்த்துவதில் எல்லையில்லா உவகையடைகின்றேன்.

- கா. தில்லைநாதன்
*தலைவர் - கொழும்பு சைவமுன்னேற்றச் சங்கம்*

# அமரர் வே. பாலசுப்பிரமணியம் நினைவுப் பேருரை நிகழ்வு (16.07.2006)



மாமன்ற சமய விவகாரங்கள் குழுத் தலைவர் திரு. க. இராஜபுவனீஸ்வரன் இறைவணக்கம் செலுத்துகிறார்.
பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களுக்கு மாமன்றப் பொருளாளர் திரு. வே. கந்தசாமி பொன்னாடை போர்த்துவதையும், மாமன்ற முகாமைப் பேரவை உறுப்பினர் கலாநிதி மு. கதிர்காமநாதன் மாலை அணிவிப்பதையும் காணலாம்.



மாமன்ற சமூக நலன் குழுத் தலைவர் திரு. சின்னத்துரை தனபாலா நீர்கொழும்பு விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி மாணவர்களுக்கான இலவச அப்பியாசப் புத்தகங்களை கல்லூரி ஆசிரியரிடமும், சமூக நலன் குழுச் செயலாளர் திரு. மு. கதிர்காமநாதன் கொழும்பு, நவகம்புர ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில் சங்கத் தமிழ் (இந்து) மன்றத்தின் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான இலவச அப்பியாசப் புத்தகங்களை மன்ற உறுப்பினரிடமும் வழங்குகிறார்கள்.




நிகழ்வுக்கு வருகை தந்தவர்களுள் ஒரு பகுதியினரையும்,
மாமன்றப் பிரதித் தலைவர் திரு. மா. தவயோகராஜா தலைமையுரையாற்றுவதையும், மாமன்ற பொதுச் செயலாளர் திரு. கந்தையா நீலகண்டன் நன்றியுரையாற்றுவதையும் காணலாம்.




Unie Arts (Pvt) Ltd., Tel : 2330195